www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
செப்.04-10,1994
ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 66



## ஆளும் கட்சி-எதிர்க்கட்சி
## அடுத்த குறி ஜனாதிபதித் தேர்தல்
வெற்றி வாய்ப்பு யாருக்கு?

அரசியல்

அலசல்

## எதிர்க்கட்சிக்குள் இரு அணிகள்
## கை மாறுமா
கட்சித் தலைமை ?



லேடீஸ் ஸ்பெசல்

ரசிகன் வழங்கும் இலக்கிய நயம்

அசைய முடியாத குண்டுப்பெண் எடை குறைந்து படைத்த சாதனை!

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
எதிர்பார்ப்புக்களோடு
ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ளது
புதிய அரசு!

எதிர்வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலை
எதிர்கொள்ளவேண்டிய சவாலும்,
இனப்பிரச்சனையை தீர்த்துவைக்க
அரசியல் தீர்வினைக் காணும் பொறுப்பும்
புதிய அரசுக்கு முன்னே உள்ளன.

சவாலை சந்திப்பதில் மட்டுமே
முதல் கவனம் செலுத்துவது
கட்சி நலனோடு கலந்த அரசியல்.
பொறுப்பினை உணர்ந்து செயற்படுவது
நாட்டு நலன் பேணுவதற்கான அவசியம்.

புதிய அரசும்-பொதுஜன முன்னணியும்
எப்படி நடந்துகொள்ளப் போகின்றன
என்பதனையே-இப்போது-
முழுநாடும்-வெளியுலகும்
பெரும் கவனத்தோடு நோக்குகின்றன.

அதிகாரப்போட்டியில் வெற்றிபெற
இனவாதம் ஒரு ஆயுதமாய்
இனியுமிருக்க
முடியாது என்பதனை
சிங்கள வாக்காளர்கள் தம் தீர்ப்பினால்
மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இனவாத ஆயுதத்தை திக்கெட்டும் வீசி
வாக்கு வேட்டைக்கு சென்ற
தினேஷ் குணவர்த்தனா போன்றவர்கள்
மிகப் பரிதாபமாகத் தோற்றுப் போனார்கள்.

இது நல்ல சகுனம்-இது நல்ல தருணம்.
தென்னிலங்கை அரசியல் சக்திகள்
தேசிய ஒருமைப்பாடு என்பதை
வெறும் வாய்ப்பாட்டாக உச்சரிக்காமல்
பொறுப்புணர்ந்த செயற்பாட்டால்
ஒருமைப்பாட்டுக்கு உரமிட உரிய வேளை
இப்போது வந்திருக்கிறது.

வெறுமனே அரசியல் சதுரங்க
விளையாட்டாக அல்லாமல்
இதய சுத்தியோடு, புதிய நோக்கோடு
இனப்பிரச்சனையின் தீவிரத்தையும்
தொடரும் யுத்தம் தரும் அவலத்தையும்
அரசியல் கட்சிகள் புரிந்துகொள்ளட்டும்.

திருவாளர் பொதுஜனத்திடம்
ஏற்பட்டிருக்கும் தெளிவை
துணிச்சலோடு- தீர்வை தேடுவதற்கான
முயற்சிக்கு வழிகாட்டும் வெளிச்சமாக
ஆக்கிக்கொள்ளும் பொறுப்பு
அரசுக்கும் உண்டு;
அனைத்து அரசியல் கட்சிகளுக்குமுண்டு.

பிரபல நடிகராக இருந்தபோதும்
அரசியலில் நடிக்கத் தெரியாதவர்
அமரர் விஜயகுமாரணதுங்க.
அவரது யாழ் விஜயமும்
தமிழ் கட்சிகளோடு கொண்ட உறவும்

இன உறவுப் பாலமாக அமைந்தது.
எனினும்-அந்தப் பாலத்தை
அமைத்து முடிக்கும் முன்பாகவே
இடைநடுவில் அவர் பிரிக்கப்பட்டார்.

இப்போது அவர் துணைவியார்
திருமதி சந்திரிக்கா
பிரதமராய் பொறுப்பேற்றுள்ளதுடன்
தன்னைச் சுற்றிய
எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கியுள்ளார்.

தன் துணைவர் 'விஜய்'
அமைத்து முடிக்காமல் விட்டுச்சென்ற
இன உறவுப் பாலத்தினை
அவர் கட்டி முடிக்க வேண்டும்.

பொதுஜன முன்னணியின் மீதல்ல;
புதிய பிரதமர் மீதே
அதிக நம்பிக்கைகள் வைக்கப்படுகின்றன.
அதனால்-
கட்சி என்ற எல்லையைத் தாண்டி
பொது நோக்கில்-விரிந்த பார்வையோடு
அரசியல் தீர்வுக்கு அவரால் முடிந்தால்
வாழும் தலைமுறை மட்டுமல்ல
வருங்காலத் தலைமுறையும்
அவரை வாழ்த்தும்.
செய்வாரா புதிய பிரதமர்?
நாம் மட்டுமல்ல-
நாடே கேட்கும் கேள்வி
இன்று அதுதானே?

□□

தமிழ் வாக்காளர்கள்
ஒரு முக்கிய செய்தியினை
வடக்கு-கிழக்கில் தமது வாக்களிப்பு
மூலமாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

"ஆயுதங்கள் மீது காதல்கொண்ட
மனநோயாளர்கள் அல்ல நாம்" என்று
ஜெயகாந்தன் நாவலில் உள்ளதை
ஆளாளுக்கு மாறி மாறி பேசியபோதும்
ஆயுதங்களால் செய்யப்பட்ட
அத்துமீறல்களையும்-
அதிகார மனநோயால் நிகழ்த்திய
அட்டூழியங்களையும்
தாம் மறக்கவில்லை என்று
உறுதியாக தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

மக்களுக்கும் ஒரு காலம் வரும்
என்பதை மறந்து ஆடவேண்டாம்.
மௌனித்து நிற்கிறோம் என்பதால்
புத்தியற்றுப் போனோம் என்று
ஒருபோதும் நினைக்க வேண்டாம்.
என்னும் பாடத்தை-
கண்மூடி நின்று ஆடியவர்களுக்கு
கற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

இனிமேலாவது-
மக்களைவிடவும்-
மதியில்லா துப்பாக்கிகள் உயர்ந்தவை
என்று நினைக்கும் போக்குகள்
முற்றுப்புள்ளி வாங்கட்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## கிறிஸ்துவின் சரீரம்

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா?.." (கொரி 6.15) கிறிஸ்துவுக்குள் நம்அனைவரையும் அவயவங்களாகக் கொண்ட அமைப்பு, கிறிஸ்துவின் சரீரமாக வேதாகமத்திலே விளக்கப்பட்டுள்ளது. கர்த்தர் எங்களுக்கு வெவ்வேறு தாலந்துகளை, வரங்களை, திறமைகளை அருளி உள்ளார். எங்கள் அனைவருக்கும் திருச்சபையிலே வெவ்வேறு பொறுப்புக்களையும், தொழிற்பாடுகளையும் செயற்படுத்தும்படி பணிக்கிறார். நாம்அவற்றுக்கு செவிசாய்த்து கீழ்ப்படிகிறோமா?

"ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்." (ரோமர் 12:4,5) பிரயோசனமற்ற உறுப்பாய் எம்மில் எவருமே இல்லை. ஒவ்வொருவருடைய தொழிற்பாடும் கர்த்தரின் பணிக்கு அத்தியவசியமாக உள்ளது. எமது பங்கை, அது பெரிதோ சிறிதோ-மனம் குன்றாமல் உற்சாகத்துடனும், பொறுப்புணர்ச்சியுடனும் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை சீராக இயங்கி, கர்த்தரின் சித்தத்தை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

உடல் உறுப்புக்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இசைந்து தொழிற்படுகின்றனவோ, நாமும் ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் உதவியாக இசைந்து, ஒரே நோக்கத்திற்காக தொழிற்படுவது மிகவும் அவசியம். அப்போது தான் திருச்சபையானது கிறிஸ்துவை, உருக்குலையாமல் தெளிவாக பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும். "கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே, ஆகவே தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1கொரி 6:20)

செ.கீதாஞ்சலி.



## குடிகாரனை திருத்திய [illegible]

[illegible]மாம் அபூ ஹனிபா வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு [illegible] அவன் தினமும் மூக்குமுட்ட குடித்துவிட்டு வந்து அபூ [illegible] வந்தவாறு வம்பு தும்பான வார்த்தைகளால் திட்டுவான்.

அபூ ஹனீபாவோ அவன் கொடுக்கும் [illegible] பொறுமையோடு பொறுத்துக்கொண்டிருந்தார்கள்.

சில சமயங்களில் அபூ ஹனிபா அவன் வீட்டுக்கு சென்று [illegible] குடித்து விட்டு உளற வேண்டாம். குடிப்பது கூடாத [illegible] நீயார்? என்னைத் திருத்துவதற்கு என்று மேலும் [illegible]

ஒருநாள் இரவு இமாம் அபூ ஹனீபா வீட்டுக்கு வருகையில் அந்த [illegible] குரல் ஒலிக்கவில்லை. அமைதியான சூழ்நிலை அந்த [illegible] நிலவியது. ஆச்சரியம் அடைந்த அபூ ஹனீபா அக்கம் பக்கத்தில் [illegible] விசாரித்தார்கள். அந்த குடிகாரன் நேற்று இரவு குடித்துவிட்டு வந்து [illegible] வந்தவர்களுக்கு எல்லாம் ஏசினான். அதனால் காவல் படையினர் அவனை [illegible] சிறையில் அடைத்து[illegible] கூறினார்கள். மிக கவலை அடைந்த அபூ ஹனிபா அவன் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு சென்றார்கள். அங்குள்ள உயர் அதிகாரிகளை சந்தித்து நடந்தவற்றை விசாரித்தார்கள். அவனை விடுதலை செய்யுமாறு அவ்வதிகாரிகளை வேண்டினார்கள். அதிகாரிகளோ வந்திருப்பது இமாம் அபூ ஹனீபா என்று அறிந்து [illegible] அந்தக் குடிகாரனை உடனே விடுலை செய்தார்கள்.

குடிகாரனோ கண்ணீர் வடித்தவனாக அபூ ஹனிபாவை ஆரத் தழுவி [illegible] தொல்லைகளா நான் கொடுத்தேன். அப்படி இருந்தும் என்னை [illegible] ஹனீபா அவர்களே உங்கள் தூய இஸ்லாத்தை இன்றில் இருந்தே [illegible]" என்று கூறி [illegible] இஸ்லாமாகிவிட்டான் அந்த குடிகாரன்.

[illegible]

## கவிதைப்போட்டி இல-63

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**பூ உறங்குது**

பொல்லாத
போர்க்கரமே!
பூமிக்கும்
பாரமில்லா
'பூ'
ஒன்றின் கழுத்திலா
உன்
மரணக் கரம் விழவேண்டும்?

கே.சுகன்யா-பாண்டிருப்பு-1.

### வியக்கப்பட்டவை

**விடுதலை**

தொட்டில் உறவு
கொண்டு
தொடர்கதையா வந்தவனே
கண்ணீரில் எமைவிட்டு
கண்மூடி தூங்குவதேன்?
விட்டில் பூச்சிகள்போல
விஷேபம் நாம் கொள்ள
வினயத்தின் பிடியில் நீ
விடுதலை கேட்டாயோ

தெ.லோஜனா-கொழும்பு-15.

**புத்தி புகட்டுங்கள்**

பட்டினி யுகமோ
மூத்த தலைமுறையின்
முத்திரை...!
கொலை யுகமோ
இரண்டாவதின்
இலச்சினை..! இனி
மூன்றாவதற்கு முகவரியாய்க்
கத்தி வேண்டாம் தாயே...!
புத்தி புகட்டுங்கள்
அதுவே போதும்...!

ஷியானி நளீர்-அக்குறணை.

**பிரிவு**

ஒன்றெனவே சேர்ந்திருந்தோம்
ஒற்றுமையைக் காத்து நின்றோம்
உன்னை யமன் பிரித்துவிட்டான்.
உலகினில் நாம் தனித்துவிட்டோம்.

சுபத்திரா-பசறை.

**மரணமல்ல; உரம்**

இளைய பூக்களே..
கவலைகள் விடுங்கள்!
இது மரணமல்ல;
ஒரு உரம்!
நாளைகளை
ஆளப்போகும்..
இளைய தலைமுறைகளின்..
நம்பிக்கைப்
பெரு விருட்சங்களுக்கு!
இது-ஒரு
மரணமல்ல!
மாபெரும்
உரம்!

கோட்டைமுனை வாஹிட்
பதுளை.

## கவிதைப் போட்டி இல-66



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 10.09.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 66
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**அதுவோ?**

சரஜேவா தீவிர வாதிகள்
சரமாரி பொழிந்த குண்டால்
மரணித்த மழலை யாமோ?
மல்லாந்து கிடக்கு திங்கே?

ச.மகாலிங்கம்-வெளிமடை.

**சிந்தனை**

உஷ்...
சத்தம் போடாதீர்கள்
அடுத்த யுகத்தைப்பற்றி
அவன்
ஆழமாய்
சிந்தித்துக்கொண்டிருக்கிறான்.

ஆர்.சாந்தசீலன்-மட்டக்களப்பு.



**ஷெல் அடி**

புள்ளடி போட போட்டி இடும்
நேரத்திலே
ஷெல் அடி பட்டு சரிந்தாயோ
நண்பா?

பொன்.செல்வம்-நீர்கொழும்பு.

**மரணம் என்ன விலை?**

மனதை ரணமாக்காது
நினைவை நிதானமாக்கும்
மௌனத்தின் சிகரமான
இந்த மரணம்
என்ன விலை என்றா
ஏங்கிப் பார்க்கின்றீர்கள்?

புவனேஸ்வரி ஆறுமுகம்-பசறை.

**யார் கையில்....**

நாளைய தேசத்தை
நாம் யார் கையில்
கொடுப்பது...?

ஏ.எச்.எம்.பாஹிம்
ஹிஜ்ராபுரம்.

சின்ன வயதில்
பெரிய ஆசையோ
வாழும் உலகில்
பாதி வாழ்வில்
உலகை விட்டு
விண்ணுக்குப் போவது?

ஏ.யோகேஸ்வரி
பசறை.

**ஆயுத பலன்**

எதிர்கால நாயகர்கள்
ஏங்கி நிற்பதெதற்காக?
நவீன ரக ஆயுதத்தின்
பிரதிபலன் அதற்காக.

எஸ்.பஹுர்தீன்-புத்தளம்.

**மரண சுகம்**

சோகத்தின் சுவடுகள்
இல்லாத
இந்த சுகமான
மரணத்தை
பாவத்தின் சம்பளம்
என்று
எந்த பாவி
கூறினான்?

பன்னீர் புஸ்பா கொழும்பு-1

# வாசகர் சாலை

என் இதயம் நிறைந்த முரசே!

உன் அமிழ்தினும் மேலான விபரங்கள் என் மனதை என்றும் கவர்ந்துள்ளன. இவற்றில் அதிகம் என் மனதை கவர்ந்தது உன் அதிசய விடயங்கள். மற்றும் நீ சில வாரங்களில் என்னை எட்டாமல் சென்றுவிடுகிறாய். இதற்கு பரிகாரமாக நீ தபால் மூலம் என்னை கிட்டுவதையிட்டு நான் மனத்திருப்தி அடைகிறேன்.

உன்னை என்றும் வாழ்த்தும்,

எம்.எஸ்.எம்.பஸில்-மாத்தளை.

□□

**டுபாயிலும் முரசு**

எமது தினமுரசு வாசகரும், எனது நண்பருமான ஒருவர் டுபாய் நகரத்தில் இருந்து எனது சிறுகதையொன்றைப் பாராட்டியும் டுபாயிலும் தினமுரசினை பல தமிழ், முஸ்லிம் அன்பர்கள் வாஞ்சையோடு வாங்கிப் படிப்பதனையும் கூறி கடிதம் எழுதியிருக்கிறார். எனது மனமெல்லாம் மகிழ்ச்சி- எங்கள் முரசைப் பற்றிய பெருமிதம்.

ஹுரீரா அனஸ்-அக்குறணை.

□□

வாரந்தோறும் உன்னை வாசிக்காவிடில் எங்கள் கண்களுக்கு உறக்கமில்லை. உன் அபிமானியாக இருப்பதில் நாங்கள் பெருமையடை கிறோம். வளர்க உன் சேவை! வாழ்க தினமுரசின் திறமை.

தினமுரசு அபிமானிகள்- எம்.பி. சுப்ரமணியம், மீனா, தர்ஷினி, கனகராஜா, கோமதி, சாமிளா-

உனுகலை எஸ்டேட் மே/பி.

□□

அன்புக் காதலி தினமுரசே என்றும் என் இனிய வந்தனங்கள். நீ தாங்கிவரும் அம்சங்கள் யாவும் என்னை வியக்க வைக்கிறது. அல்ல சிந்திக்க வைக்கிறது. நீ தாங்கி வரும் ஒவ்வொரு அம்சங்கள் தொடர என் இனிய வாழ்த்துக்கள்.

ஜெ.எம்.ரெஜினா-புத்தளம்.

புத்தம் புது மலரே!

நீ தாங்கிவரும் அனைத்து அம்சங்களும் சுவையிலும் சுவை. குறிப்பாக 'கொலை விழும் நேரம்' தொடர்கதை என்னைப்போன்று பல எண்ணற்ற நேயர்களை வியப்பில் ஆழ்த்துகிறது. உன்னுடைய ஆக்கங்கள் மென்மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துகிறேன்.

கோகிலா பழனி-நமுனுகுல.

□□



அன்பின் தினமுரசே,

உன் ஆக்கங்கள்தான் நவரசமாய் இருக்க அதிலும் கவிதைப்போட்டி, தேன்கிண்ணம், இலக்கிய நயம், என்பவற்றில் நீ ஒருபடி மேலாக இருக்கிறாய்.

ஆர்.ஏ.இரதிக்குமார்-பூண்டுலோயா.

□□

வாரந்தோறும் உன் வரவை நல்வரவாக எதிர்பார்க்கும் நானும் எனது அன்பின் நண்பிகளும், உன் மேலான ஆக்கங்களான தகவல் பெட்டி, நில்! கவனி!! முன்னேறு!!!, தேன் கிண்ணம், வாரபலன், சினிவிசிட் போன்றவைகளை நாள் தவறாது (வாரம்) வாசித்து இன்புறுகின்றோம்.

ஹசீனா ஹரீஸ்-கல்ஹின்னை.

□□

என் இனிய தேன் முரசே,

வசந்தங்களை அள்ளித்தரும் உன் வண்ண இதழ்களை வாரா வாரம் வாசிப்பதில் வஞ்சி எனக்குத் தணியாத ஆசை. தித்திக்கும் செந்தமிழில் தரும் உன் செய்திகளும் தேன்கிண்ணம், கதைகள், கொலை விழும் நேரம், பாப்பா முரசு ஆகியன என் மனதைக் கவர்ந்தன. இதேபோலவே உன் சேவை தொடர்ந்துகொண்டேயிருக்க என் பலகோடி ஆசைகள்.

சித்ரா மாணிக்கம்-மாத்தளை.

□□

டியர் முரசே!

வாரம் ஒருமுறை வளங்கி வரும் தினமுரசே! நீ தாங்கி வரும் அம்சங்களில் ஆன்மீகம் முதல் மகாபாரதம் வரை அனைத்துமே இனிது. அதில் கொலை விழும் நேரம் சூப்பர். ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள்.

ஏ.எச்.எம்.முபாறக்-மீராவோடை-05.

□□

தினமுரசே,

உனக்கு ஆயிரக்கணக்கான இரசிகைகள் இருக்கின்றனர். அதில் நானும் ஒருத்தி. வாரந்தோறும் உன் வருகையை எதிர்பார்த்து இருப்பேன். நீ வராமல் இருக்கும் நொடிப் பொழுதில் எங்கள் மனசு வேதனை அடைவதை நீ அறியாய். நீ தரும் ஆக்கம் மிகவும் அருமை. உனது பணி தொடர எனது நல்வாசிகள்.

ஹாறூனா கரீம்-அநாதபுரம்.

□□

அன்பின் முரசே!

உன் ஆக்கங்கள் யாவும் மிக இனிமையானவை. என் உள்ளத்தை கொள்ளை கொள்ளக்கூடிய அளவுக்கு பாப்பாமுரசு இனிமையானது. உன் புகழ் ஓங்கிட என் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.

எம்.எஸ்.எம்.நஸீர்-புத்தளம்.

□□

தித்திக்கும் அன்பு முரசே நீ வாரா வாரம் சுமந்து வரும் ஆக்கங்களும் கொலை விழும் நேரம் தேன் கிண்ணம், லேடீஸ் ஸ்பெசல், விடுகதைகளும்-விடைகளும் ஆகப்பிரமாதம். உன் பணிகள் தொடர என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஜெஸீமாஹமீட்-வாழைச்சேனை-05.

□□

எனதன்பின் முரசே நீ வாரா வாரம் எனது இல்லத்திற்கு கொண்டு வரும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றேன். உன்னை நான் ஒரு முத்தமிழாக எண்ணி மாங்கனி போல் பறித்து முச்சுவையோடு சுவைத்து என் மனதை கவரும் விதத்தில் என்னை மகிழ்விக்கும் முரசே, நீ வாரம் தோறும் என் இல்லத்தோரை மகிழ்விக்க வருவாய் என எண்ணி எண்ணி உண்மை ஆவலோடு அழைக்கின்றேன்.

இ.கிருஷ்ணவதி-மாத்தளை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# ஜனாதிபதித் தேர்தல் நடப்பது உறுதி!

# எதிரணிக்குள் இரு அணிகள்

## கைவிட்டுப் போகுமா கட்சித் தலைமை?

(அரசியல் நிருபர்)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகளையடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் பிடி தளர்ந்து வருவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுவதைக் கட்சிக்குள் ஒரு சாரார் விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரை ஏகமனதாகத் தெரிந்தெடுக்கத் தவறியமையினால் கட்சிக்குள் இரு பிரிவுகள் தோன்றியுள்ளன. போட்டியை தவிர்க்கும் வகையில் கட்சித் தலைவரான ஜனாதிபதியால் தனது செல்வாக்கை பிரயோகிக்க முடியாமல் போய்விட்டது.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையைக் கைப்பற்ற திரு.காமினி திசநாயக்கா குறிவைத்து முன்னேறி வருகிறார்.

ஆயினும் அவரால் உடனடியாக பரந்துபட்ட மக்கள் செல்வாக்கைப் பெறமுடியாது.

எதிர்க்கட்சி தலைவராக மாறியுள்ள காமினி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று கூறப்படுவதில் உண்மையில்லை.

ஏனெனில்- ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டு தோல்வியடைவதை அவர் விரும்பமாட்டார்.

தற்போதைய ஜனாதிபதியே தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வியடைந்தால் கட்சியைக் காப்பாற்றும் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தேடுவார்கள். அப்போது தன்னால்தான் அதைச் செய்யமுடியும் என்று தோற்றம் காட்டவே காமினி நினைக்கிறார். அதன்மூலம் கட்சிக்குள் தனக்கிருக்கும் எதிர்ப்புக்களையும் இல்லாதொழிக்க முடியும் என்று அவர் நம்புகிறார்.

ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுக்குக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என்று திரு.காமினி திசநாயக்கா கூறியுள்ளார். அவரது கூற்றை ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் காமினி விஜயசேகரவும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஆனால்- ஐ.தே.கட்சியின் ஆதரவோடு பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முடிவுகாண பொ.ஐ. முன்னணி விரும்பவில்லை என்று தெரிகிறது.

இதற்கு இரு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று: பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் ஆதரவு பெற்று, உயர் நீதிமன்றம் சென்றுவந்து அரசியலமைப்பை மாற்றுவதெல்லாம் காலத்தை இழுத்தடிக்கும். செப்டம்பர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரவேண்டியிருக்கிறது. எனவே அதற்குள் சட்ட பிரச்சனைகளை தீர்த்துவர கால அவகாசம் போதாது.

இரண்டு: பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை தனித்து பெறமுடியாத போதும், ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறுவது மூலம் தமது மக்கள் செல்வாக்கை வெளிப்படுத்தும் வாய்ப்பு ஏற்படும்.

ஆக- ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவது உறுதியாகிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாவிட்டால் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொள்வார்கள் என்று பொ.ஐ.முன்னணி முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

ஜனாதிபதி முறை மூலமாக பதவிக்கு வருவதைவிட, பாராளுமன்ற முறைமூலமே இனி ஆட்சிக்கு வருவது சுலபம் என்பதே எதிர்க்கட்சித் தலைவர் திரு.காமினி திசநாயக்காவின் எண்ணம் என்று கூறப்படுகிறது.

அதற்காக அவர் காத்திருக்கத் தயார். ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக்கு தோல்வி வந்தாலும் பல்லைக்கடித்துக்கொண்டு ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் காமினி பொறுத்திருப்பார் என்கிறார்கள் அவரை அறிந்தவர்கள்.

## ஜனாதிபதித் தேர்தலில் தொண்டா யார் பக்கம்?

## "வேட்பு மனுத்தாக்கல்வரை இ.தொ.கா. பொறுத்திருக்கும்"

## சந்திரிக்காவை ஆதரிக்க இந்தியா கட்டளையா?

(அலுவலக நிருபர்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதுவரை முடிவு செய்யவில்லை.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்னரே யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்யப்போவதாக அமைச்சர் தொண்டமான் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இ.தொ.காவின் மௌனம் ஐ.தே.கட்சிக்கு இம்முறை ஆதரவளிக்க அவர்கள் தயாராக இல்லையோ என்றும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை எதிர்த்து செயற்படும் எண்ணம் இ.தொ.காவுக்கு தற்போது இல்லை என்றே தெரிகிறது.

பொதுவான பிரச்சனைகளில் பொ.ஐ. முன்னணிக்கு இ.தொ.கா. ஆதரவளிக்கும் என்றும் நம்பப்படுகிறது.

ஆயினும் பொ.ஐ.முன்னணியில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு.சந்திரசேகரன் இராஜாங்க அமைச்சராக இருப்பதும், "மலையாக மக்கள் இனி ஒரு தனிக் கட்சியை நம்பியிருக்கத் தேவையில்லை" என்று சந்திரசேகரன் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையும், அரசாங்க தரப்பினர் அதனை தமது மேசைகளில் தட்டி ஆரவாரித்து வரவேற்றமையும் இ.தொ.கா. தரப்பில் முகச்சுளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொ.ஐ.முன்னணியில் உள்ள இ.தொ.காவின் போட்டியாளர் திரு.செல்லச்சாமி தேர்தலில் தோல்வியடைந்துள்ளதால் அவர் பற்றிய பிரச்சனை இ.தொ.காவுக்கு இல்லாமல் போய்விட்டது.

அதேசமயம் திரு.செல்லச்சாமி பிரதமரது கண்டி விஜயத்தின் போது அவரோடு காணப்பட்டார்.

இ.தொ.காவும் பொ.ஐ.முன்னணியும் உறவு கொள்ளும் நிலை ஏற்பட்டால் திரு.சந்திரசேகரன் - திரு.செல்லச்சாமி ஆகியோரது நிலை என்னவாகும் என்பது கேள்விக்குறியே.

அரசாங்கத்தோடு விரோதமாக நடந்து கொள்ள தொண்டா விரும்பவில்லை. பிரதமரது இனப்பிரச்சனை அணுகுமுறையை அவர் வரவேற்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். எனவே ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியை ஆதரிப்பதில் இருந்து அவர் விலகி நிற்கக் கூடும் என்று பரவாக நம்பப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் சமீபத்திய பேட்டியொன்றில், பொதுஜன முன்னணிக்கு ஆதரவளிக்கக்கூடிய நிலைமையினை கோடிட்டுக் காட்டும் விதமாக திரு. தொண்டமான் கூறியுள்ள கருத்தும் கவனிக்கத்தக்கது.

"இ.தொ.கா. ஒரு அரசியல் கட்சியல்ல. அரசியல் தொழிற்சங்கம். தொழிற்சங்கமாக இருப்பதால் எக்கட்சி ஆட்சி அமைக்கிறதோ அக் கட்சியுடன் நல்லுறவுகளை வைத்திருப்போம்" என்று திரு.தொண்டமான் அப் பேட்டியில் கூறியுள்ளார்.

ஐ.தே.கட்சியுடன் ஏற்கனவே செய்துள்ள உடன்பாட்டின்படி பாராளுமன்றத்தில் இ.தொ.கா. தனித்துவத்துடன் இயங்கும் என்றும் திரு.தொண்டா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய அரசு திரு. தொண்டாவை பொ.ஐ.முன்னணியை ஆதரிக்குமாறு கூறியுள்ளதாகவும் ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

ஆனால் தொண்டா அதனை மறுத்துள்ளார்.

நிலைமைகளைப் பார்க்கும் போது பொ.ஐ.முன்னணி இ.தொ.காவுடன் கையாளும் அணுகுமுறையைப் பொறுத்து அதற்கு ஆதரவளிக்க இ.தொ.கா. முன் வரக்கூடும் என்று நம்பலாம்.

இதன்மூலம் தனது நீண்டகால பாரம்பரிய கூட்டாளியான ஐ.தே.கட்சியோடு இ.தொ.கா. கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டி ஏற்படலாம்.

அவ்வாறு இ.தொ.கா. பொ.ஐ. முன்னணியை ஆதரித்தால் கூட ஐ.தே.கட்சியில் உள்ள காமினி அணி விட்டுப்பிடிக்கும் அணுகுமுறையை மேற்கொள்ளும். இ.தொ.காவோடு விரோத போக்கை கடைப்பிடிக்காது என்று தெரிகிறது.

## ஜனாதிபதி வேட்பாளர் அநுரா?

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக திரு.அநுரா பண்டாரநாயக்காவை நிறுத்தக்கூடும் என்றொரு செய்தி அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா போட்டியிட முன்வராவிட்டால் திரு.காமினி திசநாயக்காவோ, திரு.ரணில் விக்கிரமசிங்காவோ போட்டியிட களத்தில் குதிக்க விரும்பமாட்டார்கள்.

எனவே- சபாநாயகருக்கான வேட்பாளராக நிறுத்தப்பட்ட திரு. அநுரா பண்டாரநாயக்காவையே ஜனாதிபதித் தேர்தலிலும் நிறுத்தக்கூடும் என்று பேசப்படுகிறது. அரசியல் ஜோக்காகவும் அடிபடும் இச்செய்தி உண்மையானால் கூட ஆச்சரியமில்லை. அரசியலில் எதுவும் நடக்கலாம்!

## வெற்றிக் களி தீர....

வவுனியாவில் ஓடும் பேருந்துக்குள் இருந்து இழுத்தெடுக்கப்பட்டார் அந்த இளைஞர்.

பயணிகள் திகைத்துப்போய் பார்த்துக் கொண்டிருக்க அந்த இளைஞரும் அவரை வெளியே இழுத்தவரும் கட்டிப்புரண்டனர் தெருவில்.

அந்த இளைஞருக்கு சரமாரியான அடிகள். எங்கிருந்தோ ஓடிவந்த சிலர் "விடு மச்சான்" என்று தடுத்தாட் கொள்ள.

அடி கொடுத்தவர் தேர்தலில் நின்று தோல்வியடைந்த ஒரு அமைப்பின் பெயரைச் சொல்லி "இனி அவர்கள் இங்கே வாலாட்ட முடியாது" என்று பிரகடனம் செய்தார். அடி வாங்கிய தோல்வியடைந்த அமைப்பின் உறுப்பினர் பரிதாபமாக முழித்துக் கொண்டிருந்தார்.

## தோல்வியால் கோபம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக போட்டியிட்ட நிமலன் சவுந்தரநாயகம் என்பவர் தோல்வியடைந்திருந்தார்.

தோல்வி அடைந்த போதும் தனக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்து பிரசுரம் ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதில் தலைமையின் சதியால் தனது வெற்றி தடுக்கப்பட்டதாகவும், தலைமைக்கு எதிராக செயற்படப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

அவரது பிரசுரத்தால் அவருக்கு வாக்களித்த சிலரே அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அவர் ஏற்கனவே ஒரு இயக்கத்தோடு தொடர்பு வைத்திருந்ததும் தோல்விக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

## புலிகள் புதிதாக எதுவும் கூறவில்லை

## புதிய அரசுக்கு வரவேற்பும் இல்லை-எதிர்ப்பும் இல்லை!

யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகள் விடுக்கும் செய்தியென்ன என்று அறிவதில் தலைநகர் அரசியல் வட்டாரங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

பத்திரிகைகள்-மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு செய்தி நிறுவனங்கள் என்பவையும் புலிகள் புதிய அரசாங்கம் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிவதில் தீவிரம் காட்டுகின்றன.

ஆனால்-இதுவரை யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமான கருத்து எதனையும் புதிய அரசாங்கம் தொடர்பாக வெளியிடவில்லை.

எனினும்-ஒரு வெளிநாட்டு செய்தி நிறுவனம் மக்கள் கூறியதாக மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டிருந்தது. அதில் நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் தயார் என்று கூறியதாகவும், பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என்று கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால்- இச் செய்தி புலிகள் ஏற்கனவே கூறிய நிலைப்பாடாகும். முன்னைய அரசாங்கத்தோடு பேசுவது தொடர்பாக புலிகளால் கூறப்பட்ட கருத்துக்களே அவை.

புதிய அரசாங்கத்தை வரவேற்றோ-நம்பிக்கை தெரிவித்தோ யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளின் தலைமை எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை.

ஆனால்-ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கருத்துக்களை புலிகளது பிரசார சாதனங்கள் யாழில் வெளியிட்டு வருகின்றன.

புதிய அரசாங்கத்தை கண்டித்து யாழில் உள்ள புலிகளது பிரசார சாதனங்களில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திரிக்காவே ஜனாதிபதி வேட்பாளர்

பொது ஜன முன்னணியின் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிக்காவே போட்டியிடுவார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்று தனது அரசியல் பலத்தினை நிரூபிக்க பிரதமர் நினைப்பதாக அவரோடு தொடர்புடைய வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என்று முன்னர் கூறப்பட்டபோதும் இப்போது அந்த முடிவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித் தலைவருக்கு சட்டப் பிரச்சனை?

## தலையிடி கொடுக்கும் கோஷ்டிப் பூசல்

கடந்த புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவராக காமினி திசாநாயக்கா மிகக் குறைந்த மேலதிக 45-42 வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான சில சட்ட வல்லுநர்கள் இத்தேர்தலை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதனால் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்குள் குழப்ப நிலை உருவாகியிருக்கிறது.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் மேற்பார்வையில் நடைபெற்ற இத் தேர்தலில் ஐ.தே.கட்சியும் அதன் தோழமைக் கட்சியான இ.தொ.காவும் மட்டுமே கலந்து கொண்டன. ஆகவே இது உண்மையில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் என்று சொல்வதற்கில்லை என்றும் ஐ.தே.கட்சியின் பா.உக்களின் கூட்டம் என்று மட்டுமே கூறமுடியும் என்று சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஐ.தே.கட்சிக் கூட்டமாக இருந்தபோதிலும் இக்கட்சியைச் சாராத சில பா.உக்கள் வாக்களித்துள்ளனர் என்று ஒரு சட்ட நிபுணர் கூறினார்.

ஐ.தே.கட்சியின் உறுப்பினரல்லாத போதும் அக்கட்சியுடன் போட்டி தவிர்ப்பு ஏற்படுத்திக்கொண்டு அதே கட்சிச் சின்னத்தில் போட்டியிட்ட DUNF கட்சியைச் சேர்ந்த சிலரும் வாக்களித்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதே DUNF கட்சியைச் சேர்ந்த 4 பேராவது இத்தேர்தலில் வாக்களித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

இ.தொ.கா, ஐ.தே.கட்சியுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்துகொண்ட போதிலும் ஐ.தே.கட்சி பாராளுமன்றக் குழுவில் தாங்கள் பங்கேற்கவில்லை என்பதனைக் குறிப்பிட்டு வாக்களிக்க மறுத்துவிட்டது.

எஸ்.எல்.எம்.பியைச் சேர்ந்த அதன் தலைவர் ஒசி அபேகுணசேகர ஐ.தே. கட்சியைச் சேராத போதிலும் வாக்களித்தார். அவர் விக்கிரமசிங்காவுக்கு வாக்களித்தார் என்று நம்பப்பட்ட போதிலும் DUNFபைச் சேர்ந்த 4 பா.உக்கள் திரு.திசநாயக்காவுக்கு வாக்களித்துள்ளனர் என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்தனர். இதனால் தான் அவர் 3 வாக்குகளால் வெல்ல முடிந்தது.

## தேசியப் பட்டியலில் புறக்கணிப்பு அம்பாறை மாவட்டத்தில் அதிருப்தி!

(அம்பாறை அரசியல் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் வாக்குகளால் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த மூவரை எம்.பிக்களாகப் பெற்ற ஐ.தே.கட்சி, இதற்குக் கைமாறாக தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த இந்த மாவட்ட முஸ்லிம் ஒருவரையாவது எம்.பியாக நியமிக்காதது, இந்த மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புறக்கணிப்பின் எதிரொலியாக எதிர்காலத்தில் ஐ.தே.கட்சிக்கு முஸ்லிம் கிராமங்களில் இருந்து வந்த சிறிய ஆதரவுகூட முற்றாக மங்கிவிடுமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இதுதான் இல்லை, இங்கு தமிழர்களுக்கென்று ஒரு பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விட்டதே, ஒரு தமிழரையாவது நியமித்திருக்கலாமே ஐ.தே.க.என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

# பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய எதிரணி!

## பொருத்தமற்ற நேரத்தில் நடந்த போட்டி

சபாநாயகர் தெரிவின்போது ஐக்கிய தேசியக் கட்சி தனது பலத்தைப் பரிசீலித்துப் பார்க்க களத்தில் இறக்கிய வேட்பாளர் அநுரா பண்டாரநாயக்கா.

போட்டி உடனே அவசியமில்லை என்றே ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிகள் சிலர் அபிப்பிராயப்பட்டதாக கூறப்படுகிறது.

பாராளுமன்றம் கூடுவதற்கு முதல் நாளன்று (24.8.94) நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் சபாநாயகர் பதவிக்கு போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டது.

முன்னாள் சட்ட அமைச்சர் திரு.சொக்ஸி உட்பட சிலர் அந்த முடிவை விரும்பவில்லையாம்.

இதேவேளை ஒ.சி.அபயகுணசேகர புளொட் அமைப்பினர் ஐ.தே.கட்சிக்கே வாக்களிப்பார்கள் என்று கூறினாராம். அதை தனது இரத்தத்தில் எழுதித்தரவும் தயார் என்றும் அவர் கூறியதாக கூறப்படுகிறது.

அதேபோல் ஈ.பி.டி.பியும் தமது சபாநாயக வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள் என்று ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சிலர் கூறினார்களாம்.

இத்தனைக்கும் ஈ.பி.டி.பி, மற்றும் புளொட் அமைப்புக்களோடு ஐ.தே.கட்சி சபாநாயகர் தெரிவில் தாமும் போட்டியிடுவது பற்றி கலந்தாலோசிக்க முன்வரவில்லை.

புதிய ஆட்சி பதவிக்கு வந்த சூட்டோடு சூடாக பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவில் போட்டியிட்டு தோல்வியடைவது கட்சிக்கு மேலும் அவமானத்தை ஏற்படுத்தும் என்பது போட்டியை விரும்பாத ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சிலரது வாதம்.

அது சரிதான் என்பதை 25.08.94 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு காட்டிவிட்டது.

சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு முடிந்ததும், திரு.கே.பி. இரத்நாயக்கா 127 வாக்குகளும், திரு.அநுரா பண்டாரநாயக்கா 93 வாக்குகளும் பெற்றதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் அறிவித்தார்.

உடனே ஆளும் கட்சி அங்கத்தவர்கள் தமது மேசைகளில் தட்டி (பிரதமர் உட்பட) மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

உடனே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் எழுந்து, "எத்தனை வாக்குகள் மேலதிகமாக கிடைத்துள்ளன?" என்று கேட்டார்.

"34 வாக்குகள்" என்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் கூறியவுடன், எதிர்கட்சி வரிசையைப் பார்த்து புன்னகைத்தபடி அஷ்ரப் மேசையில் தட்ட, தொடர்ந்து சகல ஆளும்கட்சி பா.உ.க்களும் மேசையில் தட்டி ஆரவாரித்தனர்.

சபாநாயகருக்கான வாக்கெடுப்பில் தோல்வி கண்டபோதும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன்போல உபசபாநாயகர், குழுக்களின் தலைவர் பதவிகளுக்கும் ஐ.தே.கட்சியினர் போட்டியிட்டு தோல்வி கண்டனர்.

ஆளும் கட்சி தனது பெரும்பான்மை பலத்தை வெளிப்படுத்த எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியே பொல்லைத் தூக்கிக்கொடுத்து தனது தலையில் அடிவாங்கிக்கொண்டது.

## அலட்சியப் போக்கால் நீரின்றி அவதி!

(திருமலை நிருபர்)

குழாய் நீரையே நம்பி வாழும் உவர்மலைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நீர் வழங்கல் வடிகால் சபையினரின் அலட்சியப் போக்கினால் அடிக்கடி குடிக்கக்கூட நீர் கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர்.

உவர்மலையைச் சேர்ந்த ஆசிரியர் சதுக்கக் குடியிருப்பாளர்களே இக் கஷ்டத்தைக் கூடுதலாக அனுபவிக்கிறார்கள்.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நீர் தடைப்படுதலும் இத்தடை இரண்டு மூன்று நாட்களுக்கு நீடிப்பதும் சகஜமான ஒன்றாகி விட்டது.

நேரிலும், கடித மூலமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்ட தோடல்லாமல் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையில் முறையிட்டும் எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லையாம். இவ்விடயத்தில் தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கோரி இப்பகுதி மக்களால் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினர் கவனிப்பாரா?

கடந்தகால வன்செயல் காரணமாக 1991ம் ஆண்டு தொடக்கம் கிழக்கிலங்கையில், திருகோணமலை மாவட்டத்தில், பிரசித்திபெற்ற சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் நித்தியபூசை எதுவுமின்றி பூட்டப்பட்டிருக்கின்றது.

ஆலயத்தைச் சுற்றி படையினர் முகாமிட்டிருப்பதினால் ஆலயத்திற்கு குருக்கள்மார் பூசை செய்ய வருகிறார்களில்லை. இதுபற்றி பல தடவை இந்து கலாசார அமைச்சுக்கு அறிவித்தும் ஆவன செய்யப்படவில்லை.


வணக்கஸ்தலங்களுக்கு பக்கத்திலுள்ள படை முகாம்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றன. இப்பிரதேசத்திலும் அது நடைபெறுகிறது. ஆனால் சம்பூர் முகாம் மட்டும் இடம்மாறவில்லை. இதனால் பூசை செய்ய குருக்கள்மார், பரிபாலகர்கள் வர அஞ்சுகிறார்கள். இதனால் ஆலய வருமானம் பாதிப்படைகிறது. எனவே, தினமுரசு மூலமாக இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்து ஆலயம் நித்திய பூசைக்காக திறக்கப்படுவதற்கு விரைவாக ஆவன செய்ய இச் செய்தி உதவும் என எதிர்பார்க்கிறோம்.

மேலும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களாவது இதில் கூடிய கவனமெடுத்து விரைவில் ஆலயம் திறக்கப்பட வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவார்கள் என்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எவ்வளவோ தீர்க்கப்படாத பிரச்சனைகளை 'தினமுரசு' வாயிலாக தீர்த்து பொது மக்களின் குறைபாடுகள் நிவர்த்திக்கப்படுகின்றன. இவ்விடயத்திலும் வெற்றிபெற தினமுரசு ஆசிரியருக்கும் ஊழியர்களுக்கும் எல்லாம் வல்ல அம்பாள் அருள் புரிவாளாக.

ஆர்.என்.ராஜ்-மூதூர்.

## போக்குவரத்துச் சபையில் புதிய தமிழ்!



ஒதுக்கிடு செய்யபட்ட ஒவ்வொரு ஆசனத்துக்கும் நிருவ...
-/50 சதம் செலுத்தபபட வேண்டும்

ஆசனங்களை முனகூட்டியே ஒதுககிடு செய்வதற்கான கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. எனினும் பயணிமளபாருவா ஆசனம ஒடுக்கிடு செய்யபட்ட நாளனறு பயணஞ் செய்ப முடியாவிடின், இப்பற்று சசீட்டு வழக்கிய திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எந்த நாளிலாவது பயணஞ்செயலதறகு ஆசனம் ஒதுக்கிடு செய்ய அனுமதிக்கப்படுவா... ஆனல். அட்டலணையிடபட்ட பயணம் புறப்படும் நோததிற்கு ஆக... குறைந்தது 24 மணித்தியாலங்களுக்கு முனைதாக அவர் ஒதுக்கிடு செய்... சாலைககு அல்லது சீட்டு பெற்ற அலுவல் கத்திற்கு அறிவித்தல் கொடு... த வேணடும் அறிவிக்கும் போது இப்பற்றுசசீட்டைக காடடி இரத்து செய்த்தறகன புறக்குறிபபை -இப்பற்றுச சீடடில் பெற்றுககொள... வேண்டும்.

ஒதுக்கிடு செய்யப்பபட்ட ஆசனங்களில் அட்டவணையிடப்பட்ட ... புறப்படும் நேரத்திறகு அகக் குறைந்தது 10 நிமிடங்கள் முனைதாக இருக்கவேண்டும்.

பற்றுச்சீடடை நடாத்துநரிடம் கொடுத்து சரியான கட்...

நான் கடந்தவாரம் கொழும்பு செல்வதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை-கல்முனை காரியாலயத்தில் முன்கூட்டியே ஆசனப் பதிவு செய்யச் சென்றிருந் தேன். அங்கு அவர்கள் ஒரு ஆசனத்தைப் பதிவு செய்து பற்றுச்சீட்டைக் கொடுத்தார்கள்.

அதை இதனுடன் இணைத்துள்ளேன். அப்பற்றுச்சீட்டின் அடிப்பாகத்தில் நிபந்தனைகளுக்கு மறுபக்கம் பார்க்க என்று அச்சிடப்பட்டு இருந்தது. அப்படி என்ன நிபந்தனைகள் இருக்கும் என்ற ஆவலில் மறுபக்கம் புரட்டிப் பார்த்தேன். அதை எத்தனை முறை வாசித்தும் கூட அதில் குறிப்பிடப்பட்டுள்ளதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதை ஊகிக்க மட்டுமே முடிந்தது. உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா என்று பாருங்கள்.

இதில் மொத்தம் 130 தமிழ்ச் சொற்கள் உள்ளன. அவற்றில் 73 சொற்களே சரியாகவும் மீதி 57 சொற்கள் எழுத்துப் பிழைகளுடனும் அச்சிடப்பட்டுள்ளன. நூற்றுக்கு நூறு தமிழ் பேசும் மக்கள் வாழும் இப்பிரதேசத்தில், இந்தப் பற்றுச்சீட்டை எழுதிக்கொடுத்த வரும் ஒரு தமிழ் பேசுபவராக இருக்கும்போது தமிழும் ஆட்சி மொழியாக இருப்பதனால் ஏதோ கொஞ்சம் தமிழ் எழுத்துக்களை அச்சிட்டுவிட்டால் தமிழுக்கு சம அந்தஸ்து கிடைத்துவிட்டதாக அர்த்தமாகிவிடுமா?

பாபு-கல்முனை.

# புகார் பெட்டி

## செஞ்சிலுவை சங்கத்தின் சேவை

(கனமடு நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த பலர் புத்தளம், கற்பிட்டி, மதுரங்குளி, விருதோடை, கொத்தாந்தீவு, ஆகிய பகுதிகளில் அகதிகளாக, அகதி முகாம்களில் வாழ்கிறார்கள்.

அடிக்கடி இலங்கை செஞ்சிலுவை சங்கம் அகதி முகாம்களுக்கு சென்று நோயாளிகளின் நோய்களை விசாரித்து அதற்கு ஏற்ற மாதிரி வைத்திய சிகிச்சை செய்து வருகிறார்கள். அடுத்தபடியாக அவர்களது பிள்ளைகள் பாடசாலையில் கல்வி கற்று வருகிறார்கள். அவர்களுக்கு பாடநூல்கள், கொப்பிகள், கலர் பெட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றது.

## ஒரு திருத்தம்

சென்றவார முரசில் வடக்கில் இருந்து தெரிவாகியுள்ள 15 தமிழ் பேசும் உறுப்பினர்களில் ஐ.கேதீஸ்வரனின் பெயர் தவறுதலாக இடம்பெற்று விட்டது. அபூபக்கர் (முஸ்லிம் காங்கிரஸ்) அவர்களது பெயர் விடுபட்டிருந்தது. ஐ.கேதீஸ்வரன் தெரிவு செய்யப்படவில்லை.

-ஆ.ர.-

## பொதுமலசலகூட வசதி இன்றி மக்கள் அவதி

கச்சேரி, வைத்தியசாலை, பாடசாலை பொருட்கள் கொள்வனவு என்று பல தேவைகளுக்காக அக்குறணை நகரத்திற்கு வரும் பல இன மக்களும் அடிக்கடி கூடும் இடமான அக்குறணை கடைத் தொகுதிகளடங்கிய பஸாரில் ஒரு பொதுக் கழிப்பிடம் இன்றி பொதுமக்கள் பெருஞ் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

அத்துடன் அக்குறணை ஆறாம் கட்டை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்திலும் போதிய மலசலகூட வசதியின்றி மாணவிகள் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக பெற்றோர் விசனப்படுகின்றனர்.

இக்குறைகளைச் சீர்படுத்த சம்பந்தப்பட்டவர்களும் அதிகாரிகளும் கூடியவிரைவில் முயற்சியெடுப்பது இன்றியமையாததாகும். (அக்குறணை நிருபர்)

## சிதைவடைந்துள்ளது வீதி! ஏன் இந்தக் கதி!!

மாவனல்லைப் பகுதியில் காணப்படும் சிறு வீதிகள் அனைத்துமே கற்களும், மணலும் நிறைந்து காணப்படுகின்றன.

குறிப்பாக ஹிங்குளோயாப் பகுதியிலுள்ள மாறாவ, மஹவத்த, ஓவத்த போன்றன உட்பட பல வீதிகள் கரடு முரடாக ஏதோ மலைகள் போன்று காட்சி தருகின்றன.

மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசலிலிருந்து- மாறாவ வரைக்குமான வீதியே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. சென்ற நமழானுடைய காலத்தில் இரவில் இவ்வீதியால் சென்ற பத்துக்கும் மேற்பட்டோர் சிறு சிறு காயங்களுக்குள்ளாயினர்.

அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்ட மார்கட் வீதி மழை வந்தால் வயலாகி விடுகின்றது. மஹவத்த-தக்கிய்யா வீதி மழை காலங்களில் பயன்படுத்த முடியாதுள்ளதுடன், பலத்த அசௌகரியங்களுக்கும் அப்பகுதி மக்கள் ஆளாகி வருகின்றனர்.

இவ்வீதி திருத்தப்படவேண்டியது அவசியம்.

தாராபுரம்-நப்ஹான்.

## தவறான நேரம்

குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம்தான் கல்கமுவ. இதன் பிரதான சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றும் அமையப் பெற்றுள்ளது. கடந்த சிலமாதமாக இம்மணிக்கூடு 8.30 நேரத்தைத் தான் தொடர்ந்து காட்டுகிறது. அனுராதபுரம்-கொழும்பு-வவுனியா, குருநாகல் போன்ற தூர இடங்களுக்கு செல்லும் பயணிகள் பஸ் நிலையத்தின் முன்பாக அமைந்திருக்கும் இம்மணிக்கூட்டில் நேரம் பார்த்து ஏமாந்து போகின்றனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனை திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

ஒட்டமாவடி-அறபாத்.

## தொலைத்தவர் பெற்றுக்கொள்ளவும்

இலங்கைக்கான கடவுச் சீட்டு ஒன்று பேரூந்து ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் குருநாகலைச் சேர்ந்த திருமதி, அஹமட் லெப்பை சித்தி ஃபர்ஹானா என அடையாளங் காணப்பட்டுள்ளது.

மேற்படி கடவுச்சீட்டு ஏ.ஐ. ருவைஸ்தீன், (இல.24, புதிய கொலனி, வறக்காமுறை, உக்குவளை) என்பவரிடம் இருக்கிறது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

அக்குறணை நிருபர்.


விளம்பரப் பகுதி



மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவை.

உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு. இன்னும் வசிய சொக்கலேட், தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை
காம்பிளக்ஸ்
நுவரெலியா.

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.

தொலைபேசி: 052-2508, 052-3093, 01-342463, 01-342464
வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறுவனம்
VICTOP RECORDING STUDIO
356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6

ஆவணி மாதம் பிறந்துவிட்டது. உங்கள் திருமணம் மற்றும் விசேட நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் Video மூலமும் எடுத்துப் பெற்றுக்கொள்ள முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
* T.V.-டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே-ரிப்போர்ட்

## நாரதர்

தேர்தல் திருவிழாவின் பரபரப்புக்கள் ஓய்ந்து புதிய அரசாங்கம் என்ன செய்யப்போகிறது, எப்படிச் செயற்படப் போகிறது என்னும் எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன.

வாக்களித்தவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டு பொதுஜன முன்னணி வலதுகாலை எடுத்துவைத்து பாராளுமன்றத்திற்குள் சென்றுவிட்டது.

ஆரம்பமே வெற்றிதான். எதிரணியில் இருந்தாலும் தமிழ்கட்சிகள் பொதுஜன முன்னணிக்கு பூரண ஆதரவு கொடுத்துள்ளன.

புதிய சபாநாயகர் மும்மொழியும் அறிந்தவர்.

பாராளுமன்றத்தில் அவரை வாழ்த்தியவர்களில் பலரும், மும்மொழி அறிந்தவர் என்பதால் இனப்பிரச்சனை தீர்வுக்கு நாடு நாட்டம் கொண்டுள்ள வேளையில் முக்கிய பங்கு வகிக்கக் கூடியவர் சபாநாயகர் என்ற தொனியில் பேசினர்.

முன்னர் இருந்த சபாநாயகர் எம்.எச்.முகமட் அவர்களும் மும்மொழியும் அறிந்தவர்தான். அதனைச் சிலர் மறந்து விட்டதாகவே தோன்றியது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா, மறைந்த ரஞ்சன் விஜயரத்ன ஆகியோரும் மும்மொழியும் அறிந்தவர்கள்தான்.

எனினும் மும்மொழி அறிந்த ஒருவரையே சபாநாயகராக நியமிக்க வேண்டும் என்று புதிய பிரதமர் நினைத்தமை வரவேற்கப்படவேண்டியதுதான்.

ஆயினும், இனப்பிரச்சனை தீர்விற்கான வழிகாட்டும் பொறுப்பு சபாநாயகரை சார்ந்த விடயமல்ல. ஆளும் கட்சியின் துணிச்சலும், எதிரணிகளது ஒத்துழைப்பும் அரசியல் தீர்விற்கான பாதையைத் திறப்பதற்கு வழிவகுக்க வேண்டும்.

இனப்பிரச்சனை விடயத்தில் தமது கட்சியின் நிலைப்பாடுகள் பொருத்தமானதாக இல்லையென்பதை ஐ.தே. கட்சியில் உள்ள சிலரும் இப்போது ஒத்துக்கொள்ளவே செய்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசியல் தீர்வொன்றை முன்வைத்தால் அதனை ஐ.தே.கட்சி ஏற்றுக்கொள்ளும் என்று நம்புவதற்கு அந்தச் சிலரின் கூற்றுக்கள் மட்டுமே போதுமானதாக இல்லை.

ஐ.தே.கட்சியின் அணுகுமுறைகள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஒவ்வொரு அடிவைப்பும் கடினமானதாக அமையவேண்டும் என்ற நோக்கிலானவையாகவே அமைந்துள்ளன.

சபாநாயகர் தெரிவிற்கு நடந்த போட்டியும் அதனையே பிரதிபலிக்கிறது.

இந்நிலையில் இனப்பிரச்சனையைத் தீர்த்துவைத்த பெருமை பொதுஜன முன்னணிக்கோ அல்லது பிரதமர் சந்திரிக்காவுக்கோ போய்ச் சேருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விரும்புமா என்பது கேள்விக்குரியது.

இன்று பொதுஜன முன்னணியில் உள்ள கட்சிகள் அன்று எதிரணியில் இருந்தபோது, பிரேமா புலிகளோடு பேசியதற்கு பல்வேறு அர்த்தங்களை கற்பித்திருந்தன.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையின்போது, பிரேமாவை காப்பாற்ற அன்றைய யாழ் மாவட்ட

பாராளுமன்ற உறுப்பினர்களை புலிகள் அனுப்பிவைக்கவுள்ளதாகவும் பிரசாரம் நடந்தது.

இப்போது புதிய பிரதமர் புலிகளோடு பேசத்தயார் என்று அறிவித்துள்ளார்.

நிபந்தனையில்லாத பேச்சுக்கு தாமும் தயார் என்று புலிகளது இலண்டன் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

ஏனைய தமிழ் கட்சிகளும் பேச்சில் பங்குபெறவேண்டும் என்று முன்னைய அரசாங்கம் கூறியிருந்தது.

அதனையும் நிபந்தனையென்று கூறி புலிகள் நிராகரித்திருந்தனர்.

அதுமட்டுமல்லாமல், பிரேமாவோடு தாம் பேச்சை முறித்துக்கொண்ட காரணங்கள் பற்றி புலிகள் கூறிய விளக்கத்தில், ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற அமைப்புக்களோடு பிரேமா அரசு பேச்சு நடத்தியதையும் ஒரு காரணமாகக் கூறியிருந்தனர்.

புலிகளைப் பொறுத்தவரை ஏனைய தமிழ்கட்சிகள் எதனையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

குறைந்தபட்சம் அகிம்சாவாதிகளும், புலிகளை விரோதிக்காத போக்கினருமான

அதுமட்டுமல்லாமல், பிரேமா-புலிகள் பேச்சினால் அதிக பயனடைந்தவர்கள் புலிகள் அமைப்பினரே என்னும் கருத்து படையினர் மத்தியில் ஏற்பட்டதுண்டு.

சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகளும் அவ்வாறான எண்ணத்தையே ஏற்படுத்தியிருந்தன.

அது ஒரு இரகசியப் பேச்சுவார்த்தை போலவே இருந்தமையால் இருதரப்பும் பேச்சுவார்த்தையில் எவ்வாறு நடந்துகொண்டன? உடன்பாடுகண்ட விசயங்கள் என்ன? பரிமாறப்பட்ட உதவிகள் என்ன? என்பதெல்லாம் பரமரகசியங்களாகி பத்திரிகைகளும், எதிரணிகளும் தமது விருப்பத்திற்கு ஏற்ப வியாக்கியானம் செய்யக்கூடிய தன்மை காணப்பட்டது.

ஒருவேளை அந்தப் பேச்சில் வெற்றி ஏற்பட்டிருந்தால் அந்த வியாக்கியானங்கள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கக்கூடும்.

ஆனால் பேச்சு முறிந்து போர் தொடங்கியதால், வியாக்கியானங்கள் தொடர்ந்து பிரேமாவின் மறைவுவரை நீடிக்கவே செய்தன.

மாத்தையா மூலம் பதில் அனுப்பிய பிரபா, அஷ்ரபின் கடிதத்தை கண்டுகொள்ளவேயில்லை.

அதுமட்டுமல்லாமல் தற்போது புலிகள் அமைப்பில் அரசியல் பிரிவுத் தலைவராக உள்ள கரிகாலன் கிழக்கைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றும் நடவடிக்கைக்கு தலைமை தாங்கியவர்.

"அஷ்ரபிடம் . செல்லுங்கள்" என்று சொல்லியே யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டனர்.

ஆகவே, முஸ்லிம் காங்கிரஸ் தொடர்பான அந்த விரோதமான கண்ணோட்டத்தை புலிகள் இதுவரை கைவிட்டதாகத் தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் - பேச்சில் முஸ்லிம் காங்கிரசின் பங்குபெற்றுதலை புலிகள் ஏற்பார்களா? என்பதும் சந்தேகம்தான்.

தன்னை ஓரத்தில் விட்டபடி இனப்பிரச்சனை தீர்விற்கு பேச்சு நடப்பதை மு.காங்கிரஸ் கைகட்டிக்கொண்டு நின்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ள நிலையில் ஐ.தே. கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலை நம்பிக்கையோடு எதிர்கொள்ளுவர் என்று சொல்வதற்கில்லை.

பொதுத்தேர்தலில் வீசிய வெற்றிக் காற்று பொதுஜன முன்னணிக்கு ஜனாதிபதித் தேர்தலிலும் சாதகமான நிலையினை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

ஆயினும், ஐ.தே.கட்சியின் நிரந்தர வாக்கு வங்கிகள் பெரும்பாலும் அதன் கையைவிட்டுப் போகவில்லை.

இரு கட்சிகளதும் ஆதரவாளர்களாக இல்லாமல் யாருக்கு வாக்களிப்பது என்பதை இறுதி நேரத்தில் தீர்மானிக்கும் வாக்காளர்கள் அநேகமாக காற்று வீசும் பக்கத்தை கணிப்பிட்டே வாக்களிப்பதுண்டு. அவர்களது வாக்குகள் ஜனாதிபதித் தேர்தலிலும் பொ.ஜ.முன்னணிக்குச் சார்பாகவே செல்லக்கூடும்.

இவ்வருட முடிவுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்தாக வேண்டும்.

முன்கூட்டியே அதனை ஜனாதிபதி நடத்தக்கூடும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

அவ்வாறு நடத்தினால் அது கட்சிக்கு மேலும் பாதகமாகிவிடும் என்றே ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி விரும்பினாலும்கூட தனது கட்சியினரின் முடிவை மீறி

# ஆளும் கட்சி-எதிர்க்கட்சி அடுத்த குறி ஜனாதிபதித் தேர்தல்



தமிழர் விடுதலைக் கூட்டணியினரைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

தமிழ் மக்களது தரப்பில் தாம்மட்டுமே தனித்த பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்துடன் மட்டுமே அவர்கள் பேச்சுக்கு வருவதென்றால் வருவார்கள்.

ஆனால் புதிய பிரதமர் திருமதி சந்திரிக்கா ஏனைய தமிழ் கட்சிகளோடும் பேசுவோம் என்று கூறியிருக்கிறார்.

எனவே- தனித்து புலிகளோடு மட்டும் இரகசியமாகப் பேசுவதற்கு புதிய அரசாங்கம் முன்வருவது சாத்தியமானதல்ல.

பகிரங்க அழைப்பு - பகிரங்கப் பேச்சு- இனப்பிரச்சனை தீர்வுக்கு புலிகள் உட்பட சகல தமிழ்பேசும் கட்சிகளோடும் பேச்சு என்ற நிலையினைத்தான் புதிய அரசாங்கம் நாடும் என்று தெரிகிறது.

இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் முஸ்லிம் மக்களது பிரச்சனையும் அடங்கியுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் முக்கியமான அரசியல் சக்தியாக வளர்ந்துள்ள உண்மையினை யாரும் மறுத்துவிட முடியாது.

எனவே- இனப்பிரச்சனை தீர்விற்கான பேச்சுவார்த்தையில் தமிழ் கட்சிகளோடு- முஸ்லிம் காங்கிரசும் பங்குகொள்ள வேண்டும்.

தற்போது அரசாங்கத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரசைப் பற்றிய புலிகளது கண்ணோட்டம் எத்தகையது என்பதும் முக்கியமானதாகிறது.

ஏற்கனவே எம்.எச்.எம். அஷ்ரப் எழுதிய கடிதத்திற்கு பிரபாகரனோ அல்லது புலிகள் தரப்பில் இருந்தோ பதில் எதுவும் அனுப்பப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் தொண்டாவின் கடிதத்திற்கு அன்றைய பிரதித் தலைவர்

ஆட்சேபிக்க வேண்டியே ஏற்படும். அது பொதுஜன முன்னணிக்கு சிக்கலாகிவிடும்.

எனவே பொதுஜன முன்னணி அரசாங்கம் புலிகளோடு மட்டுமே தனித்துப் பேசுவது சாத்தியமானதாகத் தோன்றவில்லை.

இதைன புலிகள் எவ்வாறு எதிர்கொள்வார்கள்? என்பதுதான் கேள்வி.

புதிய அரசாங்கம் பற்றிய தமிழ்பேசும் மக்களது எதிர்பார்ப்புக்கள் புலிகள் பற்றிய சந்தேகங்கள் புதிய அரசிடமும் இருக்கின்றன.

அதேவேளை புலிகள் ஏற்றுக்கொள்ளாத தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது சுலபமான காரியமல்ல என்னும் உண்மை நிலையினையும் புதிய அரசு உணர்ந்தேயுள்ளது.

பேச்சுக்கு என்று வரும் புலிகள் முன்னர் பிரேமாவோடு நடந்து கொண்டதைப்போல பேச்சை முறித்துவிட்டு, மீண்டும் போர் முனையைத் திறந்தால் என்ன செய்வது?

சிங்கள மக்கள் மத்தியிலும், படையினர் மத்தியிலும் தற்போதுள்ள செல்வாக்கை புலிகளோடு நடத்தும் பேச்சுக்கள் சேதப்படுத்திவிடலாம் என்று பொ.ஜ.ஐக்கிய முன்னணி தலைமையில் உள்ளவர்கள் நினைப்பது இயல்பானதே.

செயற்படமாட்டார் என்றே நம்பப்படுகிறது.

எனினும்- குறித்த காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தாலும்கூட தனது உறுப்பினர்களது உத்வேகத்தை தட்டியெழுப்புவதில் ஐ.தே.கட்சிக்கு சிரமங்கள் உள்ளன.

ஜனாதிபதி ஆட்சி முறைக்கு முற்றுப்புள்ளியிடக்கினை பொதுஜன முன்னணி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளப் போகிறது.


ஜனாதிபதி ஆட்சிக்கு அங்கீகாரம் கேட்டு ஐ.தே.கட்சி போட்டியிடுமானால் அதனை எவ்வாறு நியாயப்படுத்தப் போகிறது என்பதும், அதற்கு வாக்காளர்கள் மத்தியில் வரவேற்பு இருக்குமா என்பதுவும் யோசிக்கப் படவேண்டியதே.

சாதாரண வாக்காளர்களைப் பொறுத்தவரை பாராளுமன்ற ஆட்சி, ஜனாதிபதி ஆட்சி என்பவற்றின் சாதக பாதகங்கள் - வேறுபாடுகள் பற்றி பெரிதாக அறிந்து கொள்ளாத நிலையே காணப்படுகிறது.

தற்போதுகூட புதிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ள போதும் இரு ஆட்சியும் எவ்வாறு முரண்படுகிறது

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

# புலிகளோடு மட்டும் பேச பொ.ஐ.முன்னணி முன்வருமா?





அறிந்ததுதான்.

ஆகவே- புதிய அரசின் தீர்வு விருப்பங்களுக்கு தாம் குறுக்கே நிற்பவர்களாக புலிகள் காட்டிக்கொள்ள விரும்பமாட்டார்கள்.

பந்து இப்போது தமது தரப்பை நோக்கி வருவதைபுலிகள் அறிந்தேயுள்ளனர். கோல் போடவும் விடக்கூடாது; அதேசமயம் தமது தரப்புக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் வகையிலும் விளையாடக்கூடாது என்பதில் புலிகள் கவனம் செலுத்துவர்.

ஆயினும் சிலர் எதிர்பார்ப்பது போல 'யாவும் சுபம்' என்று சொல்லி முடிக்குமளவுக்கு உடனே நிலமைகள் மாறப்போவதில்லை.

□□

ஜனாதிபதித் தேர்தலை நோக்கியே தென்னிலங்கை கட்சிகளது அரசியல் வியூகங்கள் இப்போது வகுக்கப்படுகின்றன.



தேர்தல் பிரசார நேரத்திலை மன்னார் பகுதியிலை ரெண்டு எழுத்தாரை கண்டிச்சப் பேச முற்பட்ட கட்சியை சனம் கண்டிச்சதாம். பிறகென்ன, வாக்குகள் விழாதே எண்ட நல்ல அபிப்பிராயத்திலை அவை ரெண்டு எழுத்தாரைப் பற்றி வாயே திறக்கேல்லையாம்.

திருவான மலையிலை தோல்வி பற்றி கூறிய நகரத்தின் தலைவர் என்ன சொன்னவர் தெரியுமோ? யாழ்ப்பாணத்து ஆட்கள் ரெண்டுபேர் முன்னாலை நிண்டு கேட்டதுதான் தோல்விக்கு காரணமாம். அதொண்டுமில்லை தனக்கு இடம் தரேல்லை எண்ட எரிச்சலை இப்ப காட்டியிருக்கிறார்.

தனித்துவ முஸ்லிம் கட்சி உறுப்பினரை எதிர்த்து வாக்குப் போட்ட மூன்று எம்பிகள் ஆராக இருக்கும் எண்டு உயர்சபை கூட்டம் முடிச்சவுடனை உணவு விடுதியிலை அதிகார தரப்பார் நக குசவென்று ஆராய்ந்தவையாம்.

பொன்னான புத்திரர் தானும் போக முடியேல்லை. எங்கடை ஆட்களையும் போகவிடாமல் பண்ணிப்போட்டார் எண்டு மலையக தனித்துவ தலைவர் கோபப்பட்டதாய் தகவல் பாருங்கோ.

"நான் இருக்கப் பயமேன்" எண்டு குமாரர் தேர்தல் பிரசாரம் செய்ததைக் கேட்டு சிரிச்சுப் போட்டு நண்பர் ஒருத்தர் என்ன சொன்னவர் தெரியுமோ? "ஓம் முருகா எண்டு எழுதிப் போடுற மாதிரி இவற்றை பேரை எங்கட வீட்டிலை எழுதி தொங்கவிடச் சொல்லுறாரோ?" நல்ல கேள்விதான்.

## அதிரடி அய்யாத்துரை

கிழக்கில் உள்ள 'மு'வில் தொடங்கும் பெயர் உள்ள பச்சை அணிக்காரர் தலைமை ஏமாத்திப் போட்டுது எண்டு சொல்லுறாராம். தேசியப் பட்டியலில் இடம் கொடுக்காமல் விட்டதாலை அவர் வாடிப் போயிருக்கிறாராம்.

கிழக்கிலை படுதோல்விகண்ட பூ சின்னக்காரர் தலைமை சரியில்லை. அதுதான் தோற்றுப் போனம் எண்டு சொல்லுகினமாம். இரத்தினமான கருத்து.

'அ'வில தொடங்கும் பெயர் உடைய தனித்துவ தலைவர் பச்சை அணியை சபையில் கிண்டல் செய்ய அந்த அணி தரப்பினர் உணர்ச்சிவசப்பட்டு முணு முணுத்தவையாம்.

வெளிநாட்டு செய்திச் சேவை பெண்மணியார் தான் பேட்டி எடுக்கிற ஆட்களிட்டை விட்டுக்கொடுக்கமல் கேள்வி கேட்கிற ஆள் என்று காட்ட ஆசைப்படும் ரகம். ஆனாலும் தனியே சந்திச்சப் பேசேக்கை செல்லமாய் பேசுவாராம். ஆனந்தமான செய்தியாளராக்கும்.

தேர்தல் முடிவு வெளியானவுடனை அதிகாரிகள் சிலர் தங்கள் சொந்த உடமைகளை மூட்டை கட்டி தயாராய் இருந்தவையாம். நினைச்ச மாதிரியே மாற்றங்களும் நடந்திருக்குப் பாருங்கோ!

எலக்சன் முடிஞ்சவுடனை எங்கட இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தமிழ்சேவையிலை "அசைக்க முடியாது எம்மை அசைக்க முடியாது" என்டு பாட்டுப் போட்டவையாம். பதவிக்கு பிரச்சனை வராது எண்டு நம்பிக்கையாக்கும்.

முன்னாள் பா.உ. கிழக்கின் கருணையான பெயர் உடையவர் தோல்வியாலை மனம் வெறுத்துப் போய் இருக்கிறாராம். அவரை விட அவர் கூட்டில் போட்டியிட்ட மாமாவுக்கு கூட வாக்குக் கிடைச்சதாம். அவருக்கு வெளியே வர முடியாத கவலையாம்.

தாலாட்டுப் பாட்டிலையே வீரத்தை மட்டுமில்லை. விவேகத்தையும் ஊட்டலாம் பாருங்கோ.

"வாடப் பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தை நீது என்றால் முட்டவரும்
மாடுகளை சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோளா! இளந் தோளா! கண்ணுறங்கு!"

யார் எழுதினது தெரியுமோ? பாரதிதாசன்தான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பழைமையான சிந்தனைகள் புதிய பிரதமரை வழிமறிக்கலாம்

# இனப்பிரச்சனை தீர்வு பற்றி அமெரிக்க சஞ்சிகை

*நம்நாட்டின் பாராளுமன்ற பொதுத்தேர்தல் தொடர்பாக அமெரிக்க 'ரைம்ஸ்' சஞ்சிகை வெளியிட்டுள்ள கண்ணோட்டம் இது. நமது முகத்தை நாமே கண்ணாடியில் பார்ப்பதைவிட வேறு இருவர் பார்த்துச் சொல்லும் அபிப்பிராயம் அறிய ஆசைப்படுவதில்லையா? அப்படித்தான் இதுவும். இது நம் நாட்டு அரசியல் முகம் பற்றிய அமெரிக்க பத்திரிகையாளரது அபிப்பிராயம்.*

இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தபோதே, 17 வருடங்கள் நாட்டில் ஆட்சி செலுத்திய பழைமை தழுவிய ஐ.தே.க. தோல்வியடையப் போகிறது என்பது விரைவாகவே தெளிவாகிவிட்டது.

49 வயதானவரும் இருபிள்ளைகளின் தாயாருமான சந்திரிக்கா குமாரதுங்க தலைமையில் இடதுசாரிக் கட்சிகள் 11 இணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. இருப்பினும் சந்திரிக்கா அமைதியாகவே இருந்தார்.



ஐ.தே.கட்சி சிறுபான்மை கட்சியாக ஆட்சியினை அமைக்க முயற்சிக்கிறது என்ற வதந்தி பரவலாக அடிபட்டது. அவ்வாறானால் எதிர்க்குமுகமாக வன்முறைகள் வெடிக்கும் என்றும் பேசப்பட்டது. பதட்ட நிலை உருவாகியவண்ணமிருந்த வேளையில் சந்திரிக்கா தனது சோதிடர்களைக் கலந்தாலோசித்த வண்ணமிருந்தார். இறுதியாக தனது தாயாரான- உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி என்று போற்றப்பட்ட-சிறிமாவோ பண்டாரநாயக்கா, 1960களிலிருந்து எழுபதுகள் வரை-12 வருடங்கள் இரு தடவைகள் வகித்த பதவியினை ஏற்று- சரியான சுபவேளை என்று கணிக்கப்பட்ட வெள்ளிக்கிழமை பகல் 10.14க்கு பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

கோள்களும் குடும்பப் பாரம்பரியமும் அளிக்கக்கூடிய அத்தனை உதவிகளையும் குமாரதுங்க பெற்றாக வேண்டும். வட-கிழக்கில் இனப்பிரச்சனை காரணமாக தோன்றிய கிளிர்ச்சிகளில், கடந்த 11 வருடங்களில் 30,000 உயிர்கள் பலியாகியதுடன் பொருளாதார அபிவிருத்தியும் சீர்குலைந்து போயுள்ளது. அதுமட்டுமல்லாமல் பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் அதிகாரப் பலப்பரீட்சை போன்ற அரசியல் ரீதியினா இடையூறுகளையும் அவர் சந்திக்க வேண்டியிருக்கிறது.

இன்றுள்ள அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி எந்த மந்திரிப் பதவியையும் தனக்கெனத் தெரிவு செய்துகொள்ளலாம். அரசாங்கத்தையும் பதவியிலிருந்து நீக்கி விடவும் அவருக்கு அதிகாரமுண்டு.

ஜனாதிபதி பதவியிலிருப்பவர் தோல்வியுற்ற ஐ.தே.கட்சியைச் சார்ந்த 72 வயதான டிங்கிரி பண்டா விஜேதுங்கா ஆட்சிக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவாரென்று எதிர்பார்க்க முடியாது. இதே வருடத்தில் அவரும் தேர்தலை எதிர்பார்க்கிறார்.

திருமதி சந்திரிக்கா எதிர்நோக்கும் பிரச்சனைகளில் பெரிதாகத் தோன்றக்கூடியது, அவருடைய தாயாரால் ஏற்படக்கூடும். உடல் நலங்குன்றிய, 78 வயதான திருமதி பண்டாரநாயக்கா மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் என்ற நிலையிலிருக்கிறார். தேர்தல் பிரசாரங்களுக்குத் தலைமைதாங்கும் பொறுப்பினை தயக்கத்துடனேயே மகளுக்கு விட்டுக் கொடுத்தார்.

தென் ஆசியாவிலுள்ள ஏனைய பெண் பிரதமர்களான பாகிஸ்தானின் பெனாஸிர் பூட்டோ, பங்களாதேஷ் பிரதமர் காலிதா

> பிரிவினைவாதிகளின் வன்செயல்களினாலும் அரசியல் வன்முறைகளினாலும் சங்கடப்படும் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசியாவின் புதிய பிரதம மந்திரி

## வெளியிலிருந்து ஒரு பார்வை

ஸியா ஆகியோரைப் போன்று திருமதி சந்திரிக்காவும் அரசியல் மடியிலேயே தாலாட்டப்பட்டவர். அவருடைய தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா 1959ல் கொலை செய்யப்படும்வரை மூன்றாண்டுகள் பிரதமராக பதவியிலிருந்தவர்.

சந்திரிக்கா சொர்போன் கல்லூரியில் சமுதாய வியல், அரசியல் போன்ற துறைகளைக் கற்றும் இடதுசாரிக் கருத்துக்களை பூரணமாக அறிந்தும் நாடு திரும்பியவர்,மாக்சியக் கொள்கைகளில் பற்றுக் கொண்டவரும் முன்னாள் திரைப்பட நாயகனுமான விஜே குமாரதுங்க என்பவரை மணந்து கொண்டார். பின்னர் தனது குடும்பத்தாரை விடுத்து கணவனால் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட சிறிலங்கா மகாஜன கட்சி (இலங்கை மக்கள் கட்சி)யில் இணைந்து கொண்டார். இக்கட்சி இப்போது கலைக்கப்பட்டுவிட்டது. இக்கட்சி தமிழ் கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானம் காண முயற்சித்தது.

விஜே குமாரதுங்க அரசியல் விரோதிகளால் 1988ல் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வருட ஆரம்பம் வரை இவர் அமைதியாக ஒதுங்கியிருந்தார். பின்னர் தனது தாயாரின் கட்சிக்கு தலைமை தாங்கி மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுத்தந்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி ஊழல் மயமான அமைப்பு என்று சந்திரிக்கா குற்றச்சாட்டுக்களைக் குவித்தார். ஆனால் அவை முழுமையாக நிரூபிக்கப்படவில்லை.

பெரும்பான்மையான வாக்காளர்கள் ஐ.தே.கட்சியின் மேலாதிக்க வெறியினாலும் ரணசிங்க பிரேமதாசா தற்கொலைக் குண்டினால் கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தவியேற்ற தீட்சணியமற்ற விஜேதுங்காவின் தன்மையினாலும் சலிப்படைந்துள்ளனர் என்பதும் தோல்விக்கு காரணம் என்று நம்பப்படுகிறது.

கருத்துக் கூறுகையில் "சந்திரிக்கா தனது முயற்சியின்போது ஏராளமான நரைமுடிகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்" என்கிறார். (பழைமையாளர்களது எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டும்)

"இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் ஜனநாயகத்தை சீரமைப்பது போன்ற பெரும்பணி எங்களுக்கு சிரமமானதாகவே இருக்கப்போகிறது", என்று கூறியவர் தமிழ் கிளர்ச்சியாளர்களைப் பற்றிக் கூறுகையில், "இனப்பிரச்சனையில் ஓர் ஊடு வழி கிடைத்து சமாதானத்தை நிலைநாட்ட வாய்ப்புக்கிட்டும் என்றே நம்புகிறோம்," என்றார்.

### ஒரே குடும்பத்தில் மூன்று பிரதமர்கள்



-தந்தை வழியில் தாய்-தாய் வழியில் மகள்-

பிரதமர் பதவியிலிருந்து வெளியேறும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "நாங்கள் 17 வருடங்கள் ஆட்சிபீடத்திலிருந்து விட்டோம். மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பியுள்ளனர் போலும்" என்று கூறியிருக்கிறார்.

திருமதி சந்திரிக்கா தமிழ் பிரிவினை வாதிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு நாட்டம் கொண்டுள்ளார். இருப்பினும் அவருடைய அரசில் அங்கம் வகிப்பவர்கள், இவர்களுடன் உடன்பாட்டுக்கு வருவதில் போதுமான ஆதரவளிப்பார்கள் என்று கருதமுடியாது. முன்னைய ஆட்சியாளர்களையே இது விடயத்தில் அவர்கள் பின்பற்றக்கூடும். 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் சிங்க ரெட்ணதுங்க

பாதத்தில் இடம்பெற்ற ஒரு சத்திர சிகிச்சையின் காரணமாக நடப்பதற்குச் சிரமப்பட்ட தனது தாயின் கைகளைப் பற்றிய வண்ணம் ஆசியாவின் புதிய பிரதமர் பதவியினை ஏற்றவர், புன்சிரிப்புடன் தனக்கு முன்னர் தனது பெற்றாரால் ஆட்சி செலுத்தப்பட்ட தலைநகரை நோக்கினார். தேர்தலை அடுத்து வன்முறைகள் தலை தூக்காதிருக்க ஊரடங்கு அமுலில் இருந்த மூன்று நாட்களின்பின் கொழும்புவாழ் மக்கள் அவருடன் சேர்ந்து கொண்டாட்டங்களில் பங்கேற்க ஆயத்தமாகிவிட்டனர்.

(26.08.94-அமரர் அமுதரின் பிறந்தநாள் நினைவுகூரப்பட்டது. அதனை முன்னிட்டு)

# அமிர் அண்ணன் எங்கள் இதய மன்னன்

அமிர் அண்ணா! எங்கள் இதயங்களால் நேசிக்கப்பட்டவர் நீங்கள்.

வழமையாக இனிய புன்னகையும் தேவையானபோது கோபமும் உங்களிடம் நாம் கண்டிருக்கிறோம்.

உங்கள் புன்னகையை இரசித்திருக்கிறோம். உங்கள் கோபத்தை ஆமோதித்திருக்கிறோம்.



தந்தை செல்வாவை இழந்த சோகத்தை நீங்கள் இருக்கிறீர்கள் என்ற ஆறுதலில் தானே நாங்கள் அன்று தாங்கிக் கொண்டோம்.

தந்தை செல்வாவின் இறுதிச் சடங்கில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்க இருந்த போது, 'நானும் அழுதுவிடுவேன்' என்று நீங்கள் சொன்ன வார்த்தைதானே எங்கள் சோகத்தை நெஞ்சுக்குள் அணைபோட்டுத் தடுத்தது.

தந்தைக்குப்பின் தளபதி நீங்கள் என்பது எந்தக் கேள்விக்கும் இடமில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றே போதும் அண்ணா உங்கள் ஆளுமைக்கு சாட்சி சொல்ல.

ஒரு தலைவர் மறைந்த பின்னர் பதவிக்கு போட்டி எழுந்தால் தொடர்ச்சியான தலைமைத்துவத்தில் தொய்வு இருப்பதற்கு அடையாளம்.

தமிழ் நாட்டில் அண்ணா மறைந்த போது 'திராவிட முன்னேற்றக் கழகத்தில் கூட அடுத்த தலைவர் யார் என்பதிலே போட்டி எழுந்ததுண்டு.

கலைஞர் ஒரு புறமும்-நாவலர் நெடுஞ்செழியன் மறுபுறமும் நின்று கயிறிழுத்த காட்சியை கண்டதுண்டு.

ஆனால்- அன்று மாபெரும் மக்கள் இயக்கமாய் இருந்த கூட்டணிக்குள் மறுபேச்சுக்கே இடமில்லாமல் தந்தையின் வெற்றிடம் உங்களால் நிரப்பப்பட்டது.

எதிர்க்கட்சி முதல்வராக நீங்கள் மாறும்வரை இளைஞர் இதயங்களில் உங்களைத்தவிர வேறு யாரும் உட்கார முடியவில்லை.

எதிர்க்கட்சி முதல்வராக நீங்கள் மாறிய பின்னர்தான் இளம் பருவ வேகம் உங்கள் தலைமைமீது விசாரணை நடத்தத் தொடங்கியது.

அமைதிவழிப் போராட்டத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் விடுதலைப் போரின் இரு விழிகளாக கருதி தலைமையேற்கும் தகுதி உங்களிடமே இருந்தது.

ஆனால் நீங்களோ அரபாத்தாக மாறாமல், அண்ணல் காந்தி காலத்திற்குள் இருந்து வெளியே காலடி எடுத்துவைக்காமல் இருந்துவிட்டீர்கள்.

ஆயினும்-நீங்கள் காந்தி கால மனிதரல்ல.

கட்டுப்படாத இளைஞனின் குரல் வளையை எட்டிப்பிடித்து நீங்கள் அடக்கிய காட்சியை நாங்கள் கண்டிருக்கிறோம்.

காந்திகூட சரியாக கௌரவிக்காத பகவத்சிங்கை வீரன் என்று வாழ்த்திப்பேசி அவன் வரலாற்றை நாங்கள் அறியவைத்தவர் நீங்கள்.

படுகொலைக்கு பதிலடி கொடுக்க புறப்பட்டு முதல் பலியான ஆயுதப் போராளி சிவகுமாரனை ஏற்றிப்போற்றியவர் நீங்கள்.

தமிழ் பேசும் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று எடுத்துச் சொன்னவர் நீங்கள்.

என்றாலும், ஏனோ ஆயுதப் போராட்டம் வீறுகொள்ள முற்பட்டபோது நீங்கள் முரண்பட்டதுபோல விலகி நின்றீர்கள்.

எங்கள் இளம்பருவ வேகம் உங்கள் அரசியல் விவேகத்தை விலக்கித் தள்ளியது.

அதனால் கொண்ட கோபமோ ஆயுதப் போராட்டத்தை நெறிப்படுத்தும் தலைமை பொறுப்பை நீங்கள் தாங்காமல் போக வைத்தது?

உங்கள் கண்ணொளியில் வளர்ந்திருக்க வேண்டிய போராட்டம் உங்கள் கண் எதிரிலேயே திசைமாறிப்போக நீங்களும் ஒரு காரணம் என்று உரிமையோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

யாசிர் அரபாத்போல நீங்கள் மாறியிருந்தால் எங்கள் ஆற்றல்கள் யாவும் அதிகாரப் போட்டியில் விழலுக்கு இறைத்த நீராகியிருக்காதே என்று வேதனைப்படவும் வேண்டியிருக்கிறது.

என்றாலும்-அண்ணா-பாராளுமன்றம் செல்ல வேண்டாம் என்று உங்கள் பாதையை மறித்தவர்கள்தான் இன்று பாராளுமன்ற படிக்கட்டுக்களை மிதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாற்றுத் திட்டம் இருந்தால் பரிசீலிப்போம் என்று நீங்கள் சொன்னபோது 'துரோகி' என்று சொன்னவர்கள் அனைவருமே இன்று நீங்கள் சொன்ன வார்த்தைகளையே திருப்பிச் சொல்லுகிறார்கள்.

என்றாலும் அவர்களிலே சிலர் உங்களை எதிர்த்தது தவறுதான் என்று ஒப்புக்கொள்ளத் தயங்குகிறார்கள்.

நன்றி மறந்தவர்களாக- நீங்கள் விதைத்த எழுச்சி விதையில் வளர்ந்தவர்கள்தாம் என்பதை மறந்துபோய் பேசுகிறார்கள்.

நீங்கள் விட்டுச் சென்ற வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படாமலேயே இருக்கிறது.

அது நிரப்பப்படுவது அத்தனை சுலபமல்ல என்றும் தெரிகிறது.

எனினும் அண்ணா! உங்கள் காலத்தில் நாம் வாழ்ந்தது கௌரவமாக இருக்கிறது. கர்வமாகவும் இருக்கிறது.

இன்று மறைத்தாலும்- எங்கள் வரலாறு உண்மை ஒளியில் எழுதப்படும் போது உங்கள் பெயரும்-உங்கள் செயல்களும் நாளைய தலைமுறைக்கும் எடுத்துச் செல்லப்படும்! உச்சரிக்கப்படும்! நினைவு கூரப்படும்!!

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

என்று அறியக்கூடிய நிகழ்வுகள் அரங்கில் தோன்றவில்லை.

இன்னும் சொல்வதானால் புதிய பிரதமர் பத்திரிகைகளிலும், தகவல்-தொடர்பு சாதனங்களிலும் முக்கியத்துவம் பெற்றுவருவதால், ஜனாதிபதியின் முக்கியத்துவம் குறைந்துள்ளது போல மாறியுள்ளது.

சாதாரண வாக்காளர்களது கண்களிலும், கருத்திலும் இப்போது யாவுமே திருமதி சந்திரிக்காவைப் பொறுத்த விடயங்களாக தெரிகிறதே தவிர அனைத்துக்கும் மேலாக சர்வ வல்லமையுடைய ஜனாதிபதி ஒருவர் இருக்கிறார் என்னும் நினைவு இருப்பதாகத் தெரியவில்லை.

இதனை மாற்றவேண்டுமானால் ஜனாதிபதி தனது கைகளை பாராளுமன்றத்திற்கு மேலாக நீட்டவேண்டியிருக்கும். அப்படி நீட்டினால் அதிகாரமுள்ளவர் என்று தெரியலாம்.

ஆனால், தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை ஜனாதிபதி ஒடுக்க நினைக்கிறார் என்னும் கருத்தும் வாக்காளரிடம் ஏற்படும். அதனால் ஜனாதிபதி ஆட்சிமுறை மீது வெறுப்பும் ஏற்படும்.

பொதுஜன முன்னணி ஆட்சி பற்றியும், 17 வருடத்தின் பின் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாகவும் திருவாளர் பொதுஜனம் ஆவலோடு எதிர்பார்ப்பதால் பாராளுமன்றத்தோடு ஜனாதிபதி மல்லுக்கட்டி நிற்பதை திருவாளர் பொதுஜனம் விரும்பமாட்டார்.

ஆக, மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலையில் அதிகாரமுள்ள ஜனாதிபதி இருந்தாகவேண்டியவராகியுள்ளார்.

மறுபுறம்-பராளுமன்ற ஜனநாயகம் பற்றி புதிய அரசாங்கம் கவர்ச்சிகரமாகப் பேசி வருகிறது.

அரசியல் அரங்கின் புதிய நம்பிக்கை நட்சத்திரமாக மாறியுள்ள திருமதி சந்திரிக்காவுக்கு மாற்றாக நிறுத்துவதற்கு ஐ.தே. கட்சியிடம் ஆள் இல்லை.

காமினி-ரணில் அணிகள் எதிர்க்கட்சித் தலைவர் போட்டியில் குதித்தமை மூலமாக பொதுவான தேசியத் தலைவர் ஒருவரை உடனடியாக அடையாளம் காட்ட முடியாத நிலையில் உள்ளனர்.

திருமதி. சந்திரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அதிக விருப்பு வாக்குகளையும் பெறக்கூடிய ஒருவராக மாறியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் எவரும் வெற்றிக்குரிய வாக்குகளை பெறத்தவறும் பட்சத்தில், அவர்கள் பெறும் விருப்பு வாக்குகளும் எண்ணப்படும். அப்படி ஒரு நிலை வந்தால் அது திருமதி சந்திரிக்காவுக்கே சாதகமாகும்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவின் சொந்தத் தொகுதியில் கூட ஐ.தே.கட்சி தோல்வியடைந்துள்ளது.

இந்நிலையில் ஏற்கனவே முடிவு செய்தபடி ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டி.பி.விஜேதுங்கா போட்டியிட்டால் விருப்பு வாக்குகளை பெறுவதில் திருமதி.சந்திரிக்காவோடு போட்டியிட முடியுமா என்பது சந்தேகமே.

அவ்வாறு இல்லாமல் ஐ.தே.கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு ஒரு வேட்பாளரை நிறுத்தினாலும்கூட நாடு தழுவிய ரீதியில் செல்வாக்கு செலுத்தக்கூடிய நிலை உடனே தோன்றுவது சிரமம்தான்.

ரணில் எதிர்க்கட்சித் தலைவராக வரவேண்டும் என்று விரும்பிய ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் காமினி மீது அதிருப்தி கொண்டே காணப்படுகின்றனர்.

வெளிக்கு தெரியாவிட்டாலும் உள்ளே புகைச்சல் இருக்கிறது.

அதேவேளை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா போட்டியில் இருந்து விலகினால் காமினி களத்தில் இறங்கவே விரும்புவார்.

பிரேமா ஆதரவாளர்கள் அவரை உடனடியாக ஏற்றுக்கொள்ளத் தயங்குவர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன முன்னணியின் பக்கமே வெற்றிவாய்ப்பு அதிகமிருக்கும்.

ஆயினும்-பாராளுமன்றத் தேர்தல் போல் அல்லாமல் திட்டவட்டமான வெற்றியை குறிவைத்து பொ.ஜ. முன்னணி வியூகம் வகுக்கும்.

தமது வாக்கு வங்கிகளை கைவிட்டுப் போகவிடாமலும், தமது பலத்தை நிரூபிக்கவும் ஐ.தே.கட்சி தனது சக்திகள் அனைத்தையும் பிரயோகிக்கும்.

ஆக, மற்றொரு திருவிழாவுக்கு நாடு ஆயத்தமாகவேண்டியதுதான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது-இராஜதந்திரி

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக இலங்கையில் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் எண்ணிலடங்காத விதத்தில் இடம்பெற்றிருந்தன.

இருந்தபோதிலும், ஜனநாயக ரீதியிலான மரபுகள் இலங்கையின் அரசியலிலிருந்தும் முற்றுமுழுதாக அற்றுப்போய்விடவில்லை என்பதனையே இத்தடவை பொதுத் தேர்தலின் பின்னர் இடம்பெற்ற சில நடவடிக்கைகள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

தேர்தல் முடிவுகள் வெளியாகியதையடுத்து பாராளுமன்றில் பெரும்பான்மைப் பலம் குறித்த விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்கள் தரப்பில் ஒரு 'விடாப்பிடி'யான தன்மை நிலவியிருந்தது.

சிறுபான்மை இனக் கட்சிகளை தம் பக்கம் சேர்த்து ஆட்சியமைப்பதில் முன்னைய ஆளுங்கட்சி உறுப்பினர்களில் பலர் தீவிர ஆர்வங்காட்டியிருந்தனர்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவும் ஐ.தே.க மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புக்களை இறுதி நேரம்வரை ஆராய்ந்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகி ஐ.தே.கவின் தோல்வி ஊர்ஜிதமானதும், முன்னாள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'அலரிமாளிகை'யிலிருந்து, ஜனாதிபதிமாளிகைக்குச் சென்று விதமே இலங்கையின் ஜனநாயக மரபுகளுக்கு ஒரு புத்துணர்வைத் தருவதாகவும் விளங்கியிருந்தது.

திரு.ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் தோல்வியையடுத்து, தமது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்ததுடன், பொது ஜன ஐக்கிய முன்னணியினருக்கு தடங்கல்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எதிலும் இறங்கியிருக்கவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி ஊர்ஜிதமானதும் திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து ஆட்சிமாற்றம் குறித்து உரையாடியுள்ளார்.

அப்போது அவர்கள் இருவருமே மனந்திறந்த நிலையில் தமது வெற்றி, தோல்வி குறித்த விடயங்களை ஆராய்ந்துள்ளனர். இதனையடுத்து திரு.ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் வெற்றியை ஏற்றுக்கொண்டு, ஜனாதிபதிக்கும் அது குறித்து அறிவித்தார்.


பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் புதிய பிரதம மந்திரியாக திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நியமிக்கப்பட்டதும், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'அலரி மாளிகை' யிலிருந்தும் காலந்தாழ்த்தாது விடை பெற்றுக்கொண்டார்.

புதிய ஆட்சியாளர்களைத் தாம் வரவேற்பதாகவும், மக்களின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாகவும் 'அலரி மாளிகை'யில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சில மாதங்களுக்கு முன்னர் பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தாமும் ஒரு பத்திரிகையாளனாக வாழ்க்கையை ஆரம்பிக்கவே விரும்பியதாகவும், ஆயினும் லேக் ஹவுஸ் (Lake House) நிறுவனம் அரச உடமையாக்கப்பட்டதையடுத்தே பத்திரிகைத் துறையில் பிரவேசிக்கும் எண்ணத்தைத் தாம் கைவிட்டதாகவும் திரு.ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை 'அலரி மாளிகை' (Temple Trees) கடந்த காலங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்திருந்தது.

1978ம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகமாகுமுன்னர், பிரதம மந்திரிப் பதவியே இலங்கையின் ஆட்சியதிகார விடயங்களில் முக்கியம் பெற்றிருந்தது.

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தது முதற்கொண்டு 1977ம் ஆண்டுவரை பாராளுமன்ற அரசியல் இலங்கையில் சிறப்பிடம்



அறைகள் தேவையில்லை எனவும் கூறி, அம்மாளிகையின் ஒரு சிறு பகுதியையே தமது உபயோகத்துக்கென திரு.தஹநாயக்கா பயன்படுத்தியிருந்தார் எனவும் கூறப்படுவதுண்டு.

1978ம் ஆண்டிலிருந்து 'அலரி மாளிகை'யின் முக்கியத்துவம் அருகியதுடன், ஜனாதிபதி மாளிகையே அரசியல் ரீதியாக சிறப்பிடம் பெறலாயிற்று.

கடந்த பதினேழு வருடகாலமாக நாட்டின் அரசியல் விடயங்களில் 'ஜனாதிபதி மாளிகை'யே முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இன்றுவரை மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளின் வாசஸ்தலமாக இருந்து அரசியல்ரீதியாக முக்கியம் பெற்றுள்ள ஜனாதிபதி மாளிகை தொடர்ந்து எவ்வளவு காலம் இந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் என்ற கேள்வி, இத்தடவை இடம்பெற்ற பொதுத் தேர்தலையடுத்து எழுந்துள்ளது.

பாராளுமன்ற அரசியலுக்குப் புறம்பான வகையில் ஜனாதிபதி ஆட்சிமுறையென்பது நாட்டின் ஆட்சியதிகார விடயங்களைப் பெரிதும் நிர்ணயிப்பதாக இருக்கின்றது.

இலங்கையில் கடந்த பதினேழு வருடகால நிறைவேற்று அதிகார ஆட்சி முறையின் சாதக- பாதக விளைவுகள் ஒரு பரந்துபட்ட விவாதத்துக்குரியதாகவே அவரால் எத்தகைய ஆரோக்கியமான தீர்வையும் கொண்டுவர முடியாதிருந்தது.

திரு.ஜயவர்த்தனா இந்திய அரசின் துணையுடன் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் கொண்டுவந்திருந்த இலங்கை-இந்திய ஒப்பந்தமும் ஓர் ஆரோக்கியமான தீர்வை எட்டத் தவறியிருந்தது.

1977ம் ஆண்டில் பதவிக்கு வந்த திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா, "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்றுகூறி வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளுக்கும் சவால் விட்டிருந்தார்.

நிதானமாக, ஜனநாயக மரபுகளைத் தழுவிய கருத்துக் கண்ணோட்டங்களுக்கு முக்கியமளிக்க வேண்டியவராக இருந்த திரு.ஜயவர்த்தனா, இராணுவ ரீதியிலான விஸ்தரிப்பையும் தமது 'தாராள அரசியல்' கொள்கைகளில் ஒன்றாகச் சேர்த்திருந்தார்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் 1977ம் ஆண்டில் கவச வாகனங்களையும், படைவீரர்களையும் பெருமளவில் அனுப்பி வைத்து, குடாநாட்டில் இராணுவ முஸ்தீபுகளுக்கு ஜே.ஆர் அரசு தூபமிட்டிருந்தது.

தொடர்ந்து 1983ம் ஆண்டில் வெடித்த இனக்கலவரத்தையடுத்து

# பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற ஆட்சிக்கு இடைஞ்சலாக இருக்கும் ஐ.தே.கவின் ஜனாதிபதி ஆட்சி!

தமது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யும் கடிதத்தை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவிடம் சமர்ப்பித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அக்கடிதத்தை ஏற்க மறுத்து, வெற்றி, தோல்விகள் குறித்து தேர்தல் ஆணையாளர் விசேட வர்த்தமானி மூலமாக அறிவிக்கும்வரை பொறுத்திருக்கும்படி திரு.ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டிருந்தார்.

இதற்கிடையில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட திரு.காமினி திசாநாயக்கா உட்பட ஐ.தே.க உறுப்பினர்கள் சிலர் தேர்தலில் வென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்தி அவர்களின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.எம்.எச்.எம். அஷ்ரப்பிற்கு விசேட ஹெலிகாப்டர் ஒன்றை அனுப்பி கிழக்கிலிருந்தும் அவரை வரவழைத்து, அவரது ஆதரவை ஐ.தே.க தரப்பிற்கு பெறும் முயற்சிகளும் இடம்பெற்றிருந்தன.

ஆனால் திரு.அஷ்ரப், பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிப்பது என்ற தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததுடன், ஜனாதிபதி உட்பட அவரைச் சந்திக்க விரும்பிய ஐ.தே.க உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு திரு.அஷ்ரப் மறுத்திருந்தார்.

இறுதியாக ஐ.தே.க வின் 'ஆட் சேர்க்கும்' முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்தே, பொதுஜன ஐக்கிய முன்னணியின் வசம் பாராளுமன்ற ஆட்சி கைமாறியிருந்தது.

இந்த ஆட்சிமாற்ற விடயத்தில் முன்னாள் பிரதமர் திரு.ரணில் விக்கிரமசிங்க நடந்துகொண்ட திரு.ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டதுடன் மகாநாடு முடிந்து பத்திரிகையாளர்கள் 'அலரி மாளிகை'யிலிருந்து புறப்பட்டபோதே, தாமும் அம்மாளிகையிலிருந்து தமது உடமைகளுடன் வெளியேறினார்.

திரு.ரணில் விக்கிரமசிங்கவின் இச் செயலே இலங்கையில் ஜனநாயக மரபுகள் முற்றிலுமாகப் பட்டுப் போய் விடவில்லை என்பதை உணர்த்துவதாக இருந்தது.

'அலரி மாளிகை'யில் தாம் இறுதியாக நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டையடுத்து தமது ஒருவருடகால 'அலரி மாளிகை' வாழ்க்கையையும் முடித்துக்கொண்டவராக திரு.ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்தும் வெளியேறியிருந்தார்.



## அலரிமாளிகைக்குப் பெருமை சேர்த்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

திரு.ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை பத்திரிகைத் தொழில் அவரது இரத்தத்திலும் இருக்கவே காணப்படுகின்றது.

இலங்கையின் புராதன பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் (Lake House) ஸ்தாபனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜேவர்த்தன திரு.ரணில் விக்கிரமசிங்கவின் பாட்டனாராவார்.

இது தவிர திரு.ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் அமரர் எஸ்மன்ட் விக்கிரமசிங்க ஒரு சிறந்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், இலங்கையின் பிரபல இராஜதந்திரியாகவும் விளங்கியிருந்தார்.

பெற்றிருந்தது. பிரிட்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் (West Minster) பாணியைத் தழுவியதாக பாராளுமன்ற நடைமுறைகள் விளங்கியிருந்தன.

அப்போதெல்லாம் 'அலரி மாளிகை'யின் அரசியல் சமாச்சாரங்களே இலங்கையில் முக்கியம் பெற்றிருந்தன. இலங்கையில் பதவிக்கு வந்த அனைத்து பிரதம மந்திரிமாரும் 'அலரி மாளிகை'யில் வாசஞ் செய்து முக்கிய பேச்சுவார்த்தைகள், சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இலங்கைப் பிரதமர்களில் 1959ம் ஆண்டு செப்டெம்பர் முதல் 1960ம் ஆண்டு மார்ச் மாதம்வரை மிகக் குறுகிய காலம் பதவி வகித்த திரு.டபிள்யூ. தஹநாயக்கா கூட 'அலரி மாளிகை'யில் தங்கியிருந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

தாம் ஒரு தனிநபர் என்றும், தமக்கு 'அலரி மாளிகையின் விஸ்தாரமான

இருக்கின்றன.

தனி ஒரு நபரிடம் ஆட்சியதிகாரங்கள் குவிந்திருந்த நிலையில், நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்பு விடயங்களில் பெருமளவு ஆதிக்கத்தைச் செலுத்துவதாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை விளங்கியிருக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையைக்கொண்டு வந்து இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக திரு.ஜே.ஆர். ஜயவர்த்தனா 1978ம் ஆண்டிலிருந்து 1989ம் ஆண்டுவரை பதினொரு வருடகாலம் ஆட்சியிலிருந்தார்.

திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றி ஒரு தடவை விமர்சிக்கையில், "ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாக மட்டும் என்னால் மாற்ற முடியாது; மற்றதையெல்லாம் என்னால் மாற்றியமைக்க முடியும்" என்று கூறியிருந்தார்.

ஆயினும் இலங்கையின் இனப்பிரச்னை குறித்து துணிகரமான, உறுதியான தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா தோல்வி கண்டிருந்தார்.

அவரிடமிருந்த நிறைவேற்று அதிகாரம், இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளுக்கே முக்கியத்துவமளிப்பதாகக் காணப்பட்டது. அரசியல் ரீதியாக அரசியல், இராணுவ ரீதியாக இலங்கையில் இடம்பெற்ற நடவடிக்கைகள், இலங்கையின் சர்ச்சைக்குரிய வடக்கு- கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அர்த்தமுள்ள தீர்வை எட்டத் தவறியவையாகவே இருந்து வருகின்றன.

இந்நிலையில் இன்று பாராளுமன்ற ஆட்சியை பொதுஜன ஐக்கிய முன்னணியும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சியும் கொண்டிருக்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றியுள்ள போதிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி தற்போது ஐ.தே.கவின் கரங்களிலேயே இருக்கின்றது. இந்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் ஒரு முழுமையான ஆட்சியை மேற்கொள்வது கடினமாகவே இருக்கும்.

இந்நிலையில் ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் நடவடிக்கைகளுக்கு கூடுதல் அதிகாரங்களுடன், தனிநபர் ஒருவர் மூலமான ஐ.தே.கவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஓர் இடைஞ்சலாகவே இருக்கின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தமது தேர்தல் பிரசாரங்களின்போது, தாம் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கப் போவதாக அறிவித்திருந்தனர்.

இன்னும் மூன்று மாதகாலத்தில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் அத்தேர்தலின் முடிவைப் பொறுத்தே பொதுஜன ஐக்கிய முன்னணியினால் அதன் அரசியல் அபிலாஷைகளை முழுமையாக நிறைவேற்றும் சுழ்நிலைகளை உருவாக்கிக்கொள்ள முடியும்.

# ஏன்— எதற்கு— எப்படி?



## லேடீஸ் ஸ்பெஷல்

# இது பெண்கள் கவனத்திற்கு

செயற்பாடு. மாதவிடாய் ஒழுங்காக இல்லாத பெண் தாய்மையடைய முடியாது. சாதாரணமாக சகல பெண்களும் அறிந்து வைத்துள்ள உண்மை இது. ஆகவே இதனை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

இருப்பினும், மாதவிடாய் வருவது முற்றாக நின்றுபோகும் கட்டம் பெண்களுக்கு மிக முக்கியமான காலமாகும். மாதவிடாய் தொடங்கும் காலம் பெண்களுக்கு பெரும் கொண்டாட்டமாகக் கருதப்படுவதுபோல் மாதவிடாய் நின்றுபோகும் (வயோதிப) காலம் ஒரு அங்கத்தின் முடிவாகக் கருதப்படுகிறது.

ஒரு பெண் கர்ப்பம் தரிக்கும்போது மாதவிடாய் தடைப்படுகிறது. ஆனால் இது நிரந்தரமானதல்ல. குழந்தை பிறந்து சில மாதங்களில் மீண்டும் தொடங்கிவிடும். ஆனால் பெண் முதுமை அடையும்போது மாதவிடாய் நின்றுபோனால் அது மீண்டும் தொடங்குவதில்லை. இந்த மாற்றம் ஏற்படும் போது பெண் சில விசித்திர நோய்களுக்குள்ளாகிறாள். காய்ச்சல், உடல்வலி, சோர்வு போன்ற முரணான தாக்கங்கள் ஏற்படுகின்றன. அவளின் மனதிலும் பலதரப்பட்ட சிந்தனைகள் எழுகின்றன. முக்கியமாக பய உணர்வும் அதிகரிக்கிறது.

குழந்தைப் பேறற்ற பெண்களை இத்தகைய தாக்கங்கள் பாதிப்பதில்லை. பல பிள்ளைகளைப் பெற்ற தாய் இக்கால கட்டத்தில், ஏதோ இழக்க முடியாத ஒன்றை இழந்துவிட்டதாக வேதனைக்குள்ளாகிறாள்.

முதுமை அடைந்த பெண்களுக்குத்தான் மாதவிடாய் முற்றாக நின்று போய்விடுகிறது என்பதில்லை. சில பெண்களுக்கு 20க்கும் 30 வயதுக்குமிடைப்பட்ட காலத்திலேயே நின்று போவதுமுண்டு. 'எஸ்ட்ரோஜென்' என்ற சுரப்புதான் மாதவிடாய்க்கான தூண்டு சக்தியாக விளங்குகிறது. இதனை மூளையுடன் தொடர்புடைய சுரப்பி ஒன்றே சுரக்கிறது. போதுமான முதுமை அடைவதற்கு முன்னர் மாதவிடாய் நின்று போகும் அறிகுறிகள் தென்பட்டால் செயற்கை முறையில் 'எஸ்ட்ரோஜென்' உடலில் செலுத்தும் சிகிச்சை மேற்கொள்ளப்படலாம். இந்தச் செயற்கை சுரப்பினால் மயக்கம், தடுமாற்றம் போன்ற பக்க விளைவுகள் ஏற்படக்கூடும்.

மாதவிடாய் நின்றுபோனால் பெரும் பாலானோருக்கு பாலியலிலும் விருப்ப மற்றுப் போய்விடுவதுண்டு. இருப்பினும் சிலருக்கு விருப்பம் குறைவதில்லை. அது மட்டுமல்லாமல் வேறு சிலருக்கு முன்பிருந்ததைப் பார்க்கிலும் பாலியல் விருப்புக்கள் அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.



பெண்களைப் பொறுத்தவரை மாதவிடாய் என்பது தாய்மை அடைவதற்கு இன்றியமையாத ஒரு நடைமுறைச்

# குழந்தை வளர்ப்பிற்கு சில ஆலோசனைகள்!



குழந்தையின் எடையை தெரிந்துகொண்டு, ஒரு பவுண்டு எடைக்கு இரண்டரை அவுன்ஸ் என்ற கணக்கில் அதற்கு பால் கொடுத்து வந்தால் குழந்தை ஆரோக்கியமாகவும், புஷ்டியாகவும் வளரும்.

- குழந்தைகளுக்கு இனிப்பான பொருட்களை (தேனையும், தேன் கலந்த பொருட்களாகவும்) கொடுத்தால் குழந்தைகளின் பற்கள் கெட்டுப்போகாமலும், அவர்களுடைய உடல் வளர்ச்சி விரைவாகவும் இருக்கும்.
- குழந்தைகளுக்கு கரப்பான் புண் வந்தால் மஞ்சளையும், வேப்பிலையையும் அரைத்துப் பூச குணமாகும்.
- படுக்கப் போவதற்கு முன்பு குழந்தைகளுக்கு இரண்டு ஸ்பூன் தேன் கொடுத்தால் படுக்கையில் அவை சிறுநீர் கழிக்காது.
- ஆரஞ்சுப்பழச் சாற்றை பாலுடன் குழந்தைகளுக்கு கலந்து கொடுத்தால் குழந்தைகள் மலச்சிக்கல் இல்லாமல் உடல் ஆரோக்கியத்துடன் வளரும்.
- குழந்தைகளுக்கு தின்ன பச்சை கேரட்டை கொடுத்து வந்தால் பற்கள் ஆரோக்கியமாக வளரும்.
- தயிரை கொஞ்சமாக உணவில் சேர்க்க வேண்டும். அதிகமாக தயிரை சேர்த்தால் குழந்தைகளின் கண் பார்வை பாதிக்கக்கூடும்.
- வயிற்றில் பூச்சி இருந்தால், இரவில் இனிப்பான மாதுளம் பழத்தை சாப்பிடக் கொடுக்க வேண்டும். காலையில் பேதிக்கு மருந்து கொடுத்தால் குழந்தையின் வயிற்றிலுள்ள பூச்சிகள் வெளியேறி விடும்.


# வாழ்க்கையில் வெற்றியீட்ட

## சில சாதாரண வழிகள்

இங்கு தரப்பட்டுள்ள சில ஆலோசனைகளின் அடிப்படையில் நீங்கள் செயற்பட்டால் நீங்கள் நினைத்தபடி வெற்றியீட்டலாம்.

எத்துறையில் வெற்றிபெற வேண்டும் என்பதனை நிச்சயமாகத் தெரிவு செய்யுங்கள்.

நல்ல தொழில் கிடைக்க வேண்டுமா? சமுதாயத்தில் சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமா? எடையில் 10 இறாத்தல் குறைக்க வேண்டுமா? ஏதாவது ஓர் அம்சத்தை ஒரே வேளையில் தெரிவு செய்யுங்கள். அந்த அம்சத்தில் வெற்றியீட்டுவதற்கான புலனை முழுமையாக அதிலேயே செலுத்துங்கள்.



- வெற்றி என்பது வெறுமனே வந்து சேர்வதில்லை. அதற்காக கடுமையாக உழைக்க வேண்டும். உங்களுடைய இலக்கு எது என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு அதனை நோக்கி உங்கள்

## நினைத்ததை முடிக்க இதனையும் படிக்கவும்!

செயற்திட்டங்களை முழுமையாக நகர்த்த வேண்டும்.

- நீங்கள் எத்தகைய குறிக்கோளை அடைய விருப்பங்கொண்டிருக்கிறீர்கள் என்ற உண்மையினை எல்லோரிடமும் கூற வேண்டியதில்லை.

உங்களை நோக்கியே பலர் காத்துக் கொண்டிருப்பார்கள். எடுத்துக்காட்டாக, நீங்கள் உங்களது எடையினைக் குறைக்க உணவுக் கட்டுப்பாட்டை அனுசரித்து வருவது தெரிந்தால் உங்களை அவர்கள் விமர்சித்து, உங்களை செயலிழக்க வைத்து விடக்கூடும்.

- சும்மா இருந்துவிட்டால் உங்களை நாடி வெற்றி ஓடிவரப் போவதில்லை.

வெற்றியை நோக்கியே உங்கள் செயற்பாடுகள் நகர்த்தப்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் உங்கள் வெற்றி இலக்கினை நோக்கி ஒவ்வொரு அடியாவது எடுத்து வைக்கப்பட வேண்டும்.

- உங்கள் இலக்கு என்ன?, அதனை அடைவதற்காக நீங்கள் வகுத்துள்ள திட்டம் என்ன? என்பதனை திடப்படுத்திக்கொள்ளுங்கள்.

சமுதாய வாழ்வில்-குறிப்பாக அரசியல் துறையில் இறங்க வேண்டும் என்ற கருத்து இருக்குமானால் அதனை எவ்வாறு அணுகப் போகிறீர்கள் என்பதனை நிரைப்படுத்துங்கள். புதிய மனிதர்களை அறிமுகம் செய்து கொள்ள உங்கள் நண்பர்களின் உதவியினை நாடப் போகிறீர்களா? அல்லது நீங்களாகவே நேரடியாக அந்த முயற்சிகளில் இறங்கப் போகிறீர்களா?

- போதுமான அவகாசம் தேவை. எடுத்த எடுப்பில் ஒரே நாளில் உங்கள் இலட்சியம் ஈடேறப் போவதில்லை.

ஆகவே நிதானமாக- ஒவ்வொரு அடியாக எடுத்து வையுங்கள்.

சிறிய மாற்றங்களே பெரிய மாற்றங்களுக்கு வழிகோலக்கூடியவை. சிறிய அளவில் மெதுவாக நடைபெறும் மாற்றங்களே நீடித்த பலனைத் தரவல்லன.

பணம் சேர்க்க வேண்டும் என்ற நோக்கமிருக்குமானால் உங்கள் வருமானத்தில் 10 சதவீதத்தையாவது சேமித்து வாருங்கள். உங்கள் செலவினங்களில் அவசியமற்றவற்றை தவிர்த்துவிடலாம். சிறு துளி பெருவெள்ளமாவது போல் சிறு சேமிப்பு நாளாவட்டத்தில் பெருந் தொகையாக வளரும்.

- தோல்விகளையும் எதிர்கொள்ளும் திராணி அவசியம்.

உணவுக் கட்டுப்பாட்டுக் காலங்களில் எதிர்பாராத விதமாக ஒரு விருந்தில் அதிக கலோரி உணவினை உட்கொள்ள நேர்ந்தால், அதனை தேகப்பயிற்சியை சற்றுக் கூடுதலாகச் செய்து சமாளித்து விடலாம். இதேபோல உங்கள் இலட்சியத்தை அடைய இடையூறுகள் குறுக்கிட்டாலும் மாற்று மார்க்கம் மூலமாக ஈடுசெய்து விடவேண்டும்.

- தோல்விகண்டு துவண்டு போகாமல் மீண்டும் முயற்சியிலிறங்க வேண்டும். மீண்டும் எடுக்கும் முயற்சியில் வெற்றி கிட்டுவது நிச்சயம் என்ற துணிவுடன் இறங்க வேண்டும். வெற்றி வாய்ப்பில்லை என்று பின் வாங்கினால் அத்துடன் எல்லாமே முடிவுகண்டு விடும். தவறு நேர்ந்தமைக்கான காரணத்தை அறிந்து அதனைத் திருத்திக்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொன்றுக்கும் தியாக மனப்பான்மையும் அவசியம் என்பதை மறந்துவிடலாகாது.


பொருளாதாரத்தில் வெற்றி கண்ட பலரும் பல இழப்புக்களை ஏற்கனவே கண்டுள்ளனர். ஒரு சிறந்த வர்த்தகர் வெற்றி பெற்றவராகக் கருதப்படலாம்; என்றாலும்கூட அவருக்கு போதுமான ஓய்வு கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் கூடவே இருக்கும்.

# நீங்களும் தைக்கலாம்


எஸ்.எஸ்.

## நங்கையருக்கான நவீன சட்டை

**சட்டையின் மார்பளவு 34 அங்குலம்**
**சட்டையின் நீளம் 16 அங்குலம்**
**இடுப்பு அளவு 34 அங்குலம்**
**கை நீளம் 9 1/2 அங்குலம்**
**கை அகலம் 10÷2 அங்குலம்**
**மேற் சட்டையுடன் பொருத்தக்கூடிய கீழ் பாவாடையின் அளவுகள்**
**படம் 3ல் காட்டப்பட்ட முக்கோணம் 34÷2 அங்குலம்**
**முக்கோண நடுப்பகுதி நீளம் 7 அங்குலம்**
**பாவாடையின் நீளம் 20 அங்குலம்**




17 அங்குல அகலமும் 17 அங்குல நீளமுமான 2 துணியினை எடுக்கவும். எடுத்த துணிக்கு A,B,C,D என்று குறித்துக்கொண்டு Aயிலிருந்து Sவரை 5 1/2 அங்குலம் அளந்து புள்ளியிடுக. S இலிருந்து Tவரை 4 1/2 அங்குலம் அளந்து புள்ளியிடுக. Sஇலிருந்து Rவரை 7 அங்குலம் வளைவாக வரைந்து கை வடிவத்தை அமைக்குக. TD பகுதியை செங்குத்து சரிவாக வெட்டவும். அதனையடுத்து RQ பகுதியை CQ இடையில் 1 1/2 அங்குலம் கழித்துவிட்டால் சட்டை உடலமைப்பு வந்துவிடும் இவ்வாறு 2 துண்டினை வெட்டி எடுக்கவும்.





பின்பக்க கழுத்திற்கு சிறு அரைவட்ட வடிவில் ஒரு அங்குல பதிவில் வெட்டி எடுத்தல் வேண்டும். முன் பகுதியைப் போன்று. செங்குத்து சரிவு தேவையில்லை. இவ்வாறு வெட்டப்பட்ட பகுதியின் முன் Dப் பகுதியை ஒன்றன்மேல் வைத்து கழுத்து Vவடிவம் வந்ததும் அதில் சுலபத்திற்காக சிறுதையல் இடவும். இவ்வாறு இனி தோள்பகுதி எல்லா அமைப்புகளும் புரிந்துள்ளது தானே?

அடுத்து கைப்பகுதிக்கு வருவோம். E-F 10+10 அங்குல அகலமுமானFH 9 1/2 அங்குல நீளமுமான சதுர துணியை எடுத்து சரிசமனாக மடிக்கவும். அப்பகுதியில் Hலிருந்து Pவரை 5 1/2 அங்குலம் அளந்து புள்ளி இடவும். E,Oவரை 3 1/2 அங்குலம் அளந்து புள்ளியிடவும். புள்ளியிட்ட O உடன் Pஐ இணைக்குக. இணைத்தையடுத்து, OF பகுதியை வளைவாக இணைக்கவும். இவ்வாறு அமைத்தபின் வெட்டிக்கொள்ளவும். கையின் கீழ்ப்பகுதிக்கு 1 1/2 அங்குல அளவிலான வேறு துணியினை பொருத்தவும்.

***சட்டையாக்குவதற்கான பாவாடையின் அளவுகளும் அமைப்பும்.***

*I-J = 17 அங்குலம்*

*J-L = 7 அங்குலம். இப்பகுதியை படம் 3ல் காட்டப்பட்டவாறு V வடிவில் வெட்டவும். இவ்வாறு இன்னோர் பகுதியை வெட்டவும்.*




அப்பகுதிகளோடு கீழே பாவாடைக்கான 20 அங்குல நீளமும் 34 அங்குல அகலமுமான துணியினை எடுத்து படம் 3ல் காட்டப்பட்ட பகுதியில் சேர்த்து சிறுசிறு சுருக்கிட்டு பாவாடையின் அமைப்பினை ஏற்படுத்தி கவுணின் அமைப்பை அழகாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் அழகுக்கேற்ற மாதிரி நீங்கள் விரும்பும் கலர், பட்டின் என்பவற்றை பயன்படுத்தலாம்.

## பங்குபற்றியோர் கவனிக்க

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து நடத்திய தங்க நகைப் பரிசுத்திட்ட முடிவுகள் முரசு 68ல் வெளியாகும்

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

- *50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.*

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 5**
**உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை**

- *பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.*
- *பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.*
- *நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.*
- *மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.*
- *கூப்பன்களை பத்திரமாக சேகரியுங்கள்.*

*உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே!*

## சமைப்போம் சுவைப்போம்


தொகுத்துத் தருவது—சுகந்தினி

### கரட் மோலி

**தேவையானவை:**
**கரட் 1/4 கிலோ**
**பெரிய வெங்காயம்-3**
**தக்காளி 1/4 கிலோ**
**தேங்காய்த் துருவல் 1/2 கோப்பை**
**பச்சைக் கொத்தமல்லி ஒரு கட்டு**
**பச்சை மிளகாய்-6**
**இஞ்சி 2 அங்குலத் துண்டு**
**உள்ளி-4 பல்**
**உப்பு தேவையான அளவு**
**எண்ணெய் 2 மேசைக்கரண்டி**

***செய்முறை:***

1. இஞ்சி, உள்ளி இரண்டையும் அரைத்து வைத்துக்கொள்ளவும்.
2. பச்சைமிளகாயையும், கொத்தமல்லியையும் அரைத்து வைத்துக் கொள்ளவும்
3. தக்காளிப் பழத்தை வெந்நீரில் போட்டுத் தோலை உரித்து எடுத்துவிட்டுப் பிழிந்து வைத்துக்கொள்ளவும்.
4. தேங்காயை அரைத்துப் பால் பிழிந்து வைத்துக்கொள்ளவும்.
5. வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
6. கரட்டின் தோலைச்சீவி வட்டங்களாக வெட்டிக்கொள்ளவும். தேவையான அளவு உப்புச் சேர்த்து, சிறிது நீர்விட்டுப் பாதி வெந்ததும் இறக்கிவிடவும். அதிகமாக வேகவைக்கக்கூடாது



7. வாணலியில் 2 மேசைக்கரண்டி எண்ணெய் விட்டு எண்ணெய் கொதித்ததும் வெங்காயத்தைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்துக்கொள்ளவும்.
8. அரைத்த இஞ்சி, உள்ளி விழுதைப் போட்டுச் சிறிது நேரம் வதக்கவும்.
9. பிறகு பச்சைக் கொத்தமல்லி, பச்சை மிளகாய் சேர்த்து, அரைத்த விழுதையும் போட்டு வதக்கவும்.
10. தக்காளிச் சாறு, தேங்காய்ப்பால் இரண்டையும் சேர்க்கவும். தேவையான அளவு உப்பையும் சேர்க்கவும்.
11. வேகவைத்த கரட்டை சேர்க்கவும். 5 அல்லது 10 நிமிடங்கள் கொதிக்க விடவும். சாதம், சப்பாத்தி, பூரி முதலியவற்றுடன் இதைப் பரிமாறலாம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



## அசைய முடியாது அன்று - ஆடவும் முடியும் இன்று

# எத்தனை எடை குறைந்து போனது? எப்படி இது நடந்து முடிந்தது?!

**ரொஸ்லி பிராட்ஃபோர்ட் 10 வருடங்களுக்கு முன்னர் 1050 இறாத்தல் எடைகொண்ட பூதாகார உருவமைப்புடன் வாழ்ந்தாள். எங்குமே எழுந்து நடமாட முடியாமல் ஓர் அறையினுள் அடைபட்டுக்கிடந்தாள். 1987ம் ஆண்டு கின்னஸ் சாதனைப் புத்தகம் 'உலகின் எடை கூடிய பெண்மணி' என்று இவரைப் பதிவு செய்தது. அதேபோல் கடந்த இரு வருடங்களில் கன வேகமாக தனது எடையினை 736 இறாத்தலால் குறைத்து மற்றுமொரு சாதனை படைத்துவிட்டார்.**

அதுமட்டுமல்லாமல் ஆடஅசைய முடியாதமையினால் தனது பட்டப்படிப்பை இடை நிறுத்தியிருந்த ரொஸ்லி மீண்டும் பல்கலைக்கழக வகுப்புகளில் சேர்ந்து உளவியல் துறையில் பட்டதாரியுமாகி விட்டார். பென்சில்வேனியாவில் செல்லேஸ்வில்லி நகரில் கணவன் பொப் மற்றும் மகன் றொப்புடனும் வாழ்ந்து வரும் ரொஸ்லி இப்பொழுது நாடு முழுவதும் எடை குறைப்புக்கான ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

கண்ட கண்டவற்றையெல்லாம் கால நேரம் பாராமல் உண்டமையினால் கன வேகமாக உடல் வளர ஆரம்பித்தது. கூடவே உடலின் உறுப்புக்களுக்கு வேண்டிய உழைப்பற்று-சுறுசுறுப்பும் குறைந்தமையால் சோம்பலும் அதிகரித்தது. எவருடைய அறிவுரையையும் செவி மடுக்காமல் அறையினுள் அடக்கிக் கிடந்தமையினால் தொடர்ந்து கொழுப்பு அதிகரித்தது. தன்னைத்தானே கவனிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் இல்லாமல் போகவே நிலமை மோசமடைந்தது.

இடையில் ரொஸ்லி இருதயக் கோளாறினால் பாதிக்கப்பட்டபோதுதான் இவருக்கு உயிரின் மேல் ஆசை ஏற்பட்டது. றிச்சாட் சிம்மன்ஸ் என்ற குருவின் அனுசரணையும் கிடைத்தது. றிச்சாட்டின் அறிவுரைகள் பலன் அளித்தமையினால் உணவுக் கட்டுப்பாடு கைக்கொள்ளப்பட்டதுடன் மெல்ல மெல்லப் பயிற்சியினையும் ஆரம்பித்தார். படிப்படியாக உடலின் எடை குறைந்தது. உருவ அமைப்பும் மாறியது. இப்பொழுது ரொஸ்லியின் எடை 285 இறாத்தல். இருவருடங்களில் 736 இறாத்தலைக் குறைத்துக்கொண்ட இவர் விரைவில் 175 இறாத்தல் மட்டுமே எடை கொண்டவராக மாற திடசங்கற்பம் கொண்டுள்ளார்.

உடல் எடையினைக் குறைக்கும் வழிமுறைகளைச் சொல்லித் தரும் நிறுவனம் ஒன்றினை நிறுவி பலருக்கும் உதவி வருகிறார் இவர்.





இப்படி ஆனது | இப்படி இருந்து

## விபத்தில் சிக்கிய உயர்ந்த மனிதன்

### ஆயினும் வளர்ச்சி தடைப்படவில்லை



உலகின் அதி உயரமான மனிதன்-பாகிஸ்தானைச் சேர்ந்த மொகமட் ஆலம் சன்னா (வயது 41) ஆகஸ்ட் முதலாம் திகதி ஒரு விபத்தில் சிக்கினார். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நாவாஸ் ஷரீப் பிரத்தியேகமாக வடிவமைக்க வைத்து ஆலம் சன்னாவுக்கு அளித்த சக்கி மோட்டார் வண்டி இவ்விபத்தில் மிக மோசமாக சிதறிவிட்டது. சாரதியும் தப்பித்துக் கொண்டார். ஆனால் ஆலம் சன்னாவின் இடதுகால் எலும்பு முறிந்துவிட்டது. கராச்சியிலுள்ள அகாகான் மருத்துவமனையில் குணமடைந்து வருகிறார்.

கனடா-ரொறன்ரோவில் ஆகஸ்ட் 14ல் நடைபெற்ற பாகிஸ்தான் சுதந்திரதின விழாவில் கலந்துகொள்ள திட்டமிட்டிருந்தார். விபத்தினால் இவருடைய பயணம் தடைப்பட்டுவிட்டது.

ஆலம் சன்னாவின் உடலுறுப்புக்கள் இயல்பாகவே தொடர்ந்து வளர்ந்து கொண்டிருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். இப்பொழுது அவருடைய உயரம்: 233.6 செ.மீட்டர் (7 அடி 8 அங்குலம்)

தனது மனைவி மகனுடன் ஆலம் சன்னா காணப்படுகிறார்.



## பந்தாடியது காளை

தமிழ் நாட்டில் தைப்பொங்கல் தினத்தை அடுத்து மஞ்சிவிரட்டு என்று அழைக்கப்படும்-நாலுகால் காளைகளுடன் இரண்டுகால் (மனிதக்) காளைகள் மோதி அடக்கும் வீர விளையாட்டுகள் நடைபெறுவதுண்டு. மேற்குலகில் மெக்சிக்கோவில் பிரபலமாகவிருந்த இந்த-உயிரைப் பணயம் வைத்தாடும்-விளையாட்டு இப்பொழுது எங்கும் பரவலாக நடைபெறுகிறது. அமெரிக்காவில் நிவேடா மாநிலத்தில் உள்ள களியாட்ட நகரான லா வேஜசிலும் இது பிரபலம் பெற்றுவருகிறது. அண்மையில் இங்கு நடைபெற்ற காளை அடக்கும் போட்டியில் இரு வீரர்களை முரட்டுக் காளை பந்தாடியது. ஆனால் இதில் விதூஷகன் வேடம் புனைந்த நபருக்கு மட்டும் தோளில் காயம்பட்டது. இருவரும் அழுக்கினை உடலெங்கும் பூசிக்கொண்டார்களே தவிர தப்பிப் பிழைத்துவிட்டார்கள்.

அதிஷ்டம் கைகொடுத்துக் காப்பாற்றி விட்டது. தலை மட்டுமல்ல; உடல் தப்பியதும் தம்பிரான் புண்ணியம்!



## வயதில் சிறிசு-அறிவில் பெரிசு

### 16 வயதில் பார்வியக்கும் பையன்

[illegible] பல்கலைக்கழகத்தில் 13 வயது சிறுவன் விஞ்ஞானப் பட்டதாரியானான். மருத்துவப் படிப்பினை மேற்கொண்டு தனது 16 வயதில் டாக்டராகி விட இவன் திடசங்கற்பம் பூண்டுள்ளான்.

[illegible] ஆற்றல் படைத்த மொசெஸ் கார்கேஹாபாடி இவ்வாண்டு மருத்துவக் கல்லூரியில் நுழைகிறான். இவன் ஈடுபடும் எத்துறையிலும் மிக மிகச் சிறப்பான முறையில் பிரகாசிப்பதால் இவனை ஒரு 'பிறவி அறிஞன்' என்று எல்லோரும் [illegible]. ஆனால் மொசெஸ் இக்கூற்றினை ஏற்றுக்கொள்ளவில்லை. "நான் ஒரு திறமைசாலி மட்டுமே என்பதனை ஒத்துக்கொள்கிறேன்." என்கிறான்.

"நான் [illegible] மாணவர்களுடன் படிக்கும்போது மாணவனாகவே இருப்பேன். என் வயதினை ஒத்தவர்களுடன் சேர்ந்து விளையாடும்போது சிறுவனாக விளையாடுகிறேன்" என்று கூறும் மொசெஸ் தான் ஒரு [illegible] நிபுணனாகவோ [illegible] சிகிச்சை நிபுணனாகவோ வர விரும்புவதாகக் கூறுகிறான்.





# சி ளி வி சி ட்



ரோஜா-பார்த்திபன்
படம்-சரிகமபதநி

## சிறுவயதில் ஆரம்பம்

பன்னிரண்டு வயதில் இருந்தே நாடகங்களில் நடித்தவன் நான் என்று கூறுகிறார் கவுண்டமணி. சினிமாவில் பெரிய நடிகராக வேண்டும் என்று நினைத்து நடிக்கவந்தேன். நினைத்தபடி நடந்தாச்சு என்கிறார். சிரிப்பவர்கள் மிகக்குறைவு. கவலையை மறந்து சிரிக்க வேண்டும். அதுதான் நிம்மதிக்கு வழி என்கிறார் கவுண்டமணி.

## விஜயகாந்துக்கு பாடல் 'நோ'

விஜயகாந்த்-ரஞ்சிதா ஜோடி நடித்துவரும் படம் பெரிய மருது. மற்றும் ஒரு ஜோடி பிரகதி. இளையராஜா இசையில் 7 பாடல்கள் படத்தில் இருந்தாலும் விஜயகாந்துக்கு பாடல் காட்சியே கிடையாதாம்.

## உடும்புப்பிடி

ரன்ஷா ராண்டன் ஆக்சன் கிங்கை மடக்கிப் பிடிக்க நினைக்க, அவர் ஆளைவிடு போதும் என்று ஓடிய சமாச்சாரம் கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேசப்படுகிறது. ஆக்சன் கிங்கை ரன்ஷாவுக்கு பிடித்துவிட்டதாம். எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து தொலை பேசியில் துரத்துகிறாராம். 'கிங்' நழுவப் பார்க்கிறாராம்.

## வசந்த வாசல்

புது முகங்கள் கதாநாயகன் கதாநாயகியாக நடிக்க ராதாரவி-வடிவேலு ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் படம் 'வசந்த வாசல்'. படம் தயாராவதற்கு முன்னரே பாடல் ரெடியாகிவிட்டது. "புது ரோஜா தேனெடுத்துப் போகுது.. மனம்தானா பாட்டெடுத்துப் பாடுது." "என் காதலி, நீ என் கண்மணி, என் வாழ்விலே வசந்த பெண்மணி" என்று தொடரும் இரு பாடல்களையும் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடியுள்ளார். மாசா என்பவர் இசையமைத்துள்ளார்.

## முகப்பில் ராம்கி ரோகிணி-கஷ்மா

## கமல்தான் வழிகாட்டி தொடக்கிவைக்க அழைப்பு!

[illegible]



## நிஜத்திலும் மாணவி

நாகிரெட்டியாரின் 'நம்மவர்' படத்தில் இரண்டு கதாநாயகிகள் நடிக்கிறார்கள். ஒருவர் கௌதமி. இன்னொருவர் புதுமுகம் பிருந்தா. இவர் நடன இயக்குநர் கலாவின் தங்கை.

பேராசிரியராக நடிக்கும் கமலின் மாணவியாக நடித்து வரும் பிருந்தா, உண்மையிலேயே கல்லூரியில் படித்து வரும் மாணவி ஆவார். படிக்கும்போதே நடித்து விட்டு, படிக்கப்போகும் போது கூச்சமாக இருக்கிறதாம்.

## நேர்மையான மந்திரி

'அடுத்த கட்டம்' படத்தில் சத்தியமூர்த்தி என்னும் பெயரில் உள்ள நேர்மையான மந்திரியாக நடிக்கிறார் விஜயகுமார். முன்னர் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தவர் சத்திய மூர்த்தி. அவரது பெயரையே விஜயகுமாரின் பாத்திரத்திற்கு சூட்டியுள்ளார்கள்.

## நாயகன் விஜய்-படம்- தேவா

எஸ்.ஏ. சந்திரசேகர் தனது மகன் விஜய் படிப்பை முடிக்கட்டும் என்று முன்னர் முடிவு செய்திருந்தார். இப்போது முடிவை மாற்றிவிட்டார். காரணம், 'ரசிகன்' படம் நன்றாகப் போயிருப்பதுதான். சூட்டோடு சூடாக அடுத்த படத்தை விட்டால்தான் மார்க்கட் நிலைக்கும் என்பதால், புதிய படத்திலும் மகனை நடிக்கவைக்க தீர்மானித்துவிட்டார்.

படத்தின் பெயர் 'தேவா'. விஜய்-சுவாதி ஜோடி. சுவாதி இருப்பதால் 'ரசிகன்' போல் கவர்ச்சியை நிச்சயம் எதிர்பார்க்கலாம். போதாக்குறைக்கு ஆந்திர அழகி ஒருவரும் நடிக்கப் போகிறார். தணிக்கைக்குழுவின் கத்தரி நிறையச் சாப்பிட இடமிருக்கும்.

## இளவரசிக்கு யோகம்

காணாமல் போன கதாநாயகிகள் பட்டியலில் இருந்த இளவரசிக்கு யோகம் வந்துவிட்டது. 'கவுரவ சாம்ராஜ்யம்' என்னும் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். அதுவும் சாதாரண கதாநாயகி அல்ல. பெண்களை பலாத்காரம் செய்யும் வில்லன்களை எதிர்த்துப் போராடும் வீர நாயகி. குமரன்-பாண்டியன் என்னும் இருவர் கதாநாயகர்களாக அறிமுகமாகிறார்கள்.

## தமிழச்சி வரப்போறா

நெப்போலியன் காட்டில் மழை. அடுத்தடுத்து அவர் வசம் புதிய படங்கள். 'தாமரை' படம் திரைக்கு வந்துவிட்டது. என்றாலும் 'சீவலப்பேரி பாண்டிக்கு' ஓடுமா-பேசப்படுமா என்று தெரியவில்லை.

நெப்போலியன்-ரஞ்சிதா நடித்துள்ள 'தமிழச்சி' படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துவிட்டது. இரண்டாவது கட்ட படப்பிடிப்பு விரைவில் முடியப் போகிறது.

## மற்றுமொரு 'சாம்ராட்'

கன்னட சுப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தன் நடித்து கன்னடத்தில் வசூல் குவித்த படம் 'சாம்ராட்'. தற்போது அந்தப் படத்தை தமிழ்-மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழிமாற்றம் செய்து வெளியிட போகிறார்கள். விஷ்ணுவர்த்தனின் ஜோடியாக சுமா குல்கர்னி நடித்துள்ளார். இப்படத்தின் மூலம் 'ராயல் சிங்கம்' என்னும் பட்டத்தை கன்னட ரசிகர்கள் விஷ்ணுவர்த்தனுக்கு வழங்கியுள்ளனர்.

ராம்கி நடித்து வரும் படம் ஒன்றின் பெயரும் 'சாம்ராட்'. விஷ்ணுவர்த்தனின் 'சாம்ராட்' தமிழில் வரும்போது பெயர் மாற்றப்படாவிட்டால் ராம்கி நடித்துவரும் 'சாம்ராட்' படப் பெயரை மாற்றவேண்டி வருமாம்.

## மணிரத்னத்தின் புதிய படம் கல்கத்தா அழகி இறக்குமதி

இயக்குநர் மணிரத்னம் சொந்தமாக படத் தயாரிப்பிலும் ஈடுபடுவதுண்டு. ஏற்கனவே 'சத்ரியன்', 'தசரதன்', 'திருடா-திருடா' போன்ற படங்களை அவர் தயாரித்திருக்கிறார்.

இப்போது 'பம்பாய்' என்னும் படத்தைத் தயாரித்து இயக்கி வருகிறார்.

அடுத்து மணிரத்னத்தின் ஆலயம் பட நிறுவனம் தயாரிக்கும் படத்தின் பெயர் 'ஆசை'. ஆனால் படத்தை இயக்கப்போவது மணிரத்னம் அல்ல. 'கேளடி கண்மணி' பட இயக்குநர் வசந்த் 'ஆசை' படத்தை இயக்குவார்.

மூன்று பாடல்கள் பதிவாகியுள்ளன. கதாநாயகியாக கல்கத்தா அழகி இறக்குமதியாகிறார். அஜித், பிரகாஷ், வடிவேலு, விவேக், பூர்ணம் விஸ்வநாதம் ஆகியோர் நடிக்கின்றனர்.

## கிசு-கிசு ஜோடி மீண்டும்

'ஊழியன்' படத்தில் படுநெருக்கமாக நடித்தும்-பழகியும் கிசுகிசுக்கப்பட்ட ஜோடி அருண்பாண்டியன்-வினிதா. ஆனாலும் 'ராஜமுத்திரை' படத்திலும் அந்த ஜோடி மீண்டும் சேர்ந்து நடித்து வருகிறது.

அதுமட்டுமல்ல, மேலும் புதிய படத்திலும் நடிக்கிறார்கள். படத்தின் பெயர் 'மாஸ்டர் பிளான்'. அருண்பாண்டியன் கதாநாயகன்-நாயகி வினிதா. திகில்-மர்மம் கலந்த அடிதடிப் படம். தொடக்கவிழா முடிந்து விட்டது. திரைக்கதை அமைத்து படத்தை இயக்கப்போவது அருண்பாண்டியனின் சகோதரர் துரை பாண்டியன். ஏற்கனவே 'ஊழியன்' படத்துக்கு திரைக்கதை அமைத்து இயக்கியதும் அவரேதான்.



www.padippakam.com



## இந்திப்பட நாயகி

'கட்டுமரக்காரன்' படத்தில் ... இந்திப்பட இளம்நாயகி ... அவர் பெயர் ஹேமா.

... எஸ்.என் நம்பியார், ...யோடு இந்திப்பட ... இளையராஜா ... குமார்.

## சசியின் மறுபிரவேசம்

மலையாளப்பட இயக்குநர் பரதன் 'அக்னிப் பிரவேசம்' என்ற படத்தை இயக்குவதாக அறிவிக்கப்பட்டு, ஒரு வாரம் படப்பிடிப்புக்கள் நடைபெற்றது. பின்னர் இயக்குநருக்கும் தயாரிப்பாளருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு 'அக்னிப் பிரவேசம்' கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் படத்தின் தயாரிப்பாளர் தென்னிந்தியத் திரைப்படச் சங்கத்திடம் இயக்குநரைப் பற்றி புகார் செய்தார். தென்னிந்திய திரைப்படச் சங்கம் இந்தப் புகாரை விசாரித்து பிரச்சனையைத் தீர்த்துவைத்துள்ளது.

தற்போது இந்தப் படத்தை ஐ.வி.சசி இயக்கவிருக்கிறார். 'அக்னிப் பிரவேசம்' படத்தின் மூலம் ஐ.வி.சசி தமிழ்த் திரையுலகிற்கு மறுபிரவேசம் செய்யவுள்ளார்.

## ஆடி நடிக்க ரெடி

"சினிமாவில் நடிக்க வந்து மூன்று வருடங்களாகிவிட்டது. ஆரம்பத்தில் சில மாதங்கள் ஒழுங்காக நாட்டியம் கற்றுவந்தேன். அதற்குப் பிறகு சினிமாவில் பிஸியாகி விட்டதால் நடனத்தைத் தொடர முடியவில்லை. இப்போது எனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் பரத நாட்டியம் கற்று வருகிறேன். இனி நடனத்திற்கு முக்கியத்துவம் உள்ள படமென்றாலும் நான் ஆடி நடிக்கத் தயாராக இருக்கிறேன்" என்றார் சிவரஞ்சனி.

## "தொட்டுப் பார்த்து சொல்லுகிறேன்"

நடிகர் பாண்டியனிடம் இப்படியொரு கேள்வி: நடிகை பானுப்பிரியா, கௌதமி, மீனா, ரோஜா இவர்களில் யாருக்கு இடுப்பழகு? உலகில் சிறந்த இக் கேள்விக்கு பாண்டியன் சளைக்காமல் சொன்ன பதில்:

"இன்னும் அவர்களுடன் நடிக்கவில்லை. நடித்தபிறகு தொட்டுப் பார்த்துச் சொல்கிறேன்"

மற்றொரு கேள்வி: "உங்களுக்கு காதல் அனுபவம் உண்டா?"

நிறைய உண்டு. இப்போது குடும்பஸ்தனாகி விட்டேன். அதனால் சொல்ல முடியாது."

மூன்றாவது கேள்வியும் சற்று விவகாரமானதுதான்.

"கிழக்குச் சீமையிலே படத்தில் நான்கைந்து பெண்களுடன் கிளுகிளுப்பூட்டுகிறீர்களே இதுபோன்ற அனுபவம் ஏற்பட்டதுண்டா?"

பாண்டியன் பதில்: "அதுபோன்ற வாய்ப்புக்கு ஏங்கியதுண்டு." பாண்டியனா கொக்கா!

## தலைப்பில் வில்லன்!

படத்தில் நடிக்கும் கதாநாயகர்களின் பெயரைத்தான் படத்தின் தலைப்புக்களாகப்போடுவார்கள். ஆனால் ராம்கி நடிக்கும் 'உளவாளி' படத்தில் வில்லன்தான உளவாளி. அவனைப் பிடிப்பது தான் கதாநாயகன். இந்த வில்லன் வேடத்தில் நடிப்பவர் படத்தின் இயக்குநர் ஸ்ரீசேகரன்.

ரூபினி-நெப்போலியன்



கனகா-பிரபு
படம்: ஜல்லிக்கட்டுக்காளை

## இது முடிய அவை

'திருவிழா', 'தமிழா...தமிழா...' போன்ற படங்களுக்குப் பூஜை போட்டார் பாரதிராஜா. ஆனால் படப்பிடிப்புக்கள் எதுவும் தொடங்கப்படவில்லை. காரணம் 'கருத்தம்மா' படப்பணிகள் இன்னமும் முடிவடையவில்லை. இந்த ஆண்டில் பாக்கியராஜை வைத்தும் ஒரு படத்தை உருவாக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அதுவும் இப்போதைக்கு சாத்தியமாகாது என்பதால் அடுத்த ஆண்டிற்கு ஒத்திவைத்துள்ளார். 'கருத்தம்மா' முடிவடைந்ததும் 'தமிழா...தமிழா' அதன் பின்னர் 'திருவிழா' வெளிவரும்.

## கனவு

...நான்' படத்தில் ... நடித்துள்ள ... எதிர்பார்ப்பில் இருக்கிறார். ... பரபரப்பான ... சந்திரபாபு ... நிலையில் ... நடிகனாகும் ... நிறைவேற ... என்கிறார். ... கனவு கைகூட வேண்டும்.

## ...நியூஸ்

## ஊர்வசியின் காதலர்

...த்தில் ஊர்வசிக்குப் படங்கள் குறைந்துவிட்டன. மம்முட்டி-மோகன்லால் போன்ற கதாநாயகர்களுடன் நடித்துவந்தவர் இப்போது இரண்டாம்தர ...களோடு நடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

... கதாநாயகன் ஜெகதீஷ் என்பவரின் ஜோடியாக சில படங்களில் நடித்து ... நடித்துவரும் நேரத்திலே இருவருக்கும் இடையே 'டட்டடாய்ங்'. மலையாளப் ... பரவலாகப் பேசப்படுகிறது.

... எங்கே எப்போது சந்திப்பார்கள் என்ற சமாச்சாரங்களும் விலாவாரியாகப் ...கிறது.

## மினிசினி

- மோகன்லாலுடன் 'ராஜசிற்பி' படத்தில் இணைந்து நடித்த பானுப்பிரியா தற்போது 'ஸ்திரீதனம்' (சீதனம்) என்ற படத்தில் ஜெயராமிற்கு ஜோடியாக நடித்து வருகிறார். ஜெயராம்-பானுப்பிரியா ஏற்கனவே தமிழில் 'கோகுலம்' படத்தில் நடித்துள்ளனர்.
- பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்து 'அன்னை வயல்' படத்தை இயக்கியவர் பொன்வண்ணன். இவர் இப்போது பாரதிராஜாவின் 'கருத்தம்மா' படத்தில் வில்லனாக நடித்துவருகிறார்.
- இதுவரை இளமை துள்ளும் கவர்ச்சியான வேடங்களில் நடித்து வந்த ரோஜா, மூன்று வயதுக் குழந்தைக்கு அம்மாவாக ஆர்.கே.செல்வமணியின் 'ராஜ முத்திரை' படத்தில் நடிக்கிறார்.
- சந்தான பாரதி இயக்கத்தில் சத்யராஜ் நடிக்கவுள்ள 'எங்கிருந்தோ வந்தான்' படம் 'சித்ரம்' என்ற பெயரில் மலையாளத்திலும், 'அல்லுடு காரு' என்ற பெயரில் தெலுங்கிலும் வெளியானது.
- சரத்குமார் நடிக்கும் 'இதயம் பேசுகிறது' படத்தை இளவரசன் இயக்கவுள்ளார். இவர் விஜயகாந்த் தயாரித்து சரத்குமார் நடித்த 'தாய்மொழி' படத்தை இயக்கியவர்.
- மம்முட்டி, சுகன்யா ஜோடியாக நடித்துவரும் 'த கிங்' படத்தில் சேவியர் என்ற முரட்டு தாதா வேடத்தில் நடித்து வருகிறார் மம்முட்டி.
- 'பொன்விலங்கு' படத்தில் அறிமுகமான ரஞ்சித் அந்தப் படத்திற்கு பின்னர் 'சிந்து நதிப் பூ' படத்தில் நடித்தார். இரு படங்களும் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. இவர் இப்போது 'ஜூனியர் சீனியர்' என்ற படத்தில் இரு கதாநாயகர்களில் ஒருவராக நடிக்கிறார்.
- 'அலை விழிகள்' படத்தைப் போன்று 'அந்தி கிராமம்' என்ற திகில் படத்தை ஹைதராபாத்தில் எடுத்து வருகிறார் ஆபாவாணன். கதாநாயகனாக ராம்கி நடித்துவருகிறார்.
- பிரபு நடிக்கும் 'கட்டுமரக்காரன்' படத்தை இயக்கி வருகிறார் நட்சத்திர இயக்குநர் பி.வாசு. இவர் இந்தப் படம் முடிவடைந்ததும் தொலைக்காட்சித் தொடரொன்றை இயக்கவுள்ளார்.



## சிஷ்யனுக்கு வாய்ப்பு

இயக்குநர் பாக்கியராஜ் தன் உதவியாளர் ஒருவருக்குத் தனது சொந்தப் படமொன்றை இயக்கும் வாய்ப்பை வழங்கியிருக்கிறார். தன்னுடைய பல படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த சிவகுமார் என்பவருக்குத் தான் இந்த வாய்ப்பினை அளித்துள்ளார். 'ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி' வெளியானதும் இந்தப் படம் தொடங்கப்படும். இந்தப் புதிய படத்தில் கதாநாயகனாக அர்ஜுன் நடிப்பார் என்று தெரிகிறது.

## எல்லாமே புதுமுகம்

ஸ்டாண்டர்ட் ஸ்கீரீன்ஸ் நிறுவனம் முதல் தயாரிப்பாக முற்றிலும் புது முகங்களை வைத்து புதிய படமொன்றைத் தயாரிக்கிறது. சீமான், ராஜா, நாகராஜன், விக்கி, சாந்தி போன்றவர்கள் அறிமுகமாகும் இப்படத்திற்குத் 'தோழர்கள்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## திருப்பம் தருவேன்

நடிகர் சந்திரசேகரின் 38வது பிறந்தநாள் விழாவில் இயக்குநர் பாரதிராஜா ஒரு வாக்குறுதி கொடுத்துள்ளார். "நடிகை ராதிகாவுக்கு திருப்பம் ஏற்படுத்தியது மாதிரி உனக்கும் ஒரு திருப்பம் ஏற்படுத்தும் பாத்திரம் தருவேன் பொறுத்திரு" என்பதுதான் வாக்குறுதி. சந்திரசேகர் இப்போதே கனவுகாணத் தொடங்கியிருப்பார்.

கஸ்தூரி-பிரசாந்த்
படம்-கிருஷ்ணா

## ரம்யா பாடு கொண்டாட்டம்

ரம்யா கிருஷ்ணன் தமிழில் காணாமல் போனாலும் தெலுங்கில் அவர் நடிக்கும் படங்கள் அவ்வப்போது தமிழுக்கு மொழிமாற்றப்பட்டு வருகின்றன. தெலுங்கிலும், இந்தியிலும் நடித்துவரும் ரம்யா கிருஷ்ணன், பிரபல இந்தி இயக்குநர் மகேஷ்பட்டின் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

முக்கோணக் காதல் கதையைக் கொண்ட இப்படத்தில் இந்தியில் முன்னணியில் இருக்கும் ஷாருக்கான் கதாநாயகனாக நடிக்கிறார்.

## கிளிக்கு இல்லையே வாய்ப்பு!


'அரண்மனைக்கிளி' படத்தில் அறிமுகமானவர்கள் காயத்ரி-அஹானா. அந்தப் படம் வெள்ளிவிழாப் படமாக அமைந்தபோதும் எதிர்பார்த்தளவிற்கு இருவருக்கும் படவாய்ப்புக்கள் வந்து குவியவில்லை. அஹானா 'இராவணன்', 'செவத்தபொண்ணு', 'சிவப்பிரி பாண்டி' ஆகிய படங்களில் நடித்தார். ஆனால் காயத்ரி கிட்டி இயக்கிய படமொன்றில் நடிப்பதாக இருந்தது. பின்னர் அந்தப் படமே கைவிடப்பட்டது. அடுத்து 'கப்பன்' படத்தில் ஒரேஒரு பாடல் காட்சியில் நடித்தார். இப்போது படமே இல்லாமல் இருக்கிறார்.

## மாறியது பெயர்

மணி-ரத்னம் படத்தில் நடிக்கும் இரு கதாநாயகிகளில் ஒருவர் சாந்தினி. இவர் சில வருடங்களுக்கு முன்பு வெளியான நட்பு படத்தில் கார்த்திக்கிற்கு ஜோடியாக ஸ்ரீபாரதி என்ற பெயரில் நடித்துள்ளார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-

# எமது கடமைகள்

விடியற் காலை வேளையில்
படுக்கை விட்டு எழும்புவோம்
பல்லைத் தீட்டி குளித்தபின்
பாடம் படிக்கத் தொடங்குவோம்.

காலை உணவு முடிந்ததும்
பாடசாலை செல்லுவோம்
பாடத்தோடு பண்புகள்
பலவும் படித்து மகிழுவோம்.

பாடசாலை விட்டதும்
வீடு வந்து சேருவோம்

மாலை வேளை வந்ததும்
ஓடி விளையாடுவோம்.

இரவு வேளை வந்ததும்
காலைக் கையைக் கழுவுவோம்
சாமிப் படம் அருகிலே
பாட்டுப் பாடி வணங்குவோம்.

பாடங்களைப் படித்தபின்
உணவு உண்ணச் செல்லுவோம்.
பாட்டி கதை சொல்லவே
நாங்கள் தூங்கப் போவோமே.

ஜெ.சிவரங்கேசன்-திருகோணமலை.

## பாப்பா முரசு சிறுகதை

# பழத்தோலுக்கும் பஞ்சம்

வேங்கி நாட்டை துளசிராமன் என்ற மன்னன் ஆண்டான். அவன் மிகவும் சிறிய வயதுடையவன். அவனது தந்தை நோய் வாய்ப்பட்டு திடீரென இறந்துவிட்டதால் ஆட்சிப் பொறுப்பை அவன் ஏற்கவேண்டியதாகி விட்டது.

அவன் ஆட்சிக்கு வந்ததுமே பக்கத்து தேசத்து மன்னர்கள் பலர் போட்டி போட்டுக் கொண்டு அவனுக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர்.

ஆனால் துளசிராமன் அதை விரும்பவில்லை. ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து, தான் விரும்பிய ஒரு பேரழகியைத் திருமணம் செய்து கொண்டான்.

அவன் இளம் வயதுடையவனாகையால், சுகபோக வாழ்க்கையில் எப்போதும் மயங்கிக் கிடந்தான். இதனால் நாட்டின் நிர்வாகம் பாதித்ததோடு வெகு விரைவில் வறுமையும் அந்த நாட்டைத் தொற்றிக் கொண்டது.

ஒரு சாதாரண குடிமகளாக இருந்து அரசியாகி விட்ட சாரதாவிற்கு தன் பேரழகுதான் இந்த நிலைக்குக் காரணம் என்று கர்வம் உண்டாகியது.

ஒருநாள் அரசி சாரதா அரண்மனையின் மாடத்தில் அமர்ந்தபடி தட்டில் இருந்த பழங்களைச் சாப்பிட்டு விட்டு அவற்றின் தோலைக் கீழே எறிந்தாள். பழத்தின் தோல்கள் வீதியில் வந்து விழுந்தன. அந்தச் சமயத்தில் பசியால் வாடிய ஒரு முதியவர், அந்தப் பழத்தோல்களைக் கண்டு மிகவும் ஆவலுடன் ஓடிவந்து அவற்றைப் பொறுக்கி எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தார்.

தோலில் ஒட்டியிருந்த சிறிதளவு பழச் சதையைச் சாப்பிட்டுவிட்டு, சாப்பிடவே முடியாத தோல்களை மட்டும் மென்று துப்பினார் அந்த முதியவர்.

இதை மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த சாரதா அந்தப் பெரியவர் தன்னைக் கேலி செய்வதற்காகத்தான் இப்படிப் பழத்தோலைக் கடித்துக் கடித்துத் துப்புகிறார் என்று நினைத்தாள். உடனே அவளுக்குக் கோபம் வந்தது. தன்னை அவமதித்த அந்த முதியவரைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும் என்று நினைத்து, தன் கணவனிடம் ஓடி விசயத்தைச் சொன்னாள்.



அதைக்கேட்டு வெகுண்டெழுந்த துளசிராமன் காவலர்களை அழைத்து, அந்த முதியவரைப் பிடித்து வரும்படி ஆணையிட்டான்.

காவலர்கள் ஓடிச்சென்று, அந்த முதியவரைப் பிடித்து வந்து துளசிராமன் முன் நிறுத்தினார்கள்.

"பெரியவரே! எங்கள் அரசவம்சத்துப் பொருட்களின் தூசியைக் கூட பிறர் தொடக்கூடாது என்று சட்டமிருக்கிறது இங்கு. அது தெரிந்தும் எதற்காக அரசி எறிந்த பழத்தோல்களைக் கடித்துக் கடித்துத் துப்பி அவமானம் உண்டாக்கினீர்? நீர் செய்த இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா?" என்று ஆணவமாகக் கேட்டான் மன்னன் துளசிராமன்.

"தெரியும். கடுங்காவல் தண்டனை அல்லது சிரச்சேதம்" என்று அமைதியாகச் சொன்னார் பெரியவர்.

தன்னையே எதிர்த்துப் பேசுகிற அந்த முதியவரைப் பார்த்து மேலும் வெகுண்டான் துளசிராமன்.

"பெரியவரே! உமக்குச் சிரச்சேதம் செய்ய உத்தரவிடுகிறேன்." என்றான் அவன்.

"அரசே! செத்துப்போன பிணத்திற்குச் சிரச்சேதமா? இது என்ன விந்தையான சட்டமாக இருக்கிறது," என்று கூறி ஏளனமாகச் சிரித்தார் பெரியவர்.

"பெரியவரே நீர் என்ன சொல்கிறீர்?" என்று மேலும் சினத்துடன் கேட்டான் துளசிராமன்.

"எப்படிப் புரியும் மன்னா?" இளம் வயது, புது மனைவியின் அழகு, சுகபோக வாழ்க்கை, இவை தவிர உங்களுக்கு வேறென்ன தெரியும்? இந்த நாடு இப்போது இருக்கும் நிலை தெரியுமா? இந்த நாட்டு மக்கள் படும் அவலங்களைத் தெரியுமா? பசியாலும், பட்டினியாலும் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் பிணமாகத்தான் திரிகிறோம். ஏற்கனவே செத்துவிட்ட எங்களுக்கு இந்தச் சிரச்சேதம் என்ன செய்யும்?" என்று உணர்ச்சிகரமாகப் பேசினார் பெரியவர்.


அந்தப் பெரியவரின் ஒவ்வொரு சொல்லும் துளசிராமனின் மனதை ஈட்டியாகத் துளைத்தன.

'நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும் வாழ வேண்டிய நான் இத்தனை காலமாக என்னுடைய நலனுக்காக வாழ்ந்திருக்கிறேன். எத்தனை பெரிய கொடுங்கோலன் நான்,' நினைக்க நினைக்க துளசிராமனின் மனச்சாட்சி உறுத்தியது.

"ஐயா பெரியவரே! என்னை மன்னித்து விடுங்கள். என் கண்ணைத் திறந்துவிட்டீர்கள். இனி எனக்கு நாடும், மக்களும்தான் முக்கியம். என் அறிவுக்கண்களை மிகவும் துணிச்சலாகத் திறந்துவிட்ட தங்களைப் பாராட்டுகிறேன். தங்களை எனது தலைமை அறிஞராகவும் நியமிக்கிறேன்," என்று சொன்னான் மன்னன் துளசிராமன்.


வறுமை நிலையை மன்னனுக்கு எடுத்துக்காட்டிய அந்த முதியவரை, நாட்டு மக்கள் அனைவரும் வாயார வாழ்த்தினார்கள்.

## சாரணர் இயக்கம்



- சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
  இங்கிலாந்து இராணுவ அதிகாரி பேடன் பவுல் பிரபு என்பவராவார். இவர் 1908ம் ஆண்டு சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- எதற்காக இது ஆரம்பிக்கப்பட்டது?
  வீரம், விவேகம், பிறருக்கு உதவும் மனப்பாங்கு ஆகியவற்றைச் சிறுவர், சிறுமியர் இளமையிலிருந்தே கற்று, நாடு போற்றும் நன்மக்களாக மாற சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- பெண்கள் சாரணர் இயக்கம் எப்போது தொடக்கப்பட்டது?
  இங்கிலாந்தில் 1910ம் ஆண்டு பெண்கள் சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது.
- சாரணர்கள் எடுக்கும் உறுதிமொழி என்ன?
  'இறைவனுக்கும், நாட்டிற்கும் எனது கடமையைச் செய்வேன். எந்நேரமும் பிறர் நலன் கருதி உழைப்பேன். சாரணர் இயக்க விதிகளுக்கு உடன்படுவேன்' இந்த உறுதிமொழியைத்தான் சாரணர்கள் எடுப்பார்கள்.
- சாரணர் குழுத் தலைவரும், சாரணர் பயிற்சி மாணவரும் சந்தித்தால் யார் முதலில் வணக்கம் சொல்வார்கள்?
  யார் முதலில் மற்றவரைப் பார்க்கிறாரோ அவரே முதலில் வணக்கம் சொல்வார். தலைவர், பயிற்சியாளர் என்று பேதம் பார்க்காது நட்பு முறையில் பழகுவதே சாரணர் இயக்கத்தின் தனிச்சிறப்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 10.09.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 56
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 53

**பரிசுக்குரியவர்**
பி. புனித சாந்தினி
கிரான்லி த.வித்தியாலயம்-அக்கரப்பத்தனை

**பாராட்டுக்குரியவர்கள்**

எம்.எஸ். இன்சதுல் நிஸா, தர்கா நகர்.
பி. வெள்ளசாமி-டிக்கோயா.
செல்வி.ப.ஷாலினி, டெமேரியா தமிழ் வித்தியாலயம்-பசறை.
ஏ.கே. கானிதாசன், த.ம.வி.-இறம்பொடை
வை.சுகந்தி, விக்னேஸ்வரா ம.வித்தியாலயம், திருகோணமலை.
எம்.இன்சாப் சாபார், இந்து தமிழ் வித்தியாலயம்-புத்தளம்.
அ.அ.நளீபா-காத்தான்குடி-03.
எம்.எஸ்.கியாஸ், மத்திய வித்தியாலயம்-கிண்ணியா-04.
எஸ். பிருந்தா, இந்து மகளிர் கல்லூரி-கொழும்பு-6.
பீ. தினேஷ், பம்பலப்பிட்டிய இந்துக் கல்லூரி, கொழும்பு-04.
பாத்மா நசூமியா அன்சார்-அக்குறணை.
எஸ்.எச்.எம். ஸியாத்-அன்டிகம.
தி.ஜெயசுனித்தா, சாந்த கிளேயர் மகளர் கல்லூரி.

## விடுகதைகளும் விடைகளும்

1. அண்ணன் ஆற்றில், ஒரு தம்பி காட்டில், மறு தம்பி சாஸ்திரியார் வீட்டில். அவர்கள் யார்?
02. உனக்கும் தேவை. எனக்கும் தேவை. உள்ளவை அனைத்திற்கும் தேவை. அது என்ன?
03. எல்லாம் விட்ட கறிக்கு என்னத்தை விட்டு இறக்கவேண்டும்?
04. இருகுழி தோண்டி ஒரு தடி புதைத்தல். அது என்ன?
05. தங்க மாம்பழம்- தின்னமுடியாது. அது என்ன?
06. கழுத்து உண்டு. தலை இல்லை. கை உண்டு. கால் இல்லை. உடம்பு உண்டு. உயிர் இல்லை. இவள் யார்?

**விடைகள்**

01. முதலை, உடும்பு, பல்லி
02. பெயர்
03. அடுப்பைவிட்டு
04 அகப்பை
05. நெருப்புத்தணல்
06. சட்டை

கே.கமலன்-பாபு-பொலன்னறுவை.

01. வெட்ட வெட்ட தளிர்க்குமாம். வெட்கம் கெட்ட ஆத்தி. அது என்ன?
02. நீரோடு நிலம் கறுக்க, நீல பாவல் குருத்தெறிய, காலோடும் பட்டணத்தில் காயும் தின்னலாம், பூவும் தின்னலாம், இலையுந்தின்னலாம். பழந் தின்னக்கூடாது. அது என்ன?
03. சுற்றுவேன் அந்த மரத்தை. சூடேன் அந்தப்பூவை. நற்றேன் அந்தக் காயை. நாடுவேன் அந்தப் பழத்தை. அது என்ன?
04. பக்கமெல்லாம் பட்டையுண்டு. மரமுல்ல, பெயர்த்தெடுத்தால் முத்துண்டு, சிப்பியல்ல, உடைத்தெடுத்தால் விதையுண்டு, பழமுமல்ல. அது என்ன?

**விடைகள்**

1. தலைமயிர் 2. முருங்கை
3. வேம்பு 4. சோளம்

இ.சாஜகான்-நேரியகுளம்.

## கணித விநோதம்

1. ஐந்து இலக்கம் உள்ள ஓர் எண்ணை நான்கால் பெருக்கினால் வரும் தொகை, அந்த எண்ணைத் திருப்பிப் போட்டால் என்னவோ, அதுதான். அந்த எண் எது? (ஐந்து இலக்கத்திலும் பூஜ்யம் கிடையாது)


விடை: 21978 இதை நான்கால் பெருக்கினால் வரும் தொகை 87912.

2. ஒரு மனிதனின் வயதைத் திருப்பிப் போட்டால் அவன் மனைவியின் வயது வரும். அவர்கள் இருவரின் வயதையும் கூட்டி பதினொன்றால் வகுத்தால் அவர்கள் வயது வித்தியாசம் ஒன்பது என வரும். கணவன் மூத்தவன் என்றால் அவர்கள் வயதைக் கணக்கிடவும்.


விடை: கணவனின் வயது: 54 மனைவியின் வயது: 45
கூட்டுத்தொகை: 99
பதினொன்றால் வகுத்தல்: 9
வயது வித்தியாசம்: 9

வி.சிசாந்த்-சரஸ்வதி தேசிய கல்லூரி, பதுளை.

## அறிவோம் மனதில் பதிவோம்



பன்றிகள் வளர்ப்பதில் உலகில் சீனாதான் முதலிடம் வகிக்கிறது. 1989ம் ஆண்டு சீனாவில் பன்றிகளின் எண்ணிக்கை 34 கோடி.



உலகிலேயே மிகப் பெரிய 'மம்மல்' இனப் பிராணி ஜாவா காண்டா குட்டிபோட்டு பால்கொடுக்கும் மிருகம் ஆகும். இப்போது இவை மிகவும் அரிதாக உள்ளன. இதன் கொம்பு மருத்துவ குணம் கொண்டது என்பதால் இவை அதிகமாக வேட்டையாடப்படுகின்றன.



தென் ஆபிரிக்காவில் கொம்புப் பறவை உள்ளது. இதன் கொம்பு மெல்லியதாக 6 அங்குல நீளத்தில் தலையிலிருந்து முளைத்திருக்கும்.

## நீளவால் லெமுர்

ஆபிரிக்கா அருகே இந்தியப் பெருங்கடலில் மடகாஸ்கர் தீவு உள்ளது. இங்கே உலகின் வேறு எந்தப் பகுதியிலும் பார்க்க முடியாத பல அபூர்வ விலங்கினங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் லெமுர். இவை குரங்குகளைப்போன்ற பழக்க வழக்கம் உடையவை. மரங்களில்தான் இவை வாழும். பெரிய கண்களை உடைய லெமுர் இரவில் இரைதேடும். அடர்முடியுடன் இருக்கும். லெமுர்களிலேயே பலவகை உண்டு. படத்தில் இருப்பது நீளவால் லெமுர். இதன் விலங்கியல் பெயர் 'வெரேசியா வெரிகேடஸ்'.



## எது? ஏன்? எப்படி?

1. **மனிதன் களைப்படைகிறான்; மிருகங்கள் களைப் படைகின்றன. இதைப்போலவே உலோகங்களும் களைப்படைவதுண்டா?**
   உண்டு: இப்படி உலோகங்கள் 'களைப்படைவதனால்' தான் சில சமயம் எஞ்சின்கள் நல்ல நிலையிலிருந்தும்கூட விமான விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் பொறியியல் வல்லுனர்கள் பாலங்கள் போன்றவைக்கு ஆயுள் காலத்தையே நிர்ணயித்து விடுகிறார்கள்.
2. **நாக்கிற்கு சுவையைத் தெரிந்துகொள்ளும் சக்தியுண்டா?**
   இல்லை: நாக்கைமட்டும் வெளியே இழுத்து அதில் சர்க்கரையையோ அல்லது வேம்பையோ தடவிப்பாருங்கள்; சுவை தெரியாது. வாய்க்குள் சென்ற பிறகு வாயின் உட் பகுதியிலுள்ள மற்ற சுரப்பிகளுடன் தொடர்பு ஏற்பட்ட பிறகுதான் சுவை தெரியும்.
3. **சாதாரண நிலையில் ஒரு மனிதனுக்கு எவ்வளவு நேரம் தூக்கம் அவசியம்?**
   வானொலியைக் கண்டு பிடித்த மார்க்கோணி "நாம் எவ்வளவுநேரம் தூங்குகிறோம் என்பதல்ல; எவ்வளவு நன்றாகத் தூங்குகிறோம் என்பதுதான் முக்கியம்" என்கிறார். எச்.ஜி.வேல்ஸ் எட்டுமணி நேரத் தூக்கமாவது வேண்டும் என்கிறார். ஆனால் பிரபல மோட்டார் மன்னரான ஹென்றி ஃபோர்ட் ஒரு நாளில் ஒன்பது மணி நேரத்தைப் படுக்கையில் கழிப்பார். அதிலும் ஆறுமணி நேரம்தான் தூங்குவார்.
   மாவீரன் நெப்போலியன் சேர்ந்தாற்போல் இரண்டுமணி நேரம் தூங்கிவிட்டு; மறுபடியும் தொடர்ந்து இருபத்திரண்டு மணிநேரம் பணி புரிவார்.
   "ஆணுக்கு ஆறுமணி நேரம் தூக்கமும்; பெண்ணுக்கு ஏழுமணியும்; முட்டாளுக்கு எட்டு மணியும்" என்கிறது ஆங்கிலப் பழமொழி! பொதுவாக நல்ல நிலையில் இருந்தால் மூளைக்கு நான்கு மணிநேரம் தூக்கம்கூட போதுமானதே!
4. **பாம்பினுடைய வாய்க்கும், மனிதனுடைய வாய்க்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று கூறமுடியுமா?**
   மனிதன் தனக்குப் பிடிக்காத உணவுப் பொருளை துப்பிவிட முடியும். ஆனால் பாம்பு வாய்வைத்த பொருள்களை விடமுடியாது. அதன் பற்கள் அனைத்தும் தொண்டையை நோக்கி இருப்பதால் எந்த பொருளும்; எவ்வளவு கஷ்டப்பட்டாலும் வெளியே வர முடியாது. அதனால்தான் சில சமயம் முட்டாள் தனமாக பெரிய பொருள்களை விழுங்க முயற்சி செய்து, அவை வெளிவர முடியாமலும் உள்ளே போகமுடியாமலும் பாம்பே செத்துவிடுவதுமுண்டு.

ந.சஞ்சீவகுமார்-புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## வேஷம்...




வானில் ஒரு நிலவு
வாழ்வில் பல கனவு
சொந்த பந்தம் எல்லாம்
கானல் போல உறவு..

பாசம் ஒரு வலையென்றால்
உயிரென்ன மீனோ?
வலையில் அது விழுந்தால்
துடிக்கும் நிலை தானோ?
படிக்கின்ற கலையெல்லாம்
வாழ்வில்லை அது ஏனோ?
நடிக்கின்ற உறவுகளில்
காதலும் ஒரு கேடோ?

கனவுச் சாலையில் பயணம் போனால்
தொடக்கம் அதில் திரும்பும்
உறவுச் சாலையில் உயிர்கள் நடந்தால்
விளக்கம் ஒன்று தெரியும்
வேஷம் போடும் நாடகத்தின்
திரைகள் அங்கு விலகும்
பற்றுதலும் பாசமும் பணத்தோடு மடியும்.
சுற்றமும் சொந்தமும் சொத்திழந்தால் சரியும்....!!!

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.

## செணபகக் கன்னி



பப்பாளி பழத்தை
ஞாபகிக்கும்
உன்—
அந்திநேர
கன்னங்கள்.

•

கொய்யாப்பழ
இதழ் திறந்து
நீ—
விட்டு விட்டு
பேசும் போது
எத்தனை அணில்கள்
எனக்குள்—
ஓடித்திரியும் தெரியுமா?

•

கருங் குழவியைப்போல்
எவ்வளவு
விஷமாய் உள்ளது
உன் விழிகள்.
மூடி மூடித் திறக்கும்போது,
என்—
இதயம் முழுதும்
வலியில் துடிக்கும்.

•

உனது
மௌனம்கூட
மகத்துவமானது
சில நேரம்
ஒரு மலரைப்போல
சும்மா கிடப்பாய்.

•

செண்பகத்தைப்போல்
என்—
கேள்விகளின் உஷ்ணத்தில்
ஒரு.ம்.போட்டு
முணங்கிக் கொள்வாய்

•

அதுபோதும் எனக்கு
நீ—
ஊமை இல்லையென்று
ஊருக்கு புரியவைக்க.

ஒட்டமாவடி—அறபாத்.

## தழும்புகள்

பிரிவுகள்
உறவின்
வலிமையை
வெளியிடும்!

•

தழுவல்கள்
அன்பின்
ஆழத்தைக்
கோடிடும்!

•

உணர்வுகள்
உரிமையின்
வெளிப்பாட்டைக்
காட்டிடும்!

•

மறதிகள்
வேகத்தின்
பரம்பலைக்
குறைத்திடும்!

•

விலகல்கள்
இயலாமையின்
தத்துவத்தை
விளக்கிடும்!

•

தழும்புகள்
சோகங்களின்
தாக்கங்களை
உணர்த்திடும்!

—ஆரையம்பதி மனோ—

## ஏனம்மா பெருமூச்சு

ஏனம்மா ஏங்கி நிதம்
எறிகின்றாய் பெரு மூச்சு
ஈனமனிதப் பிறவி யென்றா
எண்ணி மூச்சு எறிகின்றாய்

வந்து வீழ்ந்த ஷெல்வீச்சின்
மத்தியிலும் உயிர் தப்பி
நொந்து ஓடிக் காடுகளில்
நுழைந் ததனை நினைத்தாயோ

குண்டு மழை பொழியும் போதும்
குற்றுயிராய் பல உயிர்கள்
மண்டி யிட்டுத் தவழ்ந்தோடி
வந்ததனை நினைத்தாயோ

குண்டர் புடை சூழவந்து
கொண்டு சென்ற இளையமகன்
மண்மீது வாரான் என்றோ
மாதாவே மூச்சு எறிந்தாய்

பச்சைப் பசேல் என்று
பயிர் விளைந்த
நிலங்களெல்லாம்
கொச்சைப் பற்றிப் போனதென்று
குமைந்து மூச்சு எறிந்தாயோ

வெயிலும் நில வொளியும்
வந்து வீழும் குடிசையினுள்
வயிறு வாடும் அகதிநிலை
மாறா தென்றோ மூச்செறிந்தாய்

ஊனுடம்பு தந்து இந்த
உலகறியச் செய்த வளே
ஏனம்மா ஏங்கி நிதம்
எறிகின்றாய் பெரு மூச்சு.

—கேணிப்பித்தன்—



## கடிதம் ✉

நிலவை
எட்ட நினைக்கும்—
நினைப்புகள்!

நீல் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு
நீண்ட பயண
எனக்கோ
அடுத்த வீதி!

கைகோர்ப்பு முகங்களை
காணும்போது
புதுப்பித்து போகும்
இதய மோகம்!

இராணுவ தேடுதலாய்
என் வீட்டார்!
கண்களில் கைதானது
உன் கண்கள்தான்!

வாக்குச் சாவடியில்
மொத்த ஓட்டும்
உனக்கான போது
என் தெரிவு மட்டும்
எதுவாக இருக்கும்!

வருட ஜனனத்தில்
இடைவெளி
விட்டுப்போகும்!

மௌன விரதமிருக்கும்
உன் மனது
நிலா முற்றத்து
நிலைகளாய்!

கூந்தலைப் பற்றிய
கனவிலோ,
மண் மறைக்கும்
உடல் பற்றிய
உணர்விலோ
என் நேசிப்புகள் இல்லை!

ஒரு ஆத்ம பயணத்தின்
துணை
நிஜமாய்..
நிழலாய் இருக்க,

சேர்ந்துள்ள காலங்களை
சேமித்துக் கொள்ள,

இனி அகராதியில்
'பிரிவு' சொல்லுக்கு
இடம் கொடுக்காது விட!

நிலவை
எட்ட நினைக்கும்—
நினைப்புகள்!
காகிதம், மைத்துளி
கலந்த முறைகளில்!

எம்.எம்.ஏ.சாதிகீன்—கொழும்பு-12.

**கண்ணீர்**
கண்மரங்களிலிருந்து
முக நிலத்தைத் தொடும்..
விழுதுகள்.

மதி முகங்களின்
மயான காண்டம்!

**காந்தியடிகள்**
ஒவ்வொரு குழந்தையும்
காந்தியடிகள்தான்!
குழந்தைகள்
அரைகுறை...
ஆடையணியும்போது!

**கூந்தல்**
அவள்
தினந்தோறுந்தான்
கையால்..
நெய்கிறாள்!
ஆனால்
உடுக்கத்தான்
ஒரு முழமில்லை!

**அரசியல்வாதிகள்**
சூடு கண்டப் பூனைகள்
மிண்டும்
அடுப்பங்கரையில்!

**தேர்தல்காலம்**
சுவர் நிலங்களில்
'போஷ்டர்' போகம்..
கழுதைகளுக்குத்தான்
களியாட்டம்!

சோ.ஸ்ரீதரன்
பொகவந்தலாவை.

## ஆண்களே! ஒரு நிமிடம்..!

பூவெனக் கூறியே
எங்களை...
கசக்கி எறிந்திடுவீர்!

தெய்வமெனக் கூறியே
எங்களை
கேலிப் பொருள் ஆக்கிடுவீர்!

புறா...மயிர்...கிளியே..என்று
எம் சிறகுகளை
ஓடித்திடுவீர்!

நிலவெனக் கூறியே
எம்மை
இருட்டினில் தள்ளிடுவீர்!

தங்கச் சிலையே நீயென்பீர்—பின்
இலட்சங்களாய்...
அதனிடமே விலைபேசிப்
பெற்றிடுவீர்!

'தேன் மொழியே
உன் மொழி' என்பீர்—பின்
கருத்துகளை
எடுத்துரைத்தாலோ



வாயை மூடென
அதட்டி அடக்கிடுவீர்!

'சீதேவியே நீ தான்' என்பீர்
பின்னால் சீதனம் இல்லையெனில்
'மூதேவி போ' என்றே
அடித்துத் துரத்திடுவீர்!

ஆதலால்...
எம் அருமை தந்தைக்குலமே!
இனியும் இந்த
உவமானப் போலிகள்
வேண்டாம் எமக்கு!

சம உரிமைகூட
கோரவில்லை உங்களிடம்!

பெண்ணினத்தின்
உணர்வுகளை மதித்து...
அவர்களை
வாழவிடுங்கள்
பெண்களாய்!
அது போதும்
எங்களுக்கு!

கி.தேவி ரமா—மாளிகாவத்தை.

**கண்ணீர்**
கண்மரங்களிலிருந்து
முக நிலத்தைத் தொடும்...
விழுதுகள்.

மதிமுகங்களின்
மயான காண்டம்!

**காந்தியடிகள்**
ஒவ்வொரு குழந்தையும்
காந்தியடிகள்தான்!
குழந்தைகள்
அரைகுறை....
ஆடையணியும்போது!

**கூந்தல்**
அவள்
தினந்தோறுந்தான்
கையால்...
நெய்கிறாள்!
ஆனால்
உடுக்கத்தான்
ஒரு முழமுமில்லை!

**அரசியல் வாதிகள்**
சூடுகண்ட பூனைகள்
மீண்டும்
அடுப்பங்கரையில்!

பொகவந்தலாவை
சோ.ஸ்ரீதரன்.


# நறுக்-நறுக் டயலாக்



**என்ன பேசிக்கொள்வார்கள் இவர்கள்?**
உங்களுக்கும் அனுபவம் இருக்கலாம். இருந்தால் அனுபவத்தை நயமாய் எழுதுங்கள். அனுபவம் இல்லாதவர்களுக்கு இருக்கவே இருக்கிறது கற்பனைக் குதிரை. தட்டி விடுங்கள். தபாலட்டையில் மட்டுமே பத்து வாக்கியங்களுக்கு மேற்படாமல் நறுக்-சுருக்-காக எழுதியனுப்புங்கள். சிறந்தவை பிரசுரமாகும்.

-முகவரி-
நறுக் டயலாக்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.





## நட்சத்திரங்கள்

வானப்பெண்
சப்பித் துப்பிய
சக்கைகள்..!

## கலண்டர்

ஓரேயாண்டில்
பன்னிரெண்டு பிள்ளைகளைப்
பெற்றெடுத்த
தாய்..!

## தினக்குறிப்பு (டயறி)

விடுமுறை
நாட்களிலும்கூட
நினைவுகளையேற்கும்
சேமிப்பு வங்கி...

## தராசு

ஒருவர் குற்றத்தை
ஒருவரே
காட்டிக்கொடுத்துவிடும்
உண்மை
அரிச்சந்திரர்கள்..!

விவே.வசந்தகுமார்
கோமாரியூர்.

## என்னாகும்?

எங்கள்
இட்டுகள்
கிடைத்த
பின்னாவது
நாட்டில்
வேட்டொலிகள்
தீர்க்கப்படுமா?
அல்லது
எங்கள்
வீடுகள்
பூட்டுக்களால்
விலங்கிடப்பட்டு
நாங்கள்
காட்டு வாழ்விலேயேதான்
கஷ்டப்பட
வேண்டுமா

சுப்பிரமணியம் வாணீஸ்வரி
அப்பர் கலஹா.

## இந்த வாரம் உங்கள் பலன்
(04.09.94 முதல் 10.09.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன் |
| கன்னி | - புதன் |
| துலாம் | - வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| மிதுனம் | - செவ்வாய் |

★ சந்திரன்—கர்க்கடகம், சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், முன்னேற்ற வாழ்க்கை. | பி.ப 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம், கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- தன்னம்பிக்கை, தெய்வானுகூலம். | பி.ப 2 மணி |
| சனி- செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- கடன்தொல்லை, மனக்கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- முயற்சி மேன்மை, உயர்ந்த வாழ்க்கை. | காலை 9 மணி |
| செவ்வாய்- பணக்கஷ்டம், காரியத்தடை. | பி.ப 1 மணி |
| புதன்- வீண் தொல்லை நீங்கும், முயற்சி வெற்றி. | காலை 8 மணி |
| வியாழன்- தனலாபம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, பகைநீங்கும். | காலை 9 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பணத்தட்டுப்பாடு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக்கவலை நீங்கும், பொருள்வரவு. | பி.ப 1 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| புதன்- துயர் அதிகம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப 1 மணி |
| வியாழன்- பணக்கஷ்டம், வீண் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- முயற்சிகளில் வெற்றி, மனக்குறை நீங்கும். | காலை 9 மணி |
| சனி- வெளியிடப் பயணம், திடீர்ச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் நட்டம், கடன்தொல்லை. | காலை 6 மணி |
| திங்கள- மனப்போராட்டம், பணக்கஷ்டம். | காலை 10 மணி |
| செவ்வாய்- முயற்சிகள் வெற்றி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- தெய்வ நம்பிக்கை, காரியசித்தி. | பி.ப 1 மணி |
| வியாழன்- மனமகிழ்ச்சி, புதிய முயற்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பணச்செலவு. | பகல் 12 மணி |
| சனி- கடன் தொல்லை, இடமாற்றம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- வீண் சந்தேகம், மனக் கலக்கம். | பி.ப 2 மணி |
| புதன்- தனலாபம், கௌரவம். | பி.ப 3 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை,செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- வீண் குறைகேட்டல், நிலையற்ற தன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பயனற்ற செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சிகளில் வெற்றி. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பி.ப 1 மணி |
| புதன்- தெய்வானுகூலம், மனஅமைதி. | காலை 8 மணி |
| வியாழன்- இடமாற்றம், பணச்செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியரால் தொல்லை, கலகம். | பகல் 12 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பணச் செலவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- கடன்சுமை, மனப் பீதி. | காலை 7 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முன்னேற்றம். | காலை 7 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| சனி- இனசன விரோதம், செலவு மிகுதி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- தொழில்நிலைப் பேறு, செலவு மிகுதி. | பகல் 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- தனலாபம், உயர்ந்த எண்ணம். | பி.ப 2 மணி |
| வெள்ளி- இடமாற்றம், எதிர்பார்த்த நன்மை. | பகல் 12 மணி |
| சனி- தொழில் நிலைப்பேறு, கடன்சுமை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### தனுசு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- [illegible] | காலை 7 மணி |
| திங்கள்- [illegible] | காலை 10 மணி |
| செவ்வாய்- [illegible] | பகல் 12 மணி |
| புதன்- [illegible] | காலை 8 மணி |
| வியாழன்- [illegible] | பகல் 11 மணி |
| வெள்ளி- [illegible] | காலை 6 மணி |
| சனி- [illegible] | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-[illegible], அதிஷ்ட இலக்கம் -9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பணத்தடை. | பி.ப 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 10 மணி |
| செவ்வாய்- [illegible] நீங்கும், பெரியோர் நட்பு. | காலை 8 மணி |
| புதன்- இடமாற்றம், அலைச்சல். | காலை 7 மணி |
| வியாழன்- முயற்சிகளில் வெற்றி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- இடமாற்றம், வீண் குறைகேட்டல். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, மன மகிழ்ச்சி. | பகல் 1 மணி |
| திங்கள்- தேகசுகம் பாதிப்பு, மனக் கலக்கம். | காலை 7 மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், உயர்ந்த வாழ்க்கை. | பகல் 11 மணி |
| புதன்- துயர் நீங்கும், கடன் தொல்லை. | காலை 8 மணி |
| வியாழன்- பெரியோர் எதிர்ப்பு, சுப கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப 2 மணி |
| சனி- இனசன விரோதம், மனக் கவலை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| திங்கள்- வீண் குறை கேட்டல், கடின உழைப்பு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- இடமாற்றம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | காலை 8 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், சஞ்சலம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- தொழில் கேடு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- பணக்கஷ்டம், மனக் கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✝ விந்தைகள்

## இருபதிலிருந்து அறுபத்தேழு வரை

### ஒரு பெண்ணின் சோகக் கதை



மரியாவுக்கு 20 வயதானபோது -1947ம் ஆண்டு மருத்துவ மனை புகுந்தவள், கடந்த 47 வருடங்களாக அதனைவிட்டு வெளியேற முடியவில்லை. கட்டிலில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் அவளால் எழுந்திருக்கவே முடியாது.

மாரியா 15 வயது மாணவியாக இருக்கும்போது இடுப்பில் வலி கண்டது. தொடர்ந்து மருத்துவம் பார்த்தும் குணம் காணப்படவில்லை. 20 வயதாக இருக்கும் போது நோயின் கடுமை காரணமாக பிரேஸில் நாட்டிலுள்ள ச ஓ பௌலோ ஹம்போர்ரோ பிறியோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். இடைக்குக் கீழ் இயக்கம் எதுவுமற்ற மரியோ டிலூர்து குவார்டாவின் வலது காலை வெட்டி எடுக்கவேண்டியதாயிற்று. மாதக் கணக்காக கண்ணீர்விட்டாள். தொடர்ந்து இடது காலும் அகற்றப் பட்டது.

துயருடன் துன்பப்பட்டுக்கொண்டிருந்த அவளின் படுக்கை அருகே ஓரிளைஞனை சக்கர நாற்காலியில் வைத்து அழைத்து வந்தனர். அவரும் இடையின்கீழ் இயக்கமற்ற நிலையினை அடைந்து கொண்டிருந்தார். தற்கொலை செய்யப் போவதாக அந்த இளைஞர் கூறிக்கொண்டிருந்தார். இருவரும் பல நாட்கள் சந்தித்து உரையாடினார்கள். இதன் பயனாக இருவரும் தங்கள் தங்கள் வாழ்க்கையில் நம்பிக்கை வைத்தார்கள்.

**ஊனமானபோதும் உடையாத உள்ளம்**

அந்த இளைஞருக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பல கதைகளைக் கூறிய மாரியா, தன்மீதே நம்பிக்கை கொண்டவனானாள். தனக்குத் தெரிந்த செயற்கைப் பூ கட்டும் முறையினை அந்த இளைஞனுக்கும் கற்றுக் கொடுத்தாள். அவரும் மருத்துவ மனையிலிருந்து வெளியேறி செயற்கைப் பூகட்டி விற்கும் தொழிலில் நல்ல வருமானம் பெறுகிறார்.



இதனைத் தொடர்ந்து நோய் காரணமாக வாழ்க்கையில் நொந்து-தற்கொலை செய்ய வேண்டும் என்று முடிவுக்கு வரும் இளைஞர்களையும் யுவதிகளையும் மருத்துவமனை அதிகாரிகள் மரியாவிடம் கொண்டு வந்து விடுகின்றனர். படுக்கையில் கிடந்தவண்ணமே அவர்களுக்கு புத்திமதி கூறி தனக்குத் தெரிந்த துணிகளில் பூக்கள் தைத்தல், செயற்கை பூ தயாரித்தல் போன்ற கைப் பணிகளைச் சொல்லித் தருகிறார்.

மரியாவுக்கு இன்று பிரேஸில் நாட்டிலேயே, ஒரு தனி மவுசு ஏற்பட்டுள்ளது. 'கருணைத் தேவதை' என்று இன்று அவரை அனைவரும் அழைக்கின்றனர். தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு மரியாவிடம் ஆலோசனை பெறுவோர் நாடெங்கும் உள்ளனர்.

"நூற்றுக்கணக்கான மன நோயாளிகளுடன் பேசி அவர்கள் வாழ்க்கை மீது பற்றுள்ளவர்களாக மாறுவதை அறிந்து பெரு மகிழ்வினை அடைகிறேன். இது எனது வாழ்க்கையே சிறந்த அர்த்தமுள்ள ஒன்றாக்கிவிட்டது" என்கிறார் மரியா.

## ♥ என்ன பொருத்தம்-இது என்ன பொருத்தம்!





வாழ்விலும் தாழ்விலும்; சுகத்திலும் துக்கத்திலும் கணவன் மனைவி இணை பிரியாது இணைந்திருப்பதே உண்மையான வாழ்க்கை. இந்த நெறி தவறாமல் வாழும் பலரைப் பார்த்திருக்கிறோம். கணவன்-மனைவி உறவில் இத்தகைய அதிசயம் இதுவரை நிகழ்ந்ததில்லை.

கணவனுக்கும் மனைவிக்கும் ஒரே நோய்கண்டு, ஒரே நாளில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஒரே தினத்தில் ஒரே மருத்துவரால் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப் பட்டு-அருகருகே அமைந்த படுக்கைகளில் இருந்த வண்ணமே குணமாகி விட்டனர்.

ஜாக்குலின் மற்றும் அல்மக் எல் லீ ஆகிய இருவரும் திருமணமான தம்பதி. இருதய நோயால் துன்புற்றார்கள். இருதய (பைபாஸ்) சத்திரசிகிச்சை இருவருக்குமே செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரே நாளில் இருவரும் ஒரே மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். நியூ ஜேர்சி மாநிலத்திலுள்ள 'அவர் லேடி ஒஃப் லூர்ட்ஸ் மருத்துவமனையில் இருவருக்கும் டாக்டர் ஜோசஃப் குச்லர் இருதய-பைபாஸ் சத்திரசிகிச்சையினை மேற்கொண்டார்.

காலை 7.00 மணிக்கு ஜாக்குலினுக்கு சிகிச்சை நடைபெற்றது. 4 மணி நேரத்தின்பின்னர் அல் மக் எல் லீக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இருவருக்கும் ஒரே அறையில்-அருகருகே படுக்கைகள் தரப்பட்டன. இன்று பூரண குணமடைந்து வீடு திரும்ப ஆயத்தமாகவுள்ளனர்.

பென்சில்வேனியா மாநிலத்திலுள்ள கல்ப் மவுண்ட் என்ற இடத்தில் ஜாக்குலினும் அல் மக் எல்லீயும் சிறு வயது முதல் ஒன்றாகவே வளர்ந்து வந்தனர். பின்னர் ஜாக்குலின் நியூ ஜேர்சிக்கும் அல் மக் வியட்நாமுக்கும் (போர்வீரனாக) போய் விட்டனர். இருவரும் ஒருவரையொருவர் நினைவு கூரும் நிலையிலேயே இருக்கவில்லை. தொடர்புமிருக்கவில்லை. போர் முனையிலிருந்து திரும்பிய அல் மக், நியூ ஜேர்சிக்கு ஏதோ ஒரு அலுவலாகச் சென்றிருந்தபோது தற்செயலாக ஜாக்குலினைச் சந்தித்தார். இருவரும் காதல் வயப்பட்டனர்.

1966ம் ஆண்டு திருமணமானது. அன்று முதல் இன்றுவரை இருவரும் ஒரு நாளேனும் பிரிந்ததே இல்லையாம்.

இணைந்து வாழும் இத்தம்பதியினர் ஒரே நோய்க்காக- ஒரே நாளில்- ஒரே மருத்துவமனையில் சத்திரசிகிச்சையை மேற்கொண்டது, மருத்துவ வரலாற்றில் இதுவே முதற்தடவை என்று டாக்டர் ஜோசஃ குச்லர் தெரிவித்தார்.

இதேபோன்று கோவா மற்றும் தக்காளிப் பழங்களை அதிகம் விரும்பி உண்பவர்கள் ஏனையோருடைய கருத்துக்கு மதிப்பளிப்பவர்களாக இருப்பார்கள். ஆனால் திடீரென உணர்ச்சி வசப்பட மாட்டார்கள்.

அன்னாசிப்பழம், ஆப்பிள் போன்ற பழங்களில் நாட்டம் கொண்டவர்கள் எல்லோருடனும் ஒத்துப் போகக் கூடியவர்கள். எதிலும் விடாப்பிடியாக இருக்கமாட்டார்கள். சிக்கலான பிரச்சனைகளையும் சுலபமாக அணுகக் கூடியவர்களாக இவர்கள் இருப்பார்கள்.

## போட்டாளே ஒரு போடு! -போனது குழந்தை உயிர்-







**கிரைம் நியூஸ்**



மத்தியூ ரெயிலர்- இரண்டு வயது பூர்த்தியான சின்னஞ்சிறு பாலகன். அவனுடைய தாயான 31 வயது கிறிஸ்ரீ லேள நொயிஸ், தனது காதலன்- 23 வயதான ஜெரி டொன் கேம்லின் என்பவனுடன் உல்லாசமாக இருந்தாள். குழந்தை மத்தியூ இடையில் ஏதோ தொல்லை கொடுத்திருக்கிறான்.

காம வெறி தலைக்கேறிய ஜெரி, பேஸ் பந்தாட்டத்துக்கான மட்டையினை எடுத்து மத்தியூவின் தலையிலடித்து அவனை அமைதியடையச் செய்துவிட்டு தங்கள் காமக்களிக்கூத்தை ஆடி முடித்தனர்.

இதற்கிடையில் மத்தியூவின் உயிர் பிரிந்து விட்டது. உண்மையினை மறைத்து, மத்தியூ குளியலறையில் விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டான் என்று பொலிசாரிடம் கிறிஸ்ரீ பொய் கூறியிருக்கிறாள். பிரேத பரிசோதனையில் உண்மை வெளிவந்தது. வழக்கு நடைபெற்று கள்ளக் காதலர் இருவருக்கும் கடும் தண்டனையும் வழங்கப்பட்டுவிட்டது.

கொலை வழக்கு விசாரணைகளை நடத்தும் உயர் நீதி மன்றங்களில் நீதிபதிக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஒரு -ஜூரி' சபை அமைக்கப்படுவதுண்டு. இவ்வழக்கில் ஜொன் கன்னிங்ஹாம் என்பவர் தலைமையில் 11 ஜூரர்கள் அமர்த்தப்பட்டனர். இவர்கள் ஒரே குரலில் இருவரையும் கொலைக் குற்றவாளிகளெனக் கண்டார்கள். கொலை செய்யப்பட்ட குழந்தை மத்தியூவின் சடலம் போதுமான மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படவில்லை என்பதை ஜூரர் சபைத் தலைவர் கன்னிங்ஹாம் அறிந்து மிக வேதனைப்பட்டார். ஒக்லஹாமா மாநிலம் தல்சா நகரிலுள்ள 30 இடுகாடுகளையும் அலசி இறுதியில் மத்தியூவின் புதை குழியைக் கண்டு பிடித்தார். எனைய சக ஜூரிகளின் உதவியுடன் இந்தக் கல்லறையில் விசேட பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்ததுடன் மத்தியூவின் நினைவாக ஒரு படிகக் கல்லினையும் நட்டு வைத்துள்ளார். "கொடுமைக்குள்ளாகி மாண்ட அந்தப் பாலகன் செத்தாலும் அவன் நினைவு என்றும் நிலைத்திருக்க வேண்டும்" என்று கன்னிங்ஹாம் கூறினார்.

## நீங்கள் விரும்பும் உணவை வைத்து உங்கள் குணத்தை அறியலாம்

நீங்கள் எந்தப் பதார்த்தத்தை விரும்பி உண்ணுகிறீர்களோ அதனை வைத்தே உங்கள் சுபாவத்தை கண்டறிந்து விடமுடியும் என்று ஆய்வுகள் புலப் படுத்துகின்றன. சிக்காகோவிலுள்ள சுவை மற்றும் மணம் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனம் இத்தகவலைத் தருகிறது.



சிலருக்கு ஒரேஞ்ச் மற்றும் வாழைப் பழங்களை, ஏனைய உணவுப் பதார்த்தங்களைவிட அதிகம் பிடிக்கும். இவர்கள் உறுதியான மனப்போக்குடையவர்கள். தலைமை தாங்கும் சுபாவம் இயல்பாகவே இவர்களுக்குண்டு.

"நாம் சுட்டு வீழ்த்தின புறா இந்தப் பைக்குள்ளே வீழ்ந்திரு க்குமோ?"



www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

ரசிகனின்

# கொலை விழும் நேரம்



**இ**ருக்கை விட்டு எழுந்த காயத்திரி தன்னை பயத்தோடு கவனித்த இந்திராவைப் பார்த்து புன்னகைத்தாள். பின்னர் வினோவை ஆழமாய் நோக்கினாள்.

இப்போது காயத்திரியிடம் ஒரு கம்பீரம் வந்து தொற்றிக்கொண்டது.

எதிரே இருப்பவரை ஊடுருவும் தன்மை கண்களில் தெரிந்தது.

உத்தியோக தோரணை என்பார்களே அதன் விளக்கம் இதுதானோ? என்று நினைக்கும்படியாக காயத்திரியிடம் மாற்றம் தெரிந்தது.

வினோவை விட்டு பார்வையை விலக்காமல், காயத்திரி சட்டென்று சொன்னாள்:

"வினோ! நீ பொலிஸ் வலைக்குள் இருக்கிறாய்."

அவள் கூறியது வினோவிடம் எந்த சலனத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

கல்லெறிந்துவிட்டு குளத்தின் சலனத்தை கவனிப்பதுபோல காயத்திரி அவனிடம் தனது வார்த்தைகள் எறிந்துவிட்டு மாற்றத்தை தேடினாள். மாற்றம் தெரியாமல் போக ஏமாந்து போனாள்.

"நம்பவில்லையா நீ?"

என்று கேட்டாள்.

"அப்படிச் சொல்லவில்லையே நான். தொடரலாம் நீ."

என்றான் வினோ குரலிலும் சலனமேயில்லாமல்.

"பூபால் அன்ட் பிரதர்ஸ் ஹரிகரன் கொலை; அதைத் தொடர்ந்து தொடராக நடந்த கொலைகள் அனைத்திலும் உனக்கு ஒரு சம்பந்தம் இருப்பதாக ஒரு சந்தேகம் எங்களுக்கு."

"எவ்வாறான சம்பந்தம் என்று சந்தேகம்?"

"நேரடியாக அல்லது மறைமுகமாக."

வினோ சின்னதாக புன்னகைத்தான்.

"உறுதியாகத் தெரியாது. அதுதான் உரசிப் பார்த்து அறிய உன்னை அனுப்பி வைத்தார்களாக்கும்?"

பலமாக இருபுறமும் தலையாட்டி கண்களை மூடித் திறந்து,

"வினோ எனது காதலையும் விசாரணையையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பாதே பிளீஸ்."

"காதல்!"

இப்போது வாய்விட்டுச் சிரித்தான் வினோ. இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள் இந்திரா. சிரித்துக் கொண்டே கேட்டான்,

"கையில் விலங்குபோட காத்திருக்கும் இடைப்பட்ட நேரத்தில் உங்களுக்கு பொழுது போக காதலை விட்டால் வேறு விளையாட்டு கிடைக்கவில்லையா மிஸ் காயத்திரி? கரம்போட், செஸ், காட்ஸ் என்று எத்தனையோ விளையாட்டுகள் இருக்க, காதல் விளையாட்டு எதற்கு காயத்திரி?"

வினோவின் குரலில் கேலிபாதி கோபம் மீதி தெரிய,

"ரைட். இப்போது என்னை நீ நம்பத் தயாராக இல்லை. நான் என்ன சொன்னாலும் உடனே மறுத்து வார்த்தையால் சுடுவாய்."

"வாழ்க்கையைச் சுடும் காதல் விளையாட்டை விட, வார்த்தையால் சுடுவது ஒன்றும் பெரிய விசயமல்ல இன்ஸ்பெக்டர் காயத்திரி."

இன்ஸ்பெக்டர் என்பதை அழுத்தி உச்சரித்தான்.

காயத்திரி ஒரு முடிவுக்கு வந்தது போல் கேட்டாள்:

"வினோ உன்னைக் காப்பாற்ற என்னால் முடியும். என்னிடம் உண்மையைச் சொல்ல உன்னால் முடியுமா?"

வினோ அவள் கேள்வியை வாங்கிய படியே சட்டைப் பையில் இருந்து சிகரெட் பெட்டி எடுத்து திறந்து, சிகரெட் உதட்டில் பொருத்தி, ஜீன்ஸ் பொக்கற்றில் இருந்து லைட்டர் எடுத்து தீ மூட்டினான்.

இரசித்து புகைத்துக்கொண்டு அவளை பார்த்தான். பின்னர் புகையை உதட்டாலும் மூக்காலும் விடுதலை செய்தபடி கேட்டான்,

"எந்த உண்மையை?"

காயத்திரி அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு,

"தொடர் கொலைகள் பற்றி உனக்குத் தெரிந்த உண்மைகளை...."

ஒரு தம் இழுத்து பூ என்று ஊதிக் கொண்டு, மிக அலட்சியமாக,

"சொல்லாவிட்டால் என்ன செய்ய உத்தேசம் அம்மணி?"

"பொலிஸ் செய்ய வேண்டியதைச் செய்யும் வினோ."

"யூ மீன் என் எலும்புகளை எண்ணுவீர்கள். தலைகீழாக கட்டி தொங்கவைத்து இரத்தம் சொட்ட, சொட்ட ஆங்காங்கே தட்டிப் பார்ப்பீர்கள்...."

காயத்திரி பதிலேதும் சொல்லாமல் அவனையே நோக்கிக்கொண்டிருந்தாள். அவனே தொடர்ந்தும் பேசினான்,

"வசதியிருப்பவன் தன் வசதிற்கேற்ப சட்டத்தை வளைக்கலாம். அப்படி வளைக்கும்போது யாரெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது முக்கியமல்ல. புத்தம் புதிய கரன்சி நோட்டுக்களை நீட்டுகிற கரங்களில் இரத்தக் கறையிருப்பதை சட்டம் கண்டும் காணாமல் இருந்துவிடும். பாதிக்கப்பட்டவர்களும் கைகட்டிக்கொண்டு நின்று வேடிக்கை பார்த்தால் மிக வசதியாக இருக்கும். உங்களுக்கு எல்லாம் சந்தோசமாகவும் இருக்கும். என்ன காயத்திரி நான் சொல்வது உண்மைதானே?"

அவன் மூச்சுவிடாமல் பேசி முடிக்க காயத்திரியிடம் இருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டு அவள் மார்புகள் எழுந்து தணிந்தன.

"மறைமுகமான நியாயப்படுத்தலா வினோ?"

"நோ. நியாயம் என்று படுவதை எடுத்துச் சொல்லல்."

"சோ...நீ...உனக்கு நியாயம் என்று பட்டால் கொலையும் செய்வாய்?"

"ஆம் என்று சொன்னால் உன் வேலை சுலபமாகிவிடுமல்லவா காயத்திரி? ஆனால் நான் அப்படிச் சொல்ல மாட்டேன். ஏன் என்றால் குற்றவாளியை உடனே கொன்றுவிட்டால் தனது தவறுக்காக வருந்தித் துடிக்க அவனுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் சுலபமாக- சுகமாக போய்ச் சேர்ந்துவிடுவான்."

"ஆகவே?"

"கொல்வது-ஐ மீன்-உயிரைக் கொல்வது என் கொள்கையல்ல!"

உறுதியாய் சொன்னான்.

"அப்படியானால் கொலைகளுக்கு காரணம் யார் வினோ? பழி உன்மீது விழ, பொலிசின் சந்தேகப் பார்வையில்- படாமல் தப்பிச் செல்லும் அந்த குற்றவாளி யார் வினோ?"

வினோ அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான். பரிதாபமா-கேலியா என்று புரியமுடியாத பார்வை.

"தெரிந்தால் அதை நான் ஏன் சொல்ல வேண்டும்?"

"உன்னை நீ காப்பாற்றிக்கொள்ள, உன் தங்கை வெளியே தவிக்க, நீ உள்ளே போய் அவளை நினைத்து ஏங்காமல் இருக்க, அத்தோடு என் சுயநலத்தையும் சேர்த்துக் கொள். எனது நீ எனக்கு பத்திரமாக கிடைக்க."

அவள் சொல்லி முடிக்க, வினோ கேலி இல்லாமல், கோபம் இல்லாமல், குத்தல் இல்லாமல் அவளிடம் கேட்டான்,

"என்னை நீ உண்மையாகவே காதலித்தாயா காயத்திரி?"

அவசரமாய் பதில் வந்தது காயத்திரியிடமிருந்து.

"சிறு கீறுகூட இல்லாத சுத்தமான உண்மை வினோ."

"ரைட்- என்னைக் காப்பாற்றிக் கொள்ள, எவரையாவது பலியிடக்கூடிய அப்பட்டமான சுயநலக்காரன் நான் என்று நீ எப்படி நினைக்கலாம்? ஆகவே உன் காதல் என் உள்ளத்தை அறியுமளவுக்கு ஆழமாக இல்லையென்று அர்த்தம். ம்... மறுத்துப்பேச வேண்டாம் காயத்திரி! நீ என்ன சொன்னாலும் அர்த்தம் மாறிவிடாது."

காயத்திரியின் முகத்தில் ஒரு மலர்ச்சி தெரிந்தது.

"சந்தோசம் வினோ; நிறைய சந்தோசம்."

என்றாள். பொய்யில்லாத பூரிப்போடு வந்தது குரல்.

"ஏன் சந்தோசம்?"

"உன்னை காதலித்ததில்; நெஞ்சில் நேர்மை இருக்கும் உன்னை என் நெஞ்சில் வாங்கிக்கொண்டதில்; வினோ! உண்மையான கொலையாளி யார் என்று உனக்கு நான் சொல்லட்டுமா?"

இப்போதுதான் வினோவின் முகத்தில் ஆச்சரிய ரேகைகள் எட்டிப் பார்த்தன. கண்களில் ஒரு அதிர்ச்சி மின்னல் தோன்றி மறைந்தது.

அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலோடு கவனித்தான்.

◻◻

**தி**ரும்பிப் பார்த்த நிர்மலா தன் பின்புறம் நின்றவளை இதற்கு முன் எங்கேயோ பார்த்திருக்கிறேனே என்று யோசித்தாள்.

இவள் எப்படி எதற்கு இங்கே வந்தாள்.

குலாம்ஷா செல்லும்வரை ஒளித்திருந்துவிட்டு இப்போது என்னிடம் எதை எதிர்பார்த்து நிற்கிறாள்?

என்று பயம் நெஞ்சில் உறுத்த யோசித்தாள்.

நின்றவள் கறுத்த, இறுக்கமான ஜீன்ஸ் அணிந்திருந்து திரட்சியான சதைகளை அவஸ்தைப்பட வைத்துக்கொண்டிருந்தாள். மேலே நீல நிற ரீ சேட், இன் பண்ணியிருந்தாள். அதனால் ஏற்பட்ட இறுக்கம் மேலே உள்ள பரிமாணம் என்னவென்று பகிரங்க விளம்பரம் செய்தது. அளவாக லிப்ஸ்ரிக் பூசிய உதடுகளால் மெல்ல புன்னகைத்துக்கொண்டு,

"பயப்படாதே நிர்மலா. சொறி! நிம்மி என்று அழைத்தால்தானே உனக்குப் பிடிக்கும். எனவே நிம்மி பயப்பிடாதே. ஏன் நின்று பேசி கால்களுக்கு வெறுப்பேற்ற வேண்டும்? அதனால் நீ அங்கே நான் இங்கே அமர்ந்து கொள்ளலாம். பிளீஸ் சிட்டவுன்! யார் இவள் என்று நீ யோசிக்கலாம். நானும் ஒரு பொய்யான பெயரில் உன்னிடம் அறிமுகமாகலாம். ஆனால் வேண்டாம். ஏன் பொய்? வேஸ்ட்."

நிர்மலா அவள் உத்தரவுக்கு கட்டுப்பட்டு அமர, எதிரேயிருந்த மற்றொரு சோபாவில் அவள் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டு,

"உன்னைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது நிம்மி. நான் ஆணாக பிறக்காமல் போனேனே என்று வருத்த மாகவும் இருக்கிறது நிம்மி. பொறாமைக்கு காரணம் உன் அழகு. வருத்தம் வரக் காரணம்..."

கண்ணடித்துச் சிரித்தாள். நிர்மலாவுக்கு பயத்தின் மத்தியிலும் வெட்கமாக இருந்தது.

"என்ன, வெட்கமாக்கும்....?"

என்றாள். சிரித்தாள். சிரிக்கும்போது கன்னத்தில் விழுந்த குழியால் மேலும் அழகாய் தெரிந்தாள்.

"நிம்மி! இதற்கு முன் எங்காவது என்னைக் கண்டிருக்கிறாயா நீ?"

கண்டதுபோல் இருந்தாலும் "இல்லை" என்று பொய் சொன்னாள் நிர்மலா.

"இப்போது கண்டதையும் நீ மறந்து விடுவது நல்லது. இல்லாவிட்டால் பாவம் நீ. அநியாயமாக சாகவேண்டியிருக்கும். நீ ஏன் சாகவேண்டும்? விரும்பமாட்டாய். அது சரி நிம்மி நீ ஏன் சித்ராவை கொலை செய்தாய்?"

நெற்றிப்பொட்டில் அடிபட்டதுபோல திகைத்து, அவளைப் பார்த்தாள் நிர்மலா.

அவளோ புன்னகைத்துக்கொண்டிருந்தாள்.

அந்தப் புன்னகை நிர்மலாவுக்குப் பயம் தந்தது. அந்தப் புன்னகையில் ஏதோ ஒரு விபரீதம் மறைந்திருப்பதுபோல் தெரிந்தது.

நிர்மலாவின் உடலில் நடுக்கம் தொற்றிக் கொண்டது.

மேலே மின் விசிறி ஓடிக்கொண்டிருந்த போதும் நிர்மலாவின் உடல் வியர்த்தது. அவள் முன் நெற்றியில் வியர்வைத் துளிகள் எட்டிப்பார்த்தன.

அவளோ அதே புன்னகையோடு நிர்மலாவையே கவனித்துக்கொண்டிருந்தாள்.

"கைக்குட்டையில்லையா நிம்மி?"

என்று கேட்டாள். நிர்மலா அவளை நேராகப் பார்க்க பயந்தாள். இதயம் வேகமாய் துடிக்கும் சத்தம் எதிரே உள்ள அவளுக்கு கேட்டுவிடக்கூடாதே என்று நினைத்தாள். அவளோ-

"நிம்மி வியர்க்கிறது பார் உனக்கு. ஒரு கொலையோ ஒன்பது கொலையோ தண்டனை ஒன்றுதான். முழுக்க நனைந்த பின் முக்காடு தேவையா நிம்மி? யோசி- முடிவுக்கு வா."

என்றாள். நிர்மலா தன் தலையை உதறியபடி,

"நோ... நோ... நோ... நான்... யா...யாரை..யும் கொல்ல... கொல்லவில்லை. யார் நீ...நீ யார்?"

என்று சக்தியனைத்தையும் திரட்டி குரலுக்கு கொடுத்து உரத்துக் கேட்டாள். அத்தோடு சக்தி முடிய, பெற்றோல் தீர ஒய்ந்து நிற்கும் கார்போல இயக்கம் இல்லாமல் மயங்கிப் போனாள்.

◻◻

**ஐ**.ஜி. என்ன சொல்லப் போகிறார் என்று அறிய டி.ஐ.ஜி.டென்சிலும்- இன்ஸ்பெக்டர் குலாம்ஷாவும் தமது இருக்கைகளில் இருந்து முன்னே நகர்ந்து ஆர்வமாகினார்கள்.

ஐ.ஜி. தன் மீசைக்குள் எதையோ தேடுவது போல் ஆட்காட்டி விரலை ஒட்டித்திரிய வைத்தபடி அவர்கள் இருவரினதும் ஆர்வத்தை இரசித்தார்.

"நான் இப்போது அந்தச் சந்தோசத்தை சொல்லமாட்டேன். அது உங்கள் விசாரணைக்கு தவறான திசையைக் காட்டிவிடலாம்."

இருவருக்கும் ஏமாற்றமாகிவிட்டது. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

ஐ.ஜி.மெல்லச் சிரித்து, டி.ஐ.ஜி. டென்சிலிடம்,

"அந்தக் கசட்டை குலாம்ஷாவும் கேட்கட்டும். இருவரும் ஒன்றாக இருந்து கேளுங்கள். அதன் பின் இருவருக்கும் என்ன கருத்து தோன்றுகிறதோ அதனை எனக்குச் சொல்லுங்கள். அடுத்த அறையில் கசட் பிளேயர் இருக்கிறது. போட்டுப் பார்க்கலாம்."

இருவரும் எழுந்து சல்யூட் வழங்கிவிட்டு, வெளியேற ஐ.ஜி. அறைக்கு பக்கத்தில் இருந்த அறைக்கு சென்றனர்.

கசட் பிளேயர் என்னை உபயோகிக்கலாம் என்று காத்திருந்தது.

டி.ஐ.ஜி.கசட்டை அதன் வயிற்றில் போட, அது தானாகவே றிவைன் பண்ணி முதலில் இருந்து ஆரம்பித்தது.

கூர்மையாக கேட்கத்தொடங்கினார் குலாம்ஷா.

ஏற்கனவே கேட்டதுதானே என்ற அலட்சியம் இல்லாமல் அவதானமாய் செவிமடுத்தார் டி.ஐ.ஜி.டென்சில்.

ஐ.ஜி.அப்படி என்னதான் அறிந்து கொண்டார் என்ற கேள்வி இருவர் மனதிலும் ஓர் ஓரத்தில் இருந்து குடைந்து கொண்டிருந்தது.

கசட் ஓடி பாதி தூரம் செல்லும்வரை டென்சிலுக்கு கேள்வியின் விடை கிடைக்கவில்லை. அலுப்பாகவும் இருந்தது.

குலாம்ஷா முதல் தடவையாக கேட்பதால் படு தீவிரமாக காதுகளால் வாங்கிக் கொண்டிருந்தார்.

ஐ.ஜி.யின் சந்தேகம் என்னவென்று அறியும் இடம் வந்துகொண்டிருந்தது. வந்துகொண்டிருப்பது புரியாமல் கேட்டுக் கொண்டிருந்த இருவரும், கசட் ஓடி அந்த இடம் வந்தவுடன் விழிகள் விரிய ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

பிளேயரை நிறுத்திவிட்டு டி.ஐ.ஜியைப் பார்த்தார் குலாம்ஷா.

முதலில் கேட்டபோது எப்படி கவனியாமல் விட்டேன் என்று மனதுக்குள் தனது தலையில் குட்டியபடி,

"கொஞ்சம் றிவைன் பண்ணிப் போடுங்கள் குலாம்ஷா."

என்றார் டி.ஐ.ஜி.டென்சில்.

(தொடரும் வரும்)


"இதயம் காட்டும் கண்ணாடி வதனமில்லையா?
இருவிழிகள் படைத்திருந்தும் புரியவில்லையா?
சிதறிவரும் வார்த்தைகளில் தெரியவில்லையா?
சிந்தையிலே தெளிவுடையோர் யாருமில்லையா?"

-கவியரசு கண்ணதாசன்-


அங்கம்

29

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: நா. ஜெயரஞ்சன்
வயது: 26
முகவரி: [illegible], வெலிய முன ஜெயந்தனை, வத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், ஓவியம் வரைதல்.




பெயர்: எம். நிஸாம்
வயது: 25
முகவரி: 37B, குரு குத்தல, கடுகன்னாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை பார்த்தல், வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.




பெயர்: கலைவாணி சண்முகம்
வயது: 18
முகவரி: 136, தபாற்கந்தோர் வீதி, மஸ்கெலியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, சினிமா.



பெயர்: பாத்திமா சரின்
வயது: 22
முகவரி: 132/579, டி மெல் வத்த, கிராண்ட்பாஸ், கொழும்பு-14.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.



பெயர்: ஆ.தில்லைநாதன்
முகவரி: P.O.BOX NO-40426 DOHA, QATAR A.G.
பொழுதுபோக்கு: ரீ.வி.பார்த்தல், நண்பர்களுடன் அரட்டை அடித்தல்.



பெயர்: எம்.சியாட்
வயது: 33
முகவரி: S.O.M.C/K.K.A.B. P.O.BOX-1265 KHAMIS MUSHAYT- K.S.A.
பொ.போக்கு: வானொலி, கதைப்புத்தகம், பேனா நட்பு.

பெயர்: வி.சிவகுமார்
வயது: 30
முகவரி: 66, AVENUE DE LA REPUBLIQUE, 93120, LA COURNEUVE, FRANCE.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகளுடன், வெளிநாட்டு முத்திரைகள், நாணயங்கள் சேகரித்தல்.

பெயர்: டபிள்யூ. நஸார்தீன்
வயது: 29
முகவரி: P.O.BOX.NO-48671 SABAHIYAH 54557, KUWAIT.
பொ.போக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: க.வி[illegible]மூர்த்தி
வயது: 33
முகவரி: வெதமுல்ல, இறம்பொட.
பொ.போ: பேனாநட்பு, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எம். ரம்ஸான்
வயது: 19
முகவரி: 107/3, கட்டாப்பு கல்ஹின்ன, கண்டி.
பொ.போ: மெல்லிசைப் பாடல்களைக் கேட்டு இரசித்தல்.

பெயர்: கோ. சுதன்
வயது: 17
முகவரி: 256/50, உட்துறைமுகவீதி. திருகோணமலை.
பொ.போ: பல்வேறு விளையாட்டுக்களைப் பார்த்து இரசித்தல்.

பெயர்: என். முகமட் றிஸ்வி
வயது: 18
முகவரி: 120, பிரதான வீதி, மதவாச்சி.
பொழுதுபோக்கு: சைக்கிள் சவாரி செய்தல், நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# சுமைகள் பொதுவானவை

குட்டிக் கதை



கிண்ணியா சபறுல்லா

வித்யாவுக்குள் சொல்ல முடியாத ஒரே குறுகுறுப்பு. அலை அலையாய் வர்ணிக்க முடியாத ஏதோ இனம் புரியாத சந்தோஷ வடிவங்கள். உள்ளத்தில் எழும் குறுகுறுப்புகளுக்கும் சந்தோஷங்களுக்கும் உருக்கொடுப்பதாய் அவளது சிவந்த உதடுகளில் மிளிரும் மொனாலிஸாப் புன்னகை.

ஆகா! அவளுக்குத்தான் எத்தனை இனிமையான வர்ணிப்புகள். வானில் வண்ணஜாலங்கள். ஏதோ ஒரு சுகக் கனவில் அவளை மறந்து அந்த அனைவரும் இயந்திரமாய் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒபீஸை மறந்த அவளது வெண்டைக்காய்ப் பிஞ்சுவிரல்கள் டைப்ரைட்டிங் மெஷினை தொட்டது தொட்டபடியே இருக்க மீண்டும் மீண்டும் தன் நெஞ்சுக்குள் கேள்விக் கணைகள் தொடுக்கின்றாள்.....'ம்..நான் வாசன மனப்பூர்வமா விரும்புறன். அது போல அவரும் என்னைய விரும்புவாரா....? நிச்சயமா என்னைய விரும்புவார். என்னைய தட்டிக்கழிக்கிறதுக்கு என்னில எந்தக் குறையுமே இல்ல... கல்லூரி காலத்தில் இருந்து காளைகளை இன்றும் திணறடிக்க வைக்கிற அழகு...ஆறுமா சிந்திச்சு எதையும் அணுகிப்பார்க்கிற அறிவு... மந்தப்படி செல்வம்..ஓ.காட் நிச்சயமா என்னைய லவ் பண்ணுவார்.' நாணம் தலைதூக்க தன் பக்கத்து இருக்கையில் அமைதியுடன் வேலையிலும் முழுக் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்த வாசனை ஓரக்கண்ணால் நோக்குகிறாள்.

உண்மை...அத்தனையும் உண்மை... வித்யாவிடம் அழகுக்கு மேல் உள்ள அழகும்...எதையும் சட்டென புரிந்துகொள்கிற கூரிய அறிவும்... அதிகூடிய செல்வச் செழிப்பும் மிதமிஞ்சிக் காணப்படுகின்றன. இதுபற்றி அவளே அடிக்கடி கர்வப்பட்டுக் கொள்வாள்.

வித்யா தன் இதயத்தை வெற்றிடமாகவே வைத்துக்கொண்டிருந்தாள் வாசனை சந்திக்கும்வரை. அவளது அழகில் மயங்கி எத்தனையோபேர் கல்லூரியிலும்சரி ஒபீஸிலும்சரி, அவளுக்காக வலை விரித்திருக்கின்றனர். ஆனால் அவளோ எந்த வலையிலும் சிக்காது தன் நெஞ்சத்தை வெற்றிடமாகவே வைத்துக்கொண்டாள்.

ஆனால் அவள் அந்த ஒபீஸில் வேலை செய்யும் வாசனைக் கண்டபோது தன் இதயத்தைப் பறிகொடுத்தாள். ஓ....அத்தனை தூரம் அவளை அவன் கவருவதற்கு அப்படி என்னதான் மாயம் இருக்கிறது?

அவனது ஆண்மைக்கே அழகு சேர்க்கும் கம்பீரம். ஒரு மிடுக்கான துடுக்குத்தனம். மற்றவர்களைப்போல் எப்போதும் வளவளவென வெட்டிப் பேச்சு பேசாது அமைதியுடன் காணப்படும் சுபாவம், கண்டவுடன் கவரக்கூடிய கருணை நிரம்பிய வதனம், கடமையே கண்ணென ஒரே குறியாய் இருக்கும் நல்ல போக்கு...இன்னும் எத்தனை எத்தனையோ...ஓ... அந்த மங்கையை கவர்ந்ததில் ஆச்சரியமே இல்லை.

வித்யா தேவையானபோது மட்டும்தான் வாசனிடம் பேச்சுக் கொடுப்பாள். அவனும் பரிமாறும் வார்த்தைகளினூடே தன் இதழ்களில் புன்னகையை அடிக்கடி தவழவிட்டுக்கொள்வான். இது வித்யாவுக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது.

அவள்பின்னால் எத்தனையோ இளைஞர்கள் பெண்பித்தனாகி ஜொள்ளு வடித்து 'லோ லோ'வெனச் சுற்றி...ஓ... வாசன் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவன்.

'இன்று எப்படியாவது இதனை வெளிப்படுத்திவிட வேண்டும்' என்ற சங்கற்பத்துடன் அன்று லஞ்சுக்காக அரக்கப்பரக்க வேலையில் ஈடுபட்டிருந்த அனைவரும் செல்ல, தன் வேலையைத் தொடர்ந்து கொண்டிருந்த வாசனிடம் வெட்கம் தனில்கலக்க தருணம் பார்த்து "வாசன்...இதப்பார்த்துட்டு உங்கட முடிவ ஒபீஸ் விட்டப்புறம் என்னட்ட சொல்லுங்க," என்றவள் தன்னை முழுமையாக வெளிப்படுத்தி ஏற்கனவே எழுதியிருந்த லெட்டரைக் கொடுத்தவளுக்கு அன்று வேலையே ஓடவில்லை.

வாசன் ஆச்சரியம் குமிழ துரித கதியில் நடந்துமுடிந்த பெண்மையின் வார்த்தைகளும் கடிதப் பரிமாறலும் திகைக்க வைக்க, அதனை சாவதானமாக படித்து நிமிர்ந்தான்.

ஆபிஸ் விட எல்லோரும் உலக அவசரம். வித்யாவும் வாசனும் பஸ் ஸ்ட்டான்ட் அருகில் தலை குனிந்து மௌனம் நீண்ட நேரம். வாசனின் உதடுகள் தான் ஆமை வேகத்தில் வி....ரி...ந்..த...ன. "ஐ ஆம் சாரி வித்யா." தலை நிமிராமலேயே வார்த்தைகளை உச்சரித்தான்.

"வாட்?"

அவள் எதிர்பாராத முற்றிலும் மாறுபட்ட பதில்.

"ஆமா வித்யா, காதல் கல்யாணம் இதுக்கெல்லாம் கூடுதலான தடையா பெண்களுக்கு சீதனப் பிரச்சினை. அது போல என்னைய மாதிரி ஏழ குடும்பத்தில பொறந்த ஆண்களுக்கும் அதவிட பெரிய பெரிய பிரச்சனைகள்.." விரக்தியாய் புன்னகைத்தான்.

"என்ன சொல்றீங்க வாசன்..?"

"யெஸ். நான் எங்க குடும்பத்துல மூத்தவன். எனக்குக் கீழே கனவுகளைச் சுமந்த மூணு கன்னிகள். பச்சிளம் மாறாத பாலர்கள் ரெண்டு. அத்தோட களைச்சிப் போன அப்பா, உடம்பு இளைச்சி படுத்த படுக்கையாயிருக்கும் நோயாளி அம்மா. இவங்கள்ளாம் காப்பாத்தி கரை சேக்குற பொறுப்பு எனக்கிருக்கு. நான் உழைச்சித்தான் எண்ட தங்கச்சிகள திருமணம் முடிச்சிக் கொடுக்கணும். தம்பிமார படிக்க வைக்கணும். தாய் தந்தைய கவனிக்கணும். மொத்தத்தில எனக்கு பாரிய பொறுப்பு. அதுக்கு இடையிலே நானும் காதலிச்சு கல்யாணம் முடிச்சா அவங்க கதி...?

"நோ...அத நான் விரும்பல. இப்ப என் வாழ்க்கையைப்பத்தி நான் சிந்திக்கக் கூடாது. எல்லோரையும் கரையேத்திட்டப் புறமா நான் ஒரு முடிவுக்கு வருவேன். அதற்கிடையில நீங்க என்னைய விரும்பினாலும் எனக்காக காத்திருக்க போறதில்ல. அதனால் சொல்றன் ப்ளீஸ் என் நினைவுகள மறந்திடுங்க." வேதனையாய் காயப்பட்ட வாக்கியங்கள் வெளிவந்தன.

வித்தியாவுக்குப் புரிந்தது. இங்கே பெண்களுக்கு மட்டும் துயரங்கள் வாழ்க்கையின் தடைகளல்ல. அது அவனைப்போன்ற ஏழைக் குடும்பத்துல பிறந்த எத்தனையோ இளைஞர்களுக்கும் உண்டு. ஓ...சுமைகள் இங்கு பொதுவானதோ... வித்யா அவனுக்காக ஊமைக் கண்ணீர் வடித்தாள்.

# மன மாற்றம்

-மருதமுனை முகர்றப்-

நன்றாக தொந்தி விழுந்து வளர்ந்து போன உடலமைப்பு, தொட்டம் தொட்டமாக நரை ஓடியிருந்த தலை மயிர்கள், நீளமாக வளர்ந்து தொங்கும் வெள்ளைநிறத் தாடிகள், இது ஐம்பது வயது மதிக்கத்தக்க பசீர் ஹாஜியாருக்கு உரித்தான தோற்றங்கள்.

அவ் ஊரிலே குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு ஒரு பெரும் புள்ளி அவர். பல நூறு ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரர். காணியை குத்தகைக்கு விட்டு அதில் கிடைக்கும் வருவாயில் சுக வாழ்வு வாழ்ந்து வருபவர்.

ஊரில் ஏற்படும் பிணக்குகள் எல்லாம் பொலிஸ் நிலையம் போவதற்கு முன்னர் சமாதானத்திற்காக இவரிடம் வந்தே போகும்.

அனேகமான வேளைகளில் பசீர் ஹாஜியாரின் தீர்ப்புக்கள் ஏற்கப்பட்டு பிரச்சினைகள் ஊரிலேயே சங்கமமாகியும் விடும்.

பரம்பரையாக வந்த பணக்காரர் அவர் என்பதால் ஏழைகளைக் கண்ணில்கூடக் காட்டமுடியாது அவருக்கு, உண்ணும் உணவுக்கே கஷ்ரப்படும் ஏழைகளால் நமக்கு என்ன ஆவது என்று அவர்களைத் தூரத் தள்ளியே வைப்பார். கூட்டங்களில் இனவாதங்களைக் கக்குவதால் 'பீரங்கிப் பேச்சாளர்' என்றும் அவருக்குப் பெயர்.

பசீர் ஹாஜியாரின் பெண் பிள்ளைகள் இருவரும் கொழும்பில் உயர்தர கல்லூரி ஒன்றிலே கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். மாணவர் விடுதியிலே தங்கி கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அவர்களை விடுமுறை காலங்களில் வீட்டுக்கு அழைத்து வருவார் அவர். அவருடைய பொல்லாத குணத்துக்காகவோ என்னவோ அவருக்கு ஒரு ஆண் பிள்ளையையும் கொடுக்கவில்லை இறைவன்.

பிள்ளைகளின் ஒகஸ்ட் மாத விடுமுறை தொடங்கிவிடவே பிள்ளைகளை அழைத்து வருவதற்காக தனது கப்பல் போன்ற காரில் கொழும்பு பறந்தார் பசீர் ஹாஜியார்.

பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு கொழும்பிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டவருக்கு இடை வழியில் வைத்து கார் நின்றுவிட்டது. எவ்வளவு முயற்சி செய்தும் எஞ்சினில் ஏற்பட்ட அந்தப் பிழையை அவரால் சரிப்படுத்த முடியாமல் போய்விட்டது.

ஆசைக்கு பார்ப்பதற்குக்கூட ஒரு வீடும்



காணப்படாத ஒருகாட்டுப் பிரதேசம் அது. நேரமும் மாலை ஐந்து மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. பயத்தால் கலங்கிப்போன பிள்ளைகளின் முகங்களைப் பார்க்க அவருக்கு மிகக் கவலையாக இருந்தது.

உதவிகள் கேட்பதற்குக்கூட இருட்டிவிட்ட நேரத்தில் எவ் வாகனங்களின் நடமாட்டத்தையும் காண முடியவில்லை. பயத்தால் நடுங்கும் கரங்களை சிரமத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டவருக்கு கண்கள் பனித்துப் போய்விட்டன.

எவ் வழிகளும் இன்றி வீதியில் அனாதை போன்று நின்று கொண்டிருந்தவரின் விழிகளுக்கு தூரத்திலே இருவர் நடந்துவந்து கொண்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. அவர்களைக் கண்ட பின்பே நிம்மதிப் பெருமூச்சொன்று விட்டார் அவர்.

முப்பது வயது மதிக்கத்தக்க ஒரு ஆணும் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணும் அவர்களை நெருங்கி வந்துக்கொண்டிருந்தனர். பார்த்தவுடனேயே இவர்களின் பரிதாப நிலமையினை அவர்கள் புரிந்துகொண்டார்கள் போலும்.

"என்ன ஐயா, வாகனம் பழுதாயிடுச்சா, எங்க தங்கலாம் எண்டு யோசிக்கிறீங்களா? எதுக்கும் பயப்படாதையுங்க ஐயா, பக்கத்தில தான் எண்ட வீடு இருக்கி. இங்க தங்கி காலையில புறப்பட்டுப் போகலாம்." தொடராகக் கூறிக்கொண்டிருந்தான் அவன்.

பசீர் ஹாஜியாருக்கு தங்க இடம் கிடைத்ததைவிட தமிழ் பேசத் தெரிந்த ஒருவனைக் கண்டுவிட்ட சந்தோசம் அதிகமாக இருந்தது.

கடந்த மாதம் திருமணமான புதுத் தம்பதிகள், சோளன் பயிர் செய்வதற்காக இங்கு வந்து தங்கியிருக்கின்றோம் என்பதையும் அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்கள் முன்னால் நடக்க அவர்களைத் தொடர்ந்து நடந்து சென்றுகொண்டிருந்தார் அவர்.

வீடு வந்து சேர இரவு எட்டு மணிக்கும் மேலாகிவிட்டது. ஏழைகளின் சகவாசமே அறிந்திராத பசீர்-ஹாஜியாருக்கு அவர்களைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. நிலமையையும் விதியையும் நொந்தவாறே அவர்கள் பரிமாறிய உணவினை முகச் சுழிப்புடன் உண்டு முடித்தார்.

"யானைகளின் நடமாட்டம் இப்ப அதிகமா இருக்கு. நீங்க வெளியில படுத்தா பயந்து போயிடுவீங்க, நீங்க மூணு பேரும் உள்ளே படுத்துக்குங்க. நானும் மனைவியும் வெளியால படுத்துக்குவம், யானை எல்லாம் எங்களுக்குப் பழகிப் போச்சு. அது வந்தா பந்தத்தக் கொழுத்திக் காட்டி நாங்க விரட்டிப்போடுவம்."

சிரித்தவாறே கூறி முடித்தான் வீட்டுக்கார தர்மன்.

எவ்வளவு மன்றாடியும், பசீர் ஹாஜியாரால் அந்த முடிவை மாற்ற முடியாமல் போய்விட்டது. இறுதியில் தர்மனின் முடிவே ஜெயித்துவிட கதவை உள்ளால் தாளிட்டுக் கொண்டு பிரயாணக் களைப்பில் உறங்கிப் போகின்றார் பசீர் ஹாஜியார்.

ஏதோ சத்தம் கேட்க விழித்துப் பார்த்த பசீர் ஹாஜியார் திகைத்துப் போனார்.

யானைகளின் பிளிறல் சத்தங்கள் வெளியே உரக்கக் கேட்டுக்கொண்டிருந்தன. பயத்தினால் அழுது கொண்டிருந்த பிள்ளைகள் இருவரையும் இறுக அணைத்துக் கொண்டு இறைவனை பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரங்களின் பின்னர் யானைகளின் பிளிறல் ஓசைகள் ஓய்ந்துவிடவே சாவித் துவாரத்தினால் வெளியே ஒன்றும் இல்லாததை உறுதிப்படுத்திக்கொண்டு கதவைத் திறந்தவர் அதிர்ந்துபோய்விட்டார்.

அவருக்கு உணவூட்டி தங்குமிடம் கொடுத்த அந்த புதுத் தம்பதிகள் இருவரும் யானைகளால் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். பார்க்கவே பரிதாபமாக இருந்தது பசீர் ஹாஜியாருக்கு.

ஏழைகளினால் நமக்கு என்ன ஆவது என்று நினைத்து அவர்களைப் புறக்கணித்து இதுவரை பணத்திமிரில் வாழ்ந்த அவருக்கு அவர்களைப் பார்க்கவே வெட்கமாக இருந்தது. தங்களின் உயிர்களைக் கொடுத்து அவர்கள் உயிர்களைக் காப்பாற்றிவிட்ட அந்த புதுத் தம்பதிகளைக் கட்டிப்பிடித்து அழுது தீர்த்தார் அவர்.

அவர்களின் ஆவியுடன் சேர்ந்து பசீர் ஹாஜியாரது பணத்திமிரும் சங்கமமாகிக் கொண்டிருந்தது.

# தண்டவாளங்கள்

நர்மி—மட்டுநகர்

அடுப்படியில் இருந்து வியர்வை வழிய வழிய இடியப்பம் சுட்டுக்கொண்டிருந்த அம்மாவைப் பார்க்கப் பாவமாகவிருந்தது 10 வயது ரகுவிற்கு. தான் படித்து நல்ல வேலைக்குப் போனால் அம்மா இப்படிக் கஷ்டப்படத் தேவையில்லை என்று அந்த பிஞ்சு உள்ளம் எண்ணியது.

அம்மாவிடம் சொல்ல வந்த விடயம் ஞாபகம் வரவே ஓடி வந்து தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டான் ரகு.

"அம்மா நான் வேலை செய்யும் ஹோட்டலுக்கு முன்னால் ஒரு அலுவலகம் இருக்கிறதே உனக்குத் தெரியுமா? என்று கேட்ட ரகுவிடம்,

"ஓம் தெரியும். இப்ப அதற்கென்னடா?" என்று கேட்டவாறே தன் வேலையில் கவனம் செலுத்தினாள் பார்வதி.

"அங்க வேலை செய்கிறவங்க எங்கட கடைக்கு அடிக்கடி வருவாங்க. அதில அஜித் ஐயா என்றொருத்தர் என்னைத் தன்னோடு வரும்படி கூப்பிடுகிறாரம்மா, எனக்கு அப்பா இல்லை என்றும், படிக்க கஷ்டத்திலதான் கடையில் நிற்கிறான் என்றும் யாரோ அவருக்குச் சொன்னவையாம். அதால என்னைத் தன்னோடு வரும்படியும், தான் என்னைப் படிப்பிக்கிறன் என்றும் சொன்னவர். அஜித் ஐயா ரொம்ப நல்லவரம்மா. ஏனம்மா நான் அவரோடு போகட்டுமா? நான் போய் படித்து பெரிய வேலை எடுத்தால் நீ கஷ்டப்படத் தேவையில்லை. நானும், நீயும், தங்கச்சியும் சந்தோசமாகவிருக்கலாம். விரும்பினதெல்லாம் வாங்கலாம்..."

தொடர்ந்த மகனைக் கலவரமாக ஏறிட்டாள் பார்வதி.

"ஏனடா நீ அவருடன் வாறன் என்று சொல்லிவிட்டாயா?"

"இல்லை அம்மா, உன்னிட்ட கேட்டுச் சொல்கிறன் என்று சொன்னனான்."

"இங்க பாரு ரகு. நம்மட கஷ்டம் நம்மோட. நீ இங்க என்னைவிட்டுப் போட்டு ஒருத்தரோடையும் போக வேணாம். என்ன பெயர் சொன்னநீ..ஆ அஜித் அவங்களோட உனக்கு அநாவசிய கதை தேவையில்லை தெரிந்ததா?"

படபடப்பாக பேசிய தாயை பரிதாபமாக ஏறிட்டான் ரகு.

"அம்மா உன்னைவிட்டுப் போக எனக்கும்



விருப்பம் இல்லையம்மா. ஆனால் அஜித் ஐயாவுடன் போனால் நானும் ஸ்கூலுக்குப் போகலாம் படிக்கலாம். ஏனம்மா நான் படிப்பது உனக்கு விருப்பம் இல்லையா?

ரகுவின் பேச்சை தாயின் அழுகை தடுத்து நிறுத்தியது. படிப்பு, பாடசாலை எல்லாம் மறந்துபோக,

"அம்மா ஏனம்மா அழுகிறாய்? என்று வினவினான் மகன்.

"ரகு நீ பிறந்ததும் தன்னைப் போலல்லாமல் உன்னைப் படிப்பிக்க வேண்டுமென்று உன் அப்பா எவ்வளவு கனவு கண்டவர் தெரியுமா? உங்களுக்காவே இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்தாரடா. ஆனால் அவரின் கனவுகள், என் சந்தோஷம் எல்லாம் ஒரே இரவில் தொலைந்து போச்சேடா. நீ இப்போ சொல்றியே அஜித் அவங்கட ஆட்கள்தான் வேலைக்குப்போன உங்கட அப்பாவை வெட்டிக்கொலை செய்து... அவரிட உடம்பைக்கூட பார்க்க எனக்கு கொடுத்து வைக்கவில்லை. அஜித்துக்குப் பதில் நம்மட பக்கத்து ஆட்கள் உன்னைக் கொண்டுபோய் படிப்பிக்கிறன் என்று சொல்லியிருந்தால் நீ எங்க இருந்தாலும் நல்லா இருக்கட்டுமென்று நினைத்து உன்னை அனுப்பியிருப்பேனடா."

பார்வதியின் அழுகை ஒப்பாரியாக மாறிவிட்டது.

"அப்போ உன் அப்பாவை என்கிட்டயிருந்து பிரிச்சாங்கள். இப்போ உன்னைப் பிரிக்கப் பார்க்கிறாங்கள். டேய் அவங்க பேச்சை நம்பி நீ என்னை விட்டுப் போட்டு போயிடாதேடா. மீண்டும் ஒரு பிரச்சனை வந்தால் உன்னையும் வெட்டிப் போடுவாங்கள். என்னை விட்டுப் போயிட மாட்டியே ரகு?"

என்று கேட்ட தாயிற்கு,

"இல்லை அம்மா உங்களை விட்டு நான் போகல்ல. நீங்க அழாதீங்க, என்றவாறே எழுந்து பின்பக்கம் சென்றான் ரகு.

பின் கொல்லையில் நின்ற பலாவின் அடியில் போய் உட்கார்ந்துகொண்டான்.

அம்மாவின் பேச்சும், அஜித் ஐயாவின் முகமும் மாறிமாறி நினைவில் சுற்றி வந்தது.

அஜித் ஐயாகூட வேலை செய்யும் சுமதிபால அண்ணனின் முகம் ஞாபகம் வந்தது. ஒரு சிறு வேலை செய்தாலும் நிறைய டிப்ஸ் தருவார். அதே இடத்தில் வேலை செய்யும் நில்மினி அக்கா தன்னை அன்புடன் கூப்பிடும் 'பற்றியோ' ஞாபகம் வந்தது.

அம்மா சொல்வதுபோல் இவர்களா என் அப்பாவைக் கொன்றார்கள் என்ற கேள்வி எழும்பியது. சீ, இவர்களாவது கொலை செய்வதாவது. இவர்கள் எவ்வளவு அன்பானவர்கள். இந்த அம்மாவிற்குஇது ஏன் விளங்குதில்லை. அப்பாவைக் கொன்றது வேறு யாரோ. அம்மாவிற்கு யாரோ பிழையாகச் சொல்லிப்போட்டார்கள்."

யோசிக்க யோசிக்க குழப்பமாகவிருந்தது ரகுவிற்கு. எது உண்மை என்று அந்த பிஞ்சு உள்ளத்திற்கு விளங்கவில்லை. யுத்தங்கள், யுத்தத்தால் தொடரும் வன்மங்கள் என்பவற்றைப் புரிந்து கொள்ளும் வயது அவனுக்கு இன்னமும் வரவில்லை.

அஜித் ஐயா, நில்மினி அக்கா, சுமதிபால அண்ணன் இவர்களைப்பற்றி, இவர்களது அன்பைப்பற்றி அம்மாவிடம்கூற வேண்டும். மீண்டும் அம்மாவிடம் இவர்களைப்பற்றிக் கூறும்போது இவர்கள் நம் அப்பாவைக் கொன்றிருக்க முடியாது என்று சொல்ல வேண்டும்.

தான் சொல்வதை அம்மா ஏற்றுக் கொள்வாளா? என்ற சந்தேகம் வந்தது. இருந்தாலும் அம்மாவிடம் கதைக்க வேண்டும் என்கிற ஒரு உறுதியான முடிவோடு வீட்டை நோக்கி ஒரு புது நம்பிக்கையோடு நடந்தான் ரகு.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை



# கருவழிதல்....

**அக்குறணை- ஹரீரா அனஸ்**

**“அழுவதும், ஆர்ப்பரிப்பதும், பின்னர் தேறுவதும், சோகம் கொள்வதுமாய் நாட்கள் நகர்ந்து சென்றன”**

**ஷி**ம்னி;

அவளுக்கென்ன அப்படி ஒரு ஆசை? முப்பத்தொன்பது அரை வயதில் கலியாணம் செய்துகொள்ள வேண்டிய அவசியம்...? எல்லாம் கிழடுபட்டுப்போய் சுருங்கி... எதைத்தான் அனுபவிக்கப் போகிறாள் அவள்? ஆனாலும் அவளுக்கு எல்லோரையும் போல கலியாணம் கட்டவேண்டும்; பிள்ளைகளைப் பெறவேண்டும் என்று ஆசை. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று சொல்வார்களே அதுபோல. இது ஒரு இருபது வருஷத்திற்கு முதல் வந்திருந்தால் பறவாயில்லை. அப்பொழு தெல்லாம் இல்லாத விருப்பம் அவளுக்கு. அந்தக் காலத்தில் இவளின் அழகை அள்ளி அள்ளிப்பருக, உண்ண, குடிக்க ஆசைப்பட்ட வர்களெல்லாம் இன்று குடும்பமும் குடித்தன முமாய் மனைவி மாரோடு அவளின் வீட்டுக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் போகும் போது அவளின் மனதில் ஓங்கி ஓங்கி குத்துவது போலிருக்கும். ஆண்களையே வெறுத்து ஆண்களின் சுகமே வேண்டா மென்று ஒதுங்கி... இருந்தவளுக்கு திடீரென அப்படி என்ன ஞானோதயம்? கலியாண ஆசை ஏன் வந்தது? எதற்காக வந்தது? யார் இவளைத் தூண்டிவிட்டது? அந்தச் சபதம் நினைவுக்கு வர அவள் மனது ஒருகணம் ஈடாடிவிட்டது.

□□□

**ஜெ**ல்ஸியின் வீடு அவளின் வீட்டி லிருந்து மூன்றாவது. காலை எழுந்தவுடன் தரிசனத்திற்காய் அவள் கட்டாயம் முற்றத்துப் பந்தலுக்கு வருவாள்.கையில் பிறஷும் முகத்தில் ஏக்கமுமாய் அந்த மல்லிகைப் பந்தலுக்குப் பக்கத்தில் இருந்த கொய்யா மரம்தான் மறைவும், தெரிவும் எல்லாம். ஜெல்ஸியும் அவனின் முற்றத்தில் அவளுக்காய் தரிசனம் தருவான். தினமும் வாடிக்கையாய் இருந்தது. இது அவர்களின் பூம்பந்தலில் தினமும் வாசனைதான்.

ஜெல்ஸி பணக்காரன். ஷிம்னி ஏழை. என்ன செய்வது? அவனின் பணத்திற்குமுன் ஏழை ஷிம்னியால் ஈடுகொடுக்க முடிய வில்லை. ஷிம்னியின் பெற்றோர் உடுப்புத் தைக்கும் தொழில் செய்பவர்கள். அந்தச் சிறிய தொழிலும் ஜெல்ஸியின் பெற்றோரின் பென்னம் பெரிய ஆலைத் தொழில்களும் இரண்டு புறத்தின் திருமணத் தொடர்புக்கு ஒத்துவராது என்று தெரிந்தும் ஜெல்ஸி-ஷிம்னியின் அன்புத் தொடர்பு மாத்திரம் வேரூன்றி ஆலமரமாய் வியாபித்திருந்தது.

இந்தக் காதல் யாருக்குமே தெரியாது. ஜெல்ஸியின் ஓரிரு நண்பர்களுக்கும், ஷிம்னியின் ஓரிரு தோழிகளுக்கும்தவிர. அவர்கள் சந்திப்பதும் பேசுவதும் அரிது. பார்வைகளும் இருந்தெப் போதாவது கடிதங்களும் ஜெல்ஸி தனது இரத்தத்தால் கீறிய மலர்களுமே ஷிம்னிக்கு ஆறுதல்.

□□□

**ஜெ**ல்ஸி ஏனப்படிச் செய்தான்? இவ்வளவுதூரம் போகவேண்டும்? ஷிம்னியை விட்டுக் கண் காணாத தூரம் போகவேண்டும்? ஜெல்ஸி கோழையா? அல்லது பெற்றோர் தாசனா? அல்லது வெறும் பயந்தாங் கொள்ளியா? ஷிம்னி ஜெல்ஸியைப் பற்றி என்ன தெரிந்து வைத்திருந்தாள்? அவன் என் காதலன் என்பது மட்டும்தான்.

ஆனால் ஜெல்ஸி...?

அன்று ஜெல்ஸியின் வீட்டில்.....

தனது நண்பர்களுடன் ஒரு பேர்த்டே பாட்டிக்கு போய்விட்டு வந்தான் ஜெல்ஸி......

“ஜெல்ஸி....” தந்தையின் குரல் தடுத்தது.

“என்ன டடி”

“ஜெல்ஸி...உன்னை நாளைக்கு மாப்பிள்ளை பார்க்க வாறாங்க....”

“டடி...”

“ஆமா.. ஏன்... அதுக்கு. இப்ப எப்பிடி.. நான்..” சொற்கள் முறிந்தன.

“நோ....நீ ஒண்ணும் சொல்லப் போறதுமில்லை. சொல்றதுகளை நான் கேக்கப் போறதுமில்லை..பட்...ஒண்டுமட்டும் உண்மை. நாளைக்கு உன்னைப்பார்க்க ஜேம்ஸ் இன்டஸ்ரீஸ் பொஸ்ஸும் அவங்கட ஆக்களும் வாறாங்கடா...”

“டடி..... கொஞ்சமிருங்க..... உங்களோடை......”

“என்ன ஜெல்ஸி என்ன.... என்னோடை பேசப்போறதெண்டு... தானே சொல்லப் போறாய்...? தாராளமா... பேசு..”

“டடி... நா...ன்... வந்து...”

“என்ன ஜெல்ஸி நீ சொல்லப் போறாய்....?

“டடி...டடி நான் ஒரு பெண்ணை விரும்புறன். அவ நல்ல பொண்ணு. அவபேரு வந்து.... ஆ.... ஷிம்னி...... அவங்கடை குடும்பம் ரொம்ப நல்லவங்க.... அவடை மம்மி ஒரு ரிட்டையட் ரீச்சர்..... அவடை டடி வந்து.... அவரும் ஒரு ரீச்சர்....

“அவ்வளவுதானே ஜெல்ஸி?”

‘டடி.......!’

“ஆச்சரியப்படாதை ஜெல்ஸி- கடலிலை தூண்டிலை விட்டுட்டு தூண்டில்காரன் மிதப்புக்கட்டையையே பார்த்துக்கிட் டிருப்பான்.

“அதிலை ஒரு சின்ன அசைவு தெரிஞ்சாலும் அது அவனுக்கு துல்லியமா விளங்கிடும். ஓ. ஜெல்ஸி... ஒவ்வொரு பெற்றாருக்கும் ஒவ்வொரு பிள்ளைகளும் தூண்டில் மாதிரிப்பா. பெத்தவங்க வந்து.... தூண்டில்காரன் மாதிரி.”

“டடி எனக்கு ஷிம்னி இல்லாமை ஒரு வாழ்க்கை வேண்டாமப்பா.”

“றைட் எனக்கும் விருப்பம்தான். ஆனா.... ஒரு எயிட்ஸ் நோயாளியை என் மருமகளா?.. எப்படி ஜெல்ஸி?”

“வட் நான்ஸன்ஸ்! யார் சொன்னது அப்பிடி? என் ஷிம்னிக்கா?”

“ஆமா ஒன் ஷிம்னிக்குத்தான். யாரு மில்லை அவங்கடை குடும்ப வைத்தியர் தாம்பா. ஆனா எயிட்ஸ் வாறதுக்கு விபச்சாரம் மட்டும் தான் காரணமில்லேப்பா- இன்னும் எத்தினையோ காரணங்களிருக்கு.”

ஜெல்ஸி அழுதான்- ஜெல்ஸி துடித்தான். ஜெல்ஸி துவண்டான்.

ஆனால் ஷிம்னியைக் காணும் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை.

ஜெல்ஸிக்கு கொழுத்த பணக்கார இடம்கிடைத்தது. அவனின் தந்தை மனமகிழ்ந்தார்..

ஜெல்ஸி மூளைச் சலவை செய்யப் பட்டான்.

வேறொரு நாட்டில் குடியும் குடித் தனமுமாக்கப்பட்டான். அவன் எண்ணிக் கொண்டிருக்கிறான்,

‘இவ்வளவு நாளில் என் ஷிம்னி இறந்துவிட்டிருப்பாள்.

ஷிம்னியை எயிட்ஸ் கொன்றிருக்கும்.’

□□□

**பொ**ய்! ஷிம்னிக்கு எயிட்ஸ் இல்லை.

ஜெல்ஸியின் தந்தையால் சோடிக்கப் பட்ட வார்த்தைக் கலவையை மென்று விழுங்கிய ஜெல்ஸி ஷிம்னியை அதற்குப் பிறகு காணவேயில்லை. பணம் பலதையும் செய்யும்.

ஷிம்னி ஆத்திரப்பட்டாள். சபத மெடுத்தாள். ஆண்களே வேண்டாம். பின்ன ரொருநாளில் ஷிம்னிக்கு இதுவெல்லாம் கேள்விப்பட்டது. அழுவதும் ஆர்ப்பரிப்பதும் பின்னர் தேறுவதும் பின்னர் சோகம் கொள்வதுமாய் நாட்கள் அவளைவிட்டு நகர்ந்து சென்றன. வைராக்கியம் மட்டும் அவளை வாழவைத்தது. பெற்றாரை மறந்தாள். தன் வாழ்வை மறந்தாள். தன் உணர்வுகளை மறந்தாள்.

இதுதான் கடந்தகாலம். ஷிம்னி சபதத்தில் உறுதியாகத்தான் இருந்தாள். ஆனால் இப்போது கொஞ்சக் காலமாய் ஷிம்னி மாறுகிறாள். அவளின் சிந்தனையில் மாற்றம்.

யார் இந்தச் சிந்தனையைத் தோற்று வித்தது.

சமுதாயம்!

ஷிம்னி கன்னி கழிக்கப்படாதவள்.

ஷிம்னி குழந்தை குட்டி இல்லாதவள்.

ஷிம்னி ஒரு தீண்டத்தகாதவள்.

எல்லோரும் இப்படித்தான் ஷிம்னியைப் பார்த்தார்கள். மங்கலமான எதற்காவது ஷிம்னி போனால் அது அமங்கலமானதாக மாறிவிடுமோ என்று பயந்தார்கள்.

இவை எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு காரணம் திருமணம், பிள்ளை, குட்டி மட்டும்தானா?

நாற்பது வயதில் ஒருத்தி கன்னி கழிக்கப்படாமலே இருப்பதென்றால் சமுதாயத்தில் அதென்ன அபசகுனமா? அவளை வெறுப்பாய்த் தானே பார்க்கிறார்கள்.

சமுதாயம் அப்படித்தான் நினைக்கிறது.

ஒன்றுமில்லை. ஜெல்ஸியின் தாக்கம் தான் அவளை இந்தளவிற்கு ஆக்கியது. அவனும் ஒரு ஆண்தான்! அவளின் தந்தையும் ஒரு ஆண்தான்!

இன்று பட்ட மரத்தில் துளிரை சமுதாயம் எதிர்பார்க்கிறதா? அதற்காக அவள் குடியும் குடித்தனமுமாய் ஆக வேண்டுமா?

ஆம் அப்படித்தான்.

நெருப்பின் மேல் நடப்பது போலான வாழ்க்கையில் இருந்து விடுபட அவள் எண்ணினாள். திருமணம் செய்து கொள்வது. எனத் தீர்மானித்தாள்.

மனம் அந்தரப்பட்டது. கற்பனைகளை அவள் வெறுத்தாள். கற்பனைகள் தானாக வந்து குடியேறின. அன்பான கணவன்- அழகான குழந்தைகள். ஆனந்த அருவி... தென்றல் தழுவும் இறகின் சுகம்-நந்தவன ஓடைகள்... மீண்டும் கண் கலங்கினாள் ஷிம்னி.

சமுதாயமே உனக்காக ஒரு கன்னி நாற்பது வயதினில் தவமிருக்கிறாள். பின்னர் தவம் கலைக்கிறாள்.

திருமணத் தவம்!

யாராவது நாற்பத்தைந்து வயது குமரர்கள் இல்லையா?

அவளின் தவம் குலைபடட்டும்!

அவன் மணந்து கொள்ளட்டும்!

அல்லது அவள் இன்னும் இன்னும் சமுதாய மேடையில் அலட்சியமாக்கப் படுவாள்.

குழந்தை குட்டிகளுக்கப்பால், அவளது எண்ணக் கருக்கள் சுமங்கலியாகவாவது வாழட்டும்.

வாழ்த்துங்கள் அன்பர்களே வாழ்த்துங்கள்.

இன்னுமொன்று செய்யுங்கள்.

சமுதாயத்திற்குள் ஊடுருவிச் சென்று பாருங்கள் இன்னும் எத்தனை சாக்கடைகள் கொழுவிருக்கின்றன.

---

# மழையும் வெய்யிலும்

**ஷர்மிளா இஸ்மாயில்**

**ஆ**காயம் தீவிரமாய் அழுது கொண்டிருந்தது. அழாமல் உட்கார்ந் திருந்தாள் சஹானா. “எல்லாம் விதிப்படி. ஆண்டவன் எழுதி வெச்சபடி தானே நடக்கும். கவலை படுறதிலேயோ கண்ணீர் விடுறதிலேயோ அர்த்தமில்ல.” ஆறுதலாய் அவள் கரங்களைக் கட்டிப்பிடித்தவாறு தேறுதல் கூறிக்கொண்டிருந்தாள் சாதனா.

சஹானாவின் தெளிவான விழிகள். நிமிஷக்கணக்காய் வெளியே விழும் மழையை வெறித்துப் பார்த்தன. நெஞ்சக் கூட்டினி லிருந்து பெருமூச்சு விடுதலையானது.வாய் திறந்தாள் அவள். “கவலையா? நானா? அதெல்லாம் இல்லையடி. ஆனா, அம்மாவப் பார்க்கத்தான் ரொம்ப பாவமா இருக்கு. வாடிப் போயிட்டாங்க. ஆடிப் போயிட்டாங்கன்னு சொல்றது தான் கூடவும் பொருந்தும். அவங்கள ஆறுதல் படுத்துறது தான் பெரும்பாடா இருக்கு.” மெதுவான குரலில் பிசிறில்லாமல் சொல்லி முடித்தாள்.

சாதனாவுக்கு என்ன வார்த்தைகளை வெளிப்படுத்துவதென புரியவில்லை. மெளனமாய் சிந்தனை ரேகையை ஓடவிட்டாள்.

சஹானா...அழகானவள்; அன்பான வள். அவளோடு ஒன்றாய் படித்தவள்; அவள் குடும்பத்து பொருளாதாரத் தூண்களில் ஒன்றாயிருந்து உழைப்பவள். அவளது அமர்க்களமில்லாமல் போயிருந்த வாழ்க்கையை ஆரவாரமாக்கிவிட வந்தது ஒரு திருமண சம்பந்தம். பெரிய இடத்து மாப்பிள்ளை. அவர்களாகவே தேடி வந்தார்கள். சம்பந்தம் வைக்க ஆசை என்றார்கள். இவள் விரும்பவில்லை. காலம் போகட்டும் என்றாள். யாரும் அதை இலட்சியப்படுத்தியதாகத் தோன்றவில்லை. காரியங்கள் தானே நடைபெற கல்யாண நாளும் குறிப்பிட்டாயிற்று. தமிழ் சினிமா கிளைமாக்ஸ் காட்சி போல இடையில் ஓர் அதிர்ச்சியாய் மாப்பிள்ளை வீட்டாரின் மனமாற்றம்! “சீதனமே வேண்டாம். பெண்ணை மட்டும் தாருங்கள்” என்று புதுமை பேசியவர்கள் வேறெங்கேயோ மூன்று லகரம் மற்றும் வீடு, கார் என பணமாகவும் பொருளாகவும் பேசி முடித்துவிட கல்யாணக் காற்று திசை மாறி அடித்துவிட்டது.

சஹானா அழவில்லை. முகவாயில் கையைத் தாங்கி வைத்து முகட்டை வெறித்துப் பார்த்து உட்காரவில்லை. அவள் அவளாக இருந்தாள். ஆனால், அவள் வீட்டு பெரியவர்கள்தான் குழந்தைகளைப் போல் அதிர்ந்து அழுதார்கள். ஆத்திரப் பட்டார்கள்.

நண்பியின் சோகத்தினைப் பங்குபோடச் சென்ற சாதனாவிற்கு அவளின் மன உறுதி ஆச்சரியத்தைத் தந்தது. பாடசாலை நாட்களில் டீச்சர் கொஞ்சம் கண்டித்து விட்டாலும் கண்ணீர்விட்டு விடுபவள். ஆச்சரியத்தை அப்படியே மனதினுள்ளேயே அடக்கி வைத்தவளுக்கு உலகத்தினதும் மனிதர்களினதும் போக்கினை நினைக்கவே வெறுப்பாகவும் கோபமாகவும் இருந்தது. பணத்தினால் விலைக்கு விற்கப் படுபவர்களை நினைக்கவே கேவலமாக இருந்தது. “இப்படியும் மனிதர்கள் சீ!”



அவளையறியாமலே புலம்பலாய் கோபம் வெளிப்பட்டது.

வீட்டிற்கு வந்த பின்னும் சஹானாவின் சலனமற்ற விழிகள் தான் கண்ணுக்குள் தெரிந்தன. “பாவம்!” அவளை வரவேற்றுக் காத்திருந்தது ஒரு திருமண அழைப்பிதழும் அத்தோடு ஒரு கடிதமும். அவசரமாய்ப் பிரித்தாள். ஆனந்தம் பீறிட்டது.

“ஓ.....நிரோவுக்கு கல்யாணம்.” மனம் துள்ளியது. அது பளபளப்பான உயர்ரக அழைப்பிதழ். அழகாக இருந்தது. அப்பால் வைத்தவள், கடிதத்தில் கண்களை ஓட விட்டாள்.

நிரோஷாவை ஒரு கணம் நினைவி லிருத்திப் பார்த்தாள். அவளுக்கும் சஹானா வைப் போலவே கல்யாணமே சந்தோச சாபக்கேடாய் மாறிப்போயிருந்தது. நிரோஷா வின் கல்யாண அழைப்பிதழ் விநியோ கிக்கப்போன அவள் மாப்பிள்ளையின் தம்பி விபத்தில் அடிபட்டு செத்துப் போனான். மரணத்திற்கு கால நேரம் இல்லை. இப்போது வரக்கூடாது; இப்பத் தான் வரவேண்டும் என முகூர்த்தம் பார்ப்பதில்லை அது. என ஊருக்கும் உலகுக்கும் உங்களுக்கும் எனக்கும் உற்றாருக்கும் உறவினர்க்கும் நன்கு தெரியும். தெரிந்தும் பயனென்ன?

தத்துவங்கள் உதட்டோடு மட்டுமென்பது போல் நிரோஷா விடயத்தில் இது சாபக்கேடாய்ப் போனது. “பெண் இராசி யில்லாதவள். அவளின் நேரம் சரியில்லை. அவள் வீட்டுக்கு வரமுன்னரே இப்படி அபசகுனம். பிறகு என்னென்ன கெட்டது வருதோ? வேண்டாம். வேண்டவே வேண்டாம்,” என காத தூரத்திற்கு ஓடிப் போனார்கள் மாப்பிள்ளை வீட்டார். கதை முடிந்து போனது. சுபமில்லை! நினைவை மீட்டுத்தானும் மீண்டவள், பழங்கதையை யோசிப்பதைவிடுத்து கடித வார்த்தை களைத் திரும்பவும் படித்தாள். லயித்தாள்.

“....... காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன். அவர் ரொம்ப நல்லவர். காலம் நேரம், சகுனம் பார்க்கும் பழங்கால கொள்கைகள் அவரிடமில்லை. ‘நான்தான் மாப்பிள்ளையின் தம்பியைக் கொன்றேன், என்பதுபோல் பேசிய பழங்கால சகுனப் பிசாசுகளுக்கு இது ஏமாற்றமாக இருக்கும். பகுத்தறிவும் வேண்டும், கடவுள் நம்பிக்கையும் வேண்டும். நேரம், காலம், ராசி பற்றி பேசுபவர்கள் வாயை அடைக்க காதல் கல்யாணம் தான் ஒரே வழி. முடிந்தால் நீயும் என் வழியைப் பின்பற்று....” சாதனாவுக்கு சிரிப்பு வந்தது.

நிரோஷாவை நினைத்த இதயத்தின் பக்கங்களில் சந்தோஷக் குமிழிகள் பொங்கிவர, சஹானாவை நினைத்த இதயத்தின் மறு பக்கங்களில் இனந்தெரியாத சோகம் படர ஒருவித சுகமான, சோகமான நிலையில் நின்றிருந்தாள் சாதனா. வெளியே மழை தூவானமாய்த் தூறிநிற்க ஊடே மஞ்சள் வெய்யிலின் கிரணங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. “மழையும் வெய்யிலும் சேர்ந்தடிக்குது...நண்டுக்கும் நரிக்கும் கல்யாணமாம்.....” வெளியே விளையாடிக் கொண்டிருந்த பிஞ்சுகள் கூட்டம் கோரசாய்ப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

---

**“வயதுதான் கொஞ்சம் கூட... மத்தும்படி எனக்கு பிடிச்சிருக்கு.”**

# தேர்வு



**-ரமேஷ் கண்ணன்-**

**“எ**ன்னம்மா... பாக்குறதுக்கு லெச்சணமா, நல்ல நடத்தையுள்ளவனா வேணுமென்ன. நானும் ஒன் இஷ்டப்படியே ரொம்ப கஷ்டப்பட்டு இவன தேடிப் பிடிச்சிருக்கன். இதற்குப் பிறகும் நீ மெளனமா இருக்கிறதுல அர்த்தமில்லம்மா...

“இந்தக் காலத்துல இப்படியான ஒருத்தன தேடிப்பிடிக்கிறதே ரொம்ப கஷ்டம். சரி அத விடு. இவன ஒனக்குப் பிடிச்சிருக்கா? இல்லையா?”

“அப்பா..எதுலையுமே அவசரப்படக் கூடாது என்று நீங்கதான் சொல்லுவீங்க. ஆனா இந்த விசயத்தில நீங்களே அவசரப் படுறீங்களே?”

“பின்ன என்னம்மா... எனக்கும் வயசாகுது. இண்ணைக்கோ நாளைக்கோ மண்டையப் போட்டுட்டன் என்னு வைச்சுக்கோ, அதுக்கப்புறம் ஒன்னோட வேலைகள கவனிக்க ஒருத்தன் வேணாமாம்மா...”

“அதோட என்னோட கம்பனி வேலைகள பாக்குறதுக்கே என்னோட நேரம் சரியாப் போயிடும். இவ்வளவுக்கும் மத்தியில ஒன்னோட நான் இருக்கிறது சாத்திய மில்லம்மா..”

“அப்பா...அப்பா... ஒங்களுக்கு எப்படிப் புரிய வைக்கிறதோ எனக்குத் தெரியல..

பாக்கிறதுக்கு லெச்சணம்தான். ஆனா எப்படிப்பட்ட ஆளென்னு தெரிஞ்சுக்க வேணாமா? அதனால முதல்ல நான் நேரடியா அந்தாளோட பேசணும். அதுக்கப் புறமா என்னோட முடிவ சொல்லுறன்..”

“இவ்வளவுதானா? நாளைக்கே அவன் இங்க வாறதுக்கு ஏற்பாடு செய்யுறன். போதுமா...?”

மகேஸ்வரன் கூறிவிட்டு ஆபிஸ் செல்ல தயாராகின்றார். மகேஸ்வரனின் ஒரே மகள்தான் சீதா. ஆகையால் அவளுக்கு செல்லமதிகம். எல்லாமே அவள் விருப்பம்தான். இந்த விடயம்கூட அவள் விருப்பம்தான்.

எத்தனைபேர்...ஒருவரைக்கூட சீதா விற்குப் பிடிக்கவில்லை. அவள் விருப் பத்திற்கு தெரிவு செய்து கொடுக்க வேண்டியது மகேஸ்வரனின் பொறுப்பு.

□□

**ம**றுநாள் மாலை,

“என்னம்மா...ஆள் எப்படி? ஒனக்குப் புடிச்சிருக்கா? இல்ல... வேற ஆளப் பாக்கட்டுமா..?”

அவள் முடிவு தெரியாமல், சந்தேகத் துடன் நோக்குகின்றார் மகேஸ்வரன்.

“நான் பேசிப்பார்த்த அளவுல எனக்கு நல்ல மனுசனா தோணுது... எதுக்கும் நீங்களும் ஒருக்கா கதைச்சுப்பாத்தா...”

“இதுல நான் என்ன பேசவேண்டி யிருக்கு. ஒனக்குப் பிடிச்சிருந்தா போதும், எனக்குச் சம்மதம்தான். என்ன சொல்லுற..?”

“வயசு கொஞ்சம்கூட; மத்தும்படி எல்லா விதத்திலும் எனக்குப் பிடிச்சிருக்கு. அதனால இண்ணைக்கே அந்தாள நம்ம றைவரா சேர்த்துக்கலாமெண்ணு நினைக்கிறன்...”

“நினைப்பென்ன வேண்டியிருக்கு? இன்னையில இருந்து அவன்தான் நம்ம றைவர் போதுமா...”

மகேஸ்வரனும் சீதாவும் வாய்விட்டுச் சிரிக்கின்றனர்...

முடிவைப் பார்த்து நீங்களும்தான் சிரிக்கின்றீர்கள்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# விழிக்கு இது வேண்டும்!





துயில் வந்து விழிகளை தழுவ மறுத்தது.

முன்பெல்லாம் இருள் வந்து விட்டால் துயில் வந்து 'பஞ்சணைக்கு போகலாம் வா பைங்கிளியே' என்று காதலன் போல துரத்தும்.

இப்போதோ அப்படியில்லை. எப்போதும் போல் இல்லாமல் துயிலோடு உடன்பட மறுக்கின்றன விழிகள்.

துகில் கலைந்து போனால் அது உடல் அழகைக் காட்டிக்கொடுத்து விடும்.

தினமும் துயில் கலைந்து போனால் விழிகள் சிவந்து வெளியே காட்டிக் கொடுத்துவிடும்.

"தூக்கம் இல்லைப்போல் இருக்கிறதே. உடல் நலம் இல்லையா?" என்று கருவில் சுமந்தவள் கவலைப்பட்டாள்.

"வைத்தியரை அழைத்துவரச் சொல்லட்டுமா?" என்று அவசரமும் பட்டுக் கொண்டாள்.

"ஒன்றுமில்லையம்மா எனக்கு" என்றாள்-மகள்! எந்த வைத்தியர் வந்தாலும் கண்டறியமுடியாத நோய் தனக்கு வந்தது என்று அம்மாவிடம் சொல்லவா முடியும்?

எவர் மருந்து தந்தாலும் குணமாகாது. அவர் ஒருவர் வந்து தரும்வரை என்று உதடுவரை வந்த வார்த்தையை உடனடியாய் தடைபோட்டு உள்ளே நிறுத்திக் கொண்டாள்.

துரும்பாய் இளைத்துப் போனவளை பெருமூச்சு விட்டபடி நோக்கிப் போனாள் அன்னை.

தாய் வெளியே போனவுடன் தங்க மகள் 'தன்னுள்ளே வங்கக்கடல் கொந்தளிப்பாய் எழுந்த உணர்ச்சிப் பெருக்குடனே போய் விழுந்தாள் பஞ்சணையில்.

□□

அவன் கூந்தல் காற்றில் அலை பாய்ந்தது.

கூந்தல் மீதிருந்த வாசனையோ அவன் நாசிக்குள் பாய்ந்தது.

இதமான வாசனை கிறக்கம் தரும். மித மிஞ்சிய வாசனை வெறுப்புத் தரும். அளவோடு இதமாக அவள் கூந்தல் வழிவந்த வாசனை அவனுக்கும் பிடித்திருந்தது.

முகம் நீட்டி முகர்ந்தான். மனமெங்கும் மகிழ்ந்தான்.

"அதே சந்தேகம் எனக்கும்."

என்றான் கூந்தல் ஆராய்ச்சியை முடித்துவிட்டு, பளிங்கு கன்ன பளபளப்பை உதடுகளால் ஈரப்படுத்திக் கொண்டு.

"ம்...போதும்....போதும்...சரி, என்ன சந்தேகம் உங்களுக்கு?"

என்றாள் அவன் மார்பில் கைவைத்து பின்னால் தள்ளியபடி.

மறைந்திருப்பதை அறியத்தான் ஆர்வம் வரும். மறுத்துக்கொள்ளும் போதுதான் ஆசை வரும்.

போராடிப் பெறுவதில் உள்ள சுகம் பொத்தென்று வந்துவிழுவதில் கிடைப்பதில்லை.

கைக்கெட்டிய கனியை பறித்து சுவைப்பதைவிட, உயரே இருக்கும் கனியை எட்டிப் பறித்து சுவைப்பதில் உள்ள சுவையே தனிதான்.

அப்படித்தான் அவள் மறுக்க மறுக்க அவன் ஆசை பெருகத் தொடங்கியது.

சேலையின் இடைவெளியில் சோலைக்குள் இருக்கும் ஒற்றைவழிப் பாதைபோல் தெரிந்த அவள் வயிற்றின்மீது அவன் ஐந்து விரல் குந்தி நிற்க, அவள் தன் கரத்தால் தள்ளிவிட அவன் கரம் அடி வயிறு தொட்டு விலகியது.

உள் எழுந்த சிலிர்ப்போடு மீண்டும் அவள் கேட்டாள்;

"என்ன அந்த சந்தேகம்?"

"கூந்தலில் இருந்து வரும் வாசனை இயற்கையா...?"

அவன் சொல்லி முடிக்கு முன்னர் அவள் குறுக்கே புகுந்து,

## ரசிகன் தரும் இலக்கிய நயம்

"செயற்கையா என்றுதானே? அந்த அரசனுக்குத்தான் பொழுது போகாத நேரத்தில் அப்படி ஒரு சந்தேகம் வந்தது என்றால் உங்களுக்கும் வேறு வேலையே கிடையாதோ?"

அவன் சிரித்தான். அவளை விழி குளிர இரசித்தபடி வினா ஒன்று தொடுத்தான்.

"உனக்கொன்று தெரியுமா?"

"என்ன அந்த ஒன்று?"

"அரசனும் ஆண்தான். ஆண்டியும் ஆண்தான். இருவருக்கும் பெண்ணை நாடுகின்ற மனம்தான். அவள் அழகையும் ஆழத்தையும் ஆராயும் குணம் ஆண்கள் யாவருக்கும் பொதுதான்."

அவள் வேல் விழியால் அவனை துளைத்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?"

"உங்கள் உடம்பெங்கும் மூளை. அப்பப்பா எத்தனை பெரிய அரிய தத்துவத்தை கண்டறிந்து சொல்லி விட்டீர்கள். எனக்குத்தான் கவலையாக இருக்கிறது."

கோதையவள் செய்வது கேலி என்று புரிந்தபோதும், புரியாதது போல அவன் கேட்டான்;

"குவளை மலர் விழிப் பெண்ணே உனக்கென்ன கவலையடி?"

"பட்டத்து ராணியாக நான் இருந்திருந்தால் அறிவுச் சிகரத்தில் ஏறி நிற்கும் உங்களுக்கு அள்ளித் தந்திருப்பேனே பரிசில்கள்."

அவள் சொல்ல, அவன் குறும்பாய் புன்னகைத்தான்.

"பட்டத்து ராணியாய் இல்லையென்று ஏன் கவலை? படைக்கலங்கள் பல கொண்ட மேனியிருக்க தேனீயாய் நான் மாற சொல்லிவிடு சம்மதம். பிறகென்ன பரிசில்கள் நான் பெறுவதற்கு குறைச்சலே இருக்காதே! தெரியாதா உனக்கு?"

என்று அவன் கேட்க, தாரகை தரை நோக்கி குனிந்து வெட்கப்பட்டுக் கொண்டது. கடைவிழியை மட்டும் அவன் மீது வீசிக்கொண்டது. விடவில்லை அந்த விஷமக்காரன்.

"பொன் பூவே பதில் என்ன? சம்மதமா?"

பகலிலும் நிலவு வருமா என்று பலர் வியக்கும் பாவையவள் இதழ் திறக்கவில்லை.

இனியிலைப் பொறுமை என்று கனிவிதழாள் அருகே நகர்ந்தான். கரம் விரித்து கட்டுடலை சிறைபிடித்தது.

சிறை என்றால் சில போதில் வதை இருக்கும்.

ஆனால் கரச் சிறைக்குள் வண்ண மயில் சிக்கியதால் வதையென்ற பேச்சுக்கே இடமில்லை. இனிய கதை ஒன்றுக்குத்தான் இடமுண்டு.

□□

இப்போதும் அந்தக் கதை நினைக்க களிப்புத்தான். என்றாலும் கதை தொடர முடியாமல் கடந்த சில தினங்களாக அவன் எங்கே போனான் என்று சோகத்தில் விம்மும் நெஞ்சு விசாரித்துக் கொண்டிருக்க,

தினம் அவன் முகம் கண்டு திருப்தியோடு மகிழ்ச்சி கொண்ட விழிகள், அவன் எங்கே இப்போ என்று கேட்டபடி கொட்டும் விழி நீர் வெள்ளமாகி, தலையணையை உடைத்து பஞ்சணையையும் மூழ்க வைக்கும் சோகத்தை யாரிடத்தில் சொல்லிவிட முடியும்?

தனிமையிலே அழுதாள். தேறுதல் தர எவருமின்றி அந்த குளிர்நிலவு கண்ணீர் மழைக்குள் காணாமல் போய்க் கொண்டிருந்தது.

அவள் தடுக்க நினைத்தாலும் விழி மறுத்து வற்றும்வரை மழை பொழிவேன் என்று அடம்பிடித்தது.

தடுத்தும் கேளாமல் வெள்ளமென நீர் சொரியும் விழிகள் மீது அவளுக்கு சினமும் வந்தது.

விழியே-விழியே! நீ தானே அவரை நான் காணவைத்தாய்?

விழியே-விழியே! நீ அன்றோ அந்த இதயம் கவர் கள்வன்மீது எனக்கு மையல்வர வழி திறந்தாய்?

ஏய்-விழியே! உனக்கு தினம் அவர் திருவுருவம் தீனியானபோது திருப்த்தி மிகக் கொண்டாய்.

வருந்து-நன்றாய் வருந்து! உன்னால் எனக்கு வந்துள்ள துன்பம் போலவே உனக்கும் வருவது எனக்குச் சம்மதம்தான்.

என்றுதான் விழிகளுக்கு சொல்லிக் கொண்டாள் அந்த ஏந்திழையாள்.

இதனைத்தான் திருவள்ளுவரும் 1176வது குறளிலே சொன்னார்.

**"ஓ.ஓ.இனிதே எமக்கிந் நோய்-**
**செய்தகண்**
**தா அம் இதன்பட் டது"** ■

## குறுக்கெழுத்துப் போட்டி இல—65

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 |
| | ■ | 5 | | | ■ | |
| 6 | | ■ | ■ | ■ | 7 | |
| | ■ | 8 | | | | |
| 9 | 10 | | | ■ | | ■ |
| ■ | | ■ | 11 | | | |
| 12 | | | | ■ | | ■ |

**இடமிருந்து வலம்**

1. இது எங்கும் நிறைந்திருக்கும்.
3. அரசியல் என்றால் இதுவும் இருக்கும்.
5. மூவேந்தர்களில் ஒருவர்.
6. இதை வதைப்பதை காந்தியும் கண்டித்தார்.
8. ஒரு மயிர் உதிர்ந்தாலும் இதன் உயிர் போய்விடும்.
9. மகாபாரதத்தில் வரும் முக்கிய பாத்திரத்தின் வசிப்பிடம்.
11. இது கண்ணைப் பறிக்கும்.
12. இது பார்க்காமல் சிலர் எந்தக் காரியமும் செய்ய மாட்டார்கள்.

**மேலிருந்து கீழ்**

1. மரடோனாவின் புகழோடு சம்பந்தப் பட்டது.
2. பகலுணவாய் இது இல்லாவிட்டால் சிலருக்குத் திருப்தியாக இருக்காது.
4. இவன் ஒரு இளங்கன்று.
7. புதிய அரசாங்கம் இதனை ஏற்படுத்துமா என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள்.
10. ஜனநாயகத்தில் இதற்கொரு முக்கிய பாத்திரம் இருக்கிறது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 10.09.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-65
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-63க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 ச | ன | ம் | ■ | 3 பி | தா |
| ரா | ம் | ■ | 4 வா | ழ் | த் | து |
| 5 த | சா | ப் | த | ம் | ■ | ■ |
| னை | ர | ■ | ம் | ■ | 6 பா | 7 கு |
| ■ | ம் | 8 சா | ■ | 9 பு | ■ | று |
| 10 சு | ■ | 11 ர | த் | தி | ன | ம் |
| 12 வை | த் | தி | ய | ர் | ■ | பு |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.63இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஏ.ராஜேஸ்வரி நிலாவெளி.
2. ஷாமிரா அன்வர் குருநாகல்.
3. எஸ்.செல்வகுமார் கண்டி.
4. எம்.அமானுல்லா மினுவாங்கொட.
5. ஜெல்ஸியா சலீம் இஹலகொட்டரமுல்ல.
6. து.பத்மினி மட்டக்களப்பு.
7. தௌபீக் இஸ்மாயில் மாவனல்லை.
8. எம்.ரம்ஸி குளியாப்பிட்டிய.
9. எம்.முகுந்தன் கொழும்பு-05.
10. விமலா கந்தசாமி பதுளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கு நடித்தால் பாட முடியாது. பாடினால் நடிக்க முடியாது என்று ஒரு நிலை வந்தால் எதை ஏற்றுக் கொள்வார்?

செல்வி.பௌசியா-காத்தான்குடி-06.

பாடுவதற்காக படிப்பையே நிறுத்தியவர். நடிப்பதற்காகவா நிறுத்தப் போகிறார்? மாட்டார்.

□□

சிந்தியா! உலகில் துப்பாக்கிகளே இல்லாமல் இருந்தால் எப்படியிருக்கும்?

இனிகலை முதீப்-கண்டி.

அப்போதும் ஆதிக்கப் புத்தியுள்ளவர்கள் சோர்ந்து போயிருக்கமாட்டார்கள். கத்தி கொண்டு மோதியிருப்பார்கள்.

□□

ஒரு மனிதன் தன் வாழ்வில் மறக்கக் கூடியதும், மறக்கவே கூடாததும் என்ன?

எஸ்.டி.நஸீம் முஹமட்-அக்குறணை.

மறக்கக்கூடியது-கூடா நட்பு. மறக்கக் கூடாதது-கூடவே வரும் நட்பின் செய் நன்றி.

□□

புதிய பிரதமர் எப்படி?

ஆர்.ரவிராஜ்-கொழும்பு-06.

பொட்டென்று பதில் சொல்லி ஐஸ் வைக்காமல் பொறுத்திருந்து பார்க்கலாமே.

□□

அடிக்கடி என் கனவில் மம்முட்டி வருகின்றார், என்ன செய்யலாம்?

நா.அகிலா-திருகோணமலை.

சொல்கிறேன் காதைத் தாருங்கள்; நலம் விசாரிக்கலாம்!

□□

வெங்கடபதி ராஜு, மனோஜ் பிரபாகர், ஸ்ரீகாந்த், ஆகியோர் தமிழர்கள் என்று என் நண்பன் கூறுவது உண்மையா?

ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

ஸ்ரீகாந்த் மட்டுமே தமிழ். ஆனால் அவர்தான் இந்திய அணியில் இல்லையே.

□□

உண்மையான காதலி எப்படி இருக்க வேண்டும்?

என்.முருகானந்தம்-இரத்தினபுரி.

காதலித்துக்கொண்டிருக்க வேண்டும். (தொட்டுக்கொள்ள ஊறுகாய் போல அவ்வப்போது ஊடல்...மற்றும்... என்று விலாவாரியாக சொல்ல வேண்டுமோ முருகானந்தம்?

□□

**பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி. பாதிப்பு எதில் அதிகம்?**

பிரசாந்த்துக்கு வில்லனாக நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். வாய்ப்பு பெற்றுத்தர முடியுமா? (யார் காதல் இளவரசன் என்று அப்போது புரியும்)

ஏ.எச்.ஏ.வஹ்ஹாப்-படல்கும்புற.

ஐயா இளவரசே, வாய்ப்போடு குதிரை வரும். கனவிலிரும். பிரசாந்த்தை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது.

□□

பரீட்சையில் தோல்வி-காதல் தோல்வி; எதில் பாதிப்பு அதிகம்?

எச்.எம்.எம்.மஸ்னவி-புத்தளம்.

நன்றாக படித்தவர்க்கு முன்னதில், நன்றாக 'சைட்' அடித்தவர்க்கு பின்னதில்! இதில் நீர் எந்த ரகம்?

□□

நன்மைக்காக ஒரு பொய் பேசலாம் என்கிறார்கள். உங்கள் கருத்து என்ன?

கே.ஜீவகுமாரி-கொம்மாதுறை.

திருக்குறள்கூட ஓ.கே சொன்ன விடயம் அது. ஆனாலும் யாருடைய-எவ்வாறான நன்மை என்பதைப் பொறுத்தும் தீர்மானிக்க வேண்டிய விசயம்.

□□

சதாம் உசேன் தற்போது என்ன செய்கிறார்?

அனிஸ்.எம்.வீ-முள்ளிப்பொத்தானை.

அவர் என்ன செய்கிறார் என்று கவனிக்கத்தான் அமெரிக்கா இருக்கிறதே. உங்களுக்கேன் அந்தக் கவலை. அமெரிக்கா ஆ...ஊ...என்று துள்ளாவிட்டால் சதாம் அமைதியாக இருப்பதாகத்தான் அர்த்தம்.

□□

தேர்தலில் யானைக்கு அடி சறுக்கி விட்டதாமே?

க.மதியழகன்-இந்தகல மேற்பிரிவு.

அப்படியா சங்கதி?! நீர் கேட்கும்வரை என் காதில் விழாத செய்தி இது.

□□

இலங்கையில் இன்று பேசப்படுபவர் யார்?

வி.தங்கேஸ்-நீர்கொழும்பு.

மிகக் கஷ்டமான இக் கேள்விக்கு மூளையைக் கசக்கி கண்ட விடை- புதிய பிரதமர்.

□□

சிந்தியா! அந்தக் காலத்து சாஜகான்-மும்தாஜ் இவர்களைப்போல இந்தக் காலத்தில் யாரை குறிப்பிடுவது?

எஸ்.தயானந்தன்-பேத்தாளை.

ஒருவர், இருவரல்ல உண்மைக் காதலர்கள் யாவரையுமே குறிப்பிடலாம். (செத்துப் போனால் தான் ஒப்பிடலாம் என்றில்லையே?)

□□

ராஜ ராஜ சோழன் மீண்டும் பிறந்தால் என்ன நடக்கும்?

கு.ராஜ்மோகன்-நுவரெலியா.

பழுதடைந்துள்ள தஞ்சைப் பெரிய கோவிலை பார்த்து வருத்தப்படுவது நிச்சயம் நடக்கும்.

□□

இலாகா இல்லாத அமைச்சர் என்றால் என்ன?

வே.யாழினி-குருநாகல்.

எந்த அமைச்சில் வேண்டுமானாலும் தலையிட முடியும். அம்மையாருக்கு உள்ள அமைச்சுப் பொறுப்பு அதிகாரம் இல்லாதது என்பது போல் நினைப்பது தவறு. அவர் நினைத்தால் எப்போதும்-எந்த அமைச்சிலும் தலையை நீட்டலாம்.

**இவ்வாரம் (04.09.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 44

**காலத்தின் குரல்:** ஒரு நாட்டின் அரசன் இராஜசூய யாகம் நடத்தி சக்கரவர்த்தி என்ற பட்டம் சூட்டிக்கொள்ளும்போது ஏனைய அரசர்களில் சிலருக்காவது பொறாமை ஏற்படுவது இயற்கையே. தங்கள் தகுதி, திறமை போன்றவற்றை மனதில் கொள்ளாமல் அப்பதவிக்கு ஆசைப்படுவோருமுண்டு. கர்ணனைப் பொறுத்தமட்டில் அவனுக்கு இந்தக் கனவு கிடையாது. வேறு எதைப்பற்றிக் கனவு காணலாம் என்று அவன் ஆராய்ந்து கொண்டிருக்கிறான்.

-காட்சி தொடக்கம்-

இந்திரப் பிரஸ்தம்-கர்ணனின் விடுதி-சகுனி பிரவேசம்.

**சகுனி:** கர்ணா! தனியாக என்ன ஆலோசனை யிலாழ்ந்திருக்கிறாய்?

**கர்ண:** வாருங்கள் மாமா! ஒரே குடும்பத்த வர்கள் ஒன்றாகக் கூடியுள்ள இடத்தில் எனக்கு என்ன வேலை இருக்கிறது?

**சகுனி:** நானும் அந்தக் குடும்பத்தில் ஒருவனல்ல. நானும் வெளி ஆள்தானே?

**கர்ண:** நான் குரு வம்சத்தவனல்ல. நான் தனியானவன். எத்தகைய குற்றம் புரிந்தமையினால் நான் இன்று எக் குடும்பத்தையும் சேர்ந்தவன் என்றல்லாத தண்டனைக்குள்ளானேனோ தெரிய வில்லை. மாமா! சிசுபாலன் சிரச்சேதம் செய்யப்பட்டதற்கு நான் வேதனைப் படுகிறேன். வீரர்கள் நிறைந்த அந்தப் பெரும் சபையில் ஒருவர்தானும் சிசுபாலன் வதையினை எதிர்த்து ஒருவார்த்தை தானும் பேசாதிருந்து விட்டனரே..?

**சகுனி:** ஆமாம்! நீயும் ஒரு வீரன்! நீகூட பேசாது அமர்ந்துவிட்டாயே! கர்ணா! அந்த மாயாவி கிருஷ்ணனின் செயல் களைக் கண்டிக்க எவருக்கும் திராணி யில்லை என்பதனாலேயே எல்லாரும் அமைதி காத்தனர். அந்த மாயாவியின் தந்திரோபாயங்களை முறியடிக்க மார்க்கம் என்ன என்று சிந்தித்துப்பார்.

துரியோதனன் வருகிறான்.

**சகுனி:** இதோ எனது அருமை மருமகன் துரியோதனனும் வந்துவிட்டான்.

**துரி:** மாமா! தங்களுடைய திட்டங்களுக் கெல்லாம் என்னைப் பகடைக்காயாக உருட்ட இனிமேல் இடம்தரமாட்டேன். உங்கள் திட்டங்கள் எல்லாமே எதிர் விளைவுகளையே தந்தன. யுதிஷ்டிரன் இன்று சக்கரவர்த்தியாக முடிசூடிக் கொண்டான். அவனுடைய மகிழ்ச்சியில் நாமும் பங்கேற்பதாகப் பாசாங்கு பண்ணிக்கொண்டிருக்கிறோம் மாமா! அவர்கள் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. அஸ்தினாபுரத்தின் மீதும் அவர்கள் கண் வைத்துள்ளனர்.

**கர்ண:** அஸ்தினாபுரியை அவர்கள் ஆக்கிர மிக்கக்கூடும் என்பதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

**துரி:** ஏன் அவ்வாறு கூறுகிறாய் நண்பனே? முடிசூடிக்கொண்டதும் அஸ்தினாபுரி என்றும் தங்களுக்கு தாயகமாக இருக்க வேண்டும் என்று ஆசிர்வதிக்கும்படி அப்பாவிடம் ஏன் கேட்கவேண்டும்...,

**சகுனி:** பாண்டவர்கள்பற்றி எனக்குத் துளிகூட கவலையில்லை. நீதான் உன் நாவை அடக்கிக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் மகிழ்ச்சியில் களிக்க சில நாட்கள் விட்டு விடுவோம். நீரின் மேல் மட்டம் சலனமின்றி இருக்கலாம். ஆனால் கீழே எத்தனையோ சுழிகள் தென்படும். நான் எல்லாவற்றையும் அவதானமாகக் கண் காணித்துக் கொண்டிருக்கிறேன். பொறுத்திருந்து பாருங்கள்.

-காட்சி மாற்றம்-

கிருபாச்சாரியார் விடுதி-கிருஷ்ணர் வருகை.

**கிருஷ்:** குலகுரு அவர்களே! துவாரகை திரும்புமுன் தங்களைக் காண வந்தேன்.

**கிருபா:** வாசுதேவகுமாரா! எனக்கு தங்களின் கட்டளை என்னவோ..?

**கிருஷ்:** கௌரவர்களின் குலகுருவாகிய தங்களுக்கு நான் கட்டளையிடலாகுமா?

▫▫▫

துரோணாச்சாரியார் விடுதி-துருபதனும் திஷ்டத் துய்மனும் வருகிறார்கள்.

**துரோ:** நண்பனே! வருக...! நலமாக உள்ளீர்களா?

**துரு:** நலமாகவுள்ளேன். காம்பிலிய நாடு திரும்புகிறேன். மகன் திஷ்டத்துய்மனை தங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க அழைத்து வந்துள்ளேன்.

**துரோ:** நீடூழி வாழ இறைவன் அருள் பாலிப்பான்.

**துரு:** வழமையான வாழ்த்துத்தானே அது! அவனுடைய வாழ்வின் இலட்சியம் ஈடேற வாழ்த்துங்கள் நண்பரே!

**துரோ:** ஓம குண்டத்தில் உதித்த உன் குமாரனின் இலட்சியம் ஈடேற வேறு எதுவும் குறுக்கிட முடியாதே! உனது இலட்சியம் ஈடேற வாழ்த்துகிறேன்... போதுமா?

கிருஷ்ணர் பிரவேசிக்கிறார்.

**கிருஷ்:** மகாராஜா! காம்பிலிய நாட்டுக்கு இன்று திரும்புகிறீர்களாம். தங்களை இங்கே கண்டதில் மகிழ்ச்சி! நானும் துவாரகை திரும்புகிறேன்.

**துருப:** திரௌபதியைப் பார்த்தீர்களா?

**கிருஷ்:** இன்னும் பார்க்கவில்லை. ஆச்சாரியாரிடம் விடைபெற வந்தேன்.

**துருப:** சரி நண்பனே! நாங்கள் விடை பெறுகிறோம்.

துருபதனும் திஷ்டத்துய்மனும் சென்ற பின்...

**கிருஷ்:** வணக்கம் குருதேவா..!

**துரோ:** வணக்கம். எப்போது புறப் படுகிறீர்கள்?

**கிருஷ்:** இன்றே புறப்படுகிறோம்.

**துரோ:** கோவர்த்தனா? எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை தாங்கள் தான் அறிவீர்கள். துரியோதனனின் பொறாமையும் வெறுப்புணர்ச்சியும் கங்காபுத்திரர் மற்றும் என்னையும் சங்கடமான நிலைக்குள் ஆழ்த்துவதுடன் சர்வ நாசத்துக்கும் அடிகோலப் போகிறது. கண்ணா! நீதான் இதிலிருந்து சகலரையும் காப்பாற்ற வேண்டும்.

**கிருஷ்:** இல்லை ஆச்சாரியார் அவர்களே! நீங்கள் மூவரும் கோள்களுக்குச் சமமான வர்கள். உங்களுக்குரிய பாதையைவிட்டு நீங்கள் மாற்றுப் பாதையில் சுழல தலைப்பட்டால் சர்வமும் நாசமாகிவிடும்.

**துரோ:** எனக்குப் புரியவில்லை கண்ணா!

**கிருஷ்:** மனிதன் உண்மையுடன் எப்போதும் இணையக்கடமைப் பட்டவன் என்பது தான் அர்த்தம் ஆச்சாரியார் அவர்களே!

▫▫▫

பீஷ்மரின் அரண்மனை- கிருஷ்ணனும் காணப்படுகிறார்.

**பீஷ்ம:** கிருஷ்ணா! அஸ்தினாபுரியை மட்டுமல்ல முழு உலகினையும் காக்கும் வல்லமை உன்னிடம் மட்டுமே உண்டு.

**கிருஷ்:** அவ்வாறல்ல பிதாமகரே! ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. கௌரவ குடும்பத்தின் மூத்தமகன் தாங்கள். ஆகவே தங்களின் பொறுப்பே அதிகம் உண்டு.

**பீஷ்ம:** துரியோதனனை திருப்திப்படுத்துவது தான் முடியாத காரியம்- மிகமிகக் கடினம்!

**கிருஷ்:** பிதாமகர் அவர்களே! தாங்கள் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை தங்க ளுடைய பொறுப்புக்களிலிருந்து தங்களை விடுவிக்கிறதா என்பதை எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்! எதிர்காலத்தில் தங்களை நோக்கி எழக்கூடிய வினாக்களுக்கு உரிய விடையினைத் தேடிக் கண்டுகொள்ளுங்கள் என்பதனை மட்டுமே இன்று என்னால் கூற முடியும்!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரரின் விடுதி

**திருத:** மதுசூதனா! என்னைப்போன்ற அந்தகனிடம் வினா எழுப்ப எவரால் முடியும்..?

**கிருஷ்:** மகாராஜா! கண் தெரியவில்லை என்ற போர்வையை நீக்கி உண்மையை உணருங்கள்! நாட்டைப் பிரித்த தங்களால் பலருடைய அபிலாசைகளையிட்டு எண்ணிப்பார்க்க முடியவில்லையே! துரியோதனன் மற்றும் பாண்டவர்களின் பரம்பரை வாரிசுகளின் நம்பிக்கைக்குப் பாத்திரவாளியாக இன்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறீர்கள். இனிமேல் நடைபெறவிருக்கும் சகலவற்றுக்கும் தாங்களே பொறுப்பாளி. நான் இன்று துவாரகை திரும்புகிறேன். இருப்பினும் உங்கள் எல்லோரைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருப்பேன்.

▫▫▫

பாண்டவர்களுடன் கிருஷ்ணன்.

**அர்ச:** கேசவா! துவாரகை திரும்ப ஏன் இத்தனை அவசரம்?

**கிருஷ்:** இன்றில்லாவிட்டால் நாளை... திரும்பித்தானே ஆகவேண்டும். இருப்பினும் என்றும் உன்னைப் பிரிந்திருக்கமாட்டேன்.

**யுதிஷ்:** அப்போ அர்ச்சுனனுக்காக எங்களை மறந்து விடுவீர்களாக்கும்...?

**கிருஷ்:** அர்ச்சுனனிடமிருந்து நீங்கள் எவரும் வேறுபட்டவர்களல்லவே! நீங்கள் ஐவரானாலும் ஐந்து உடல்களில் ஒருயிர் போன்றவர்கள்! வாழ்க்கை ஒரு சூதாட்டமல்ல. நீங்கள் ஐவரும் சேர்ந்தே ஒன்றாக இயங்குபவர்கள்.



**பலரா:** கிருஷ்ணா! இன்னும் சில நாட்கள் இருந்து குந்தி அத்தையின் அன்பில் ஊறித் திளைக்கலாமே?

**கிருஷ்:** அவசியம் இருப்பதனால்தான் புறப்படத் தீர்மானித்தேன் அண்ணா! அத்தையின் அன்பில் திளைக்க இம்முறை நாங்கள் வரவில்லையே? இராஜசூய யாகத்துக்காக வந்தோம். இதற்காக வந்தவர்களெல்லாம் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**யுதிஷ்:** பெரியப்பாவும் நாளை கிளம்புகிறார். துரியோதனனும் சகுனிமாமாவும் மட்டும் சில நாட்கள் தாமதிக்கப் போகிறார்கள். தம்பி துரியோதனன் எங்கள் அரண்மனையின் அழகில் கவரப்பட்டு விட்டான்.

**பீமன்:** சகுனிமாமாவை எது கவர்ந்துள்ளதோ?

**கிருஷ்:** இந்திரப் பிரஸ்தமே அவரைப் பிரமிப்பிலாழ்த்தியிருக்கக்கூடும்!

▫▫▫



துரியோதனனின் விடுதி- அமைதியிழந்து காணப்படுகிறான்.

**துரி:** மாமா! இனிமேலும் இங்கு தாமதித்து எத்தகைய அவமரியாதைக்குள் ஆளாகப் போகிறோம்.

**கர்:** மாமாவும் நீயும் தாமதிக்கலாம். நான் மகாராஜாவுடன் நாடு திரும்பப் போகிறேன்.

**துச்சா:** எனக்கும் இங்கு இருக்கப் பிடிக்க வில்லை!

**சகுனி:** நான் கிருஷ்ணன் வெளியேறும்வரை காத்திருக்கிறேன். அவனுடைய திட்டத்தை ஒட்டித்தான் நாம் நமது நடவடிக்கை களை வகுக்க வேண்டியுள்ளது. இந்த சகுனியைவிட அந்த மாயாவியை எடை போட எவனாலும் முடியாது!

▫▫▫

திரௌபதி அந்தப்புரம்-கிருஷ்ணன்,பலராமன் மற்றும் சுபத்திரை வருகின்றனர்.

**கிருஷ்:** திரௌபதி! சுபத்திரையிடம் பலமுறை கூறியிருக்கிறேன்- உன்னிடம் அவள் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என்று..... ஆனால் அவள் பயப்படுகிறாளே!

**சுபத்:** அண்ணா! பொய்பேச வேண்டாம். கடவுளுக்குப் பயந்து நடக்க வேண்டும்!

**கிருஷ்:** ஓஹோ! கடவுளுக்கா....? சரி திரௌபதி அன்பானவள்-அவளிடம் அச்சம் கொள்ளவே வேண்டாம்!

**சுபத்:** எனக்கு அவரிடம் எந்தப் பயமும் கிடையாது. தயவு செய்து தப்பபிப் பிராயம் ஏற்படுத்தாதீர்கள்!

**பலரா:** இவன் எப்போதும் இப்படித்தான். நந்தகோன் கிராமத்திலும் இவன் எல்லோரையும் கோள் மூட்டி விடுவான்.

**திரௌ:** அவரைப் பற்றி கவலைப்படாதே சுபத்ரா! அவரை எனக்கு நீண்ட நாட்களாகவே தெரியும். அண்ணா! இவளை நான் நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் உலகத்திலுள்ள ஏனையோரைப் போய்க் கவனியுங்கள்.

-காட்சி மாற்றம்-

**துரி:** வாசுதேவ கிருஷ்ணனும் போய்விட்டார். அப்பாவுடன் தாத்தாவும் போய்விட்டார். இன்னும் ஏன் தாமதம் மாமா?

**சகுனி:** பொறுத்திரு மகனே! இனிமேல் தான் எனது காரியங்கள் தொடங்கப் போகின்றன. யுதிஷ்டிர மாமன்னனுடன் சொக்கட்டான் ஆடப் போகிறேன்.

**துரி:** என்ன? சூது விளையாடவா தாமதிக்கிறீர்கள்?

**சகுனி:** எனது விளையாட்டினை கேவலமாகக் கூற வேண்டாம் மருமகனே! இதுதான் எனது போர்க்களத்தின் படைவீரர்கள். இந்த வீரர்களை வைத்து நான் எதிர் கொண்ட போர்க்களங்களில் எதிலுமே தோல்வி கண்டதில்லை என்பதை என்றும் மறந்துவிடாதே!

-காட்சி மாற்றம்-

இந்திரப் பிரஸ்தம்.

யுதிஷ்டிரனுடன் சகுனி சொக்கட்டான் ஆடுகிறான். சகுனி தனது காந்தார நாட்டையே பந்தயமாக வைக்க முயல, யுதிஷ்டிரர் அதனை ஏற்கவில்லை. இதனால் பொற்காசுகளை வைத்து ஆடி தோற்கிறான். யுதிஷ்டிரன் ஏழு போடும்படி கேட்க சகுனியின் பகடை ஐந்தாக விழுகிறது. சகுனியின் தோல்வி கண்டு துரியோதனன் கோபமடைகிறான்.

**சகுனி:** உண்மை வீரன் வெற்றியை ஏற்பது போல் தோல்வியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். துரியோதனன் குரு துரோணாச்சாரியாரிடம் இந்த உண்மையினை படிக்கவில்லைபோல் தெரிகிறது. யுதிஷ்டிர மாமன்னா! இராஜ சூய யாகத்தின்மூலம் விளையாட்டுக் களிலும் நீ மேலானவன் ஆகிவிட்டாய் என்றே தோன்றுகிறது.

பின்னணிப்பாடல்:

**சூதினில் சிறந்தவன் சகுனியே யானாலும்**
**ஆதியிலவனே தோல்வியை அணைத்தனன்.**
**போலியாய் வேடம் பூண்டவனாடிடும்**
**கோலமோ கண்டிலர் பாண்டவ ரைவரும்!**

-காட்சி மாற்றம்-

துரியோதனன் விடுதி-சகுனி வருகை.

**துரி:** வாருங்கள் மாமா! இருக்கையில் அமருங்கள்! மாமா! சக்கரவர்த்தி யுதிஷ்டிரருடன் சொக்கட்டான் ஆடி பெருமையாகத் தோற்றுவிட்டீர்கள்! உங்கள் படைவீரர்கள் உங்களைக் கைவிட்டு விட்டனர். உங்கள் வாழ்வின் இணையிலா ஆற்றல்-உங்கள் திட்டங்கள் யாவுமே சிதைந்துவிட்டனவோ...?

**சகுனி:** (பலமாகச் சிரித்த வண்ணம்) துரியோதனா! முதல் தோல்வியில்தான் எனது எதிர்காலத் திட்டமே அடங்கி யிருக்கிறது. எனது திட்டங்கள் உருப் பெற்று வரும் இவ்வேளையில் அமைதியாக இருந்துகவனி! நீ இடையில் புகுந்து என்னைக் குழப்பிவிடாதே! பாண்டவர்களின் அரண்மனை பல விசித்திரங்களைக் கொண்டது. அவற்றைச் சுற்றிப்பார்-போ!

-காட்சி மாற்றம்-

இந்திரப் பிரஸ்த மாளிகையை துரியோதனன் சுற்றிப் பார்க்கிறான். விந்தை அமைப்புகளை பார்த்து வியக்கிறான். போலியான அமைப்புகளை உண்மையெனக் கருதி ஏமாறுகிறான். நீரோடை என்று நினைப்பது உண்மை அல்ல என்று கருதி விடுகிறான். இதனால் உண்மையான நீர் நிலையினை போலி என்று எண்ணி காலை விட்டு நீரில் நனைந்து தடுமாறுகிறான்.

இந்தக் காட்சியை உப்பரிகையில் நின்று கண்ட திரௌபதி சிரிக்கிறாள்.

**திரௌ:** தந்தையைப் போல் தனையனும் கண் பார்வையற்றவன்போலும்..!

துரியோதனன் கோபமடைகிறான்.

-காட்சி மாற்றம்-

-அஸ்தினாபுரம்-

துரியோதனன் மல்யுத்த வீரர்களுடன் போரிடுகிறான். கர்ணன் வருகிறான்.

**கர்:** நண்பனே! உன்னை இம்சித்தவர்கள் யார்? என்னிடம் கூறமாட்டாயா..?

**துரி:** ஒரு பெண் பாம்பு என்னைத் தீண்டி விட்டது. விடம் என் உடம்பெங்கும் பரவி விட்டது. தாங்க முடியாத அவமானத்தால் தீய்ந்து கொண்டி ருக்கிறேன். அத்தீயிலேயே தீய்ந்து உயிரை விட்டுவிடவேண்டும் போலிருக்கிறது.

**கர்:** அந்த இந்திரனே உன்னை அவமதிக்கப் பயப்படுவானே! உனக்குத் தீங்கிழைத் தவர் யார்?

**துரி:** அந்த ஐவருக்கும் மனைவி திரௌபதி என்னை அவமதித்து விட்டாள். அவள் சுயம்வரத்தின்போது உன்னையும் அவமதித்தவள். அவளை பழிவாங்கியே தீருவேன்!

**கர்:** அவள் என்னை அவமதிக்கவில்லை நண்பா! அரசர்களுக்குரிய அவையில் தேரோட்டியின் மகனான எனக்கு என்ன வேலை என்ற உண்மையினை அவள் எனக்கு உணர்த்தினாள். என்னை ஈன்றவள் எவளோ அவள் என் முன்னே தோன்றி உண்மையினைக் கூறும்வரை நான் தேரோட்டி மகனேதான்! உன்னை அவள் அவமானப் படுத்தியமைக்காக நானே படை கொண்டு சென்று இந்திரப் பிரஸ்தத்தை நிர்மூலமாக்குகிறேன்.

**சகுனி:** (வந்துகொண்டே) -அங்க நாட்டு அதிபதியே! வீரன் என்றால் இரவு பகல் எல்லாம் படைக்கலன்களுடன் யுத்தத்துக்குத் தயாராக நிற்க வேண்டும் என்பது பொருளல்ல..! மூளையை விடச் சிறந்த ஆயுதம் வேறு இல்லை. மன்னர் திருதராட்டிரரின் தம்பி புதல்வர்கள் இராஜசூய யாகம் நடத்தியமையினால் அவர்களை அழைத்து கௌரவிக்க வேண்டியது அஸ்தினாபுரத்தின் கடமை! அங்கு யுதிஷ்டிரனுடன் சூதாடி வேண்டுமென்றே தோற்றேன். இங்கு அவர்கள் வரும்போது மீண்டும் ஒருமுறை ஆட அழைத்தால் அவர்கள் ஆட வரத்தான் வேண்டும். அப்போது நானே வெற்றியீட்டி பெரும் சாதனை படைப்பேன்!

**கர்:** நான் புறப்படுகிறேன்! எனது அகராதியில் சூழ்ச்சிக்கு அறிவாற்றல் என்ற அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை மாமா!

**சகுனி:** உனது நண்பன் ஒரு முட்டாள். உனக்கு அவன் கீழ்படிந்து நடக்கிறான் என்பதனால் பொறுத்துக் கொண்டி ருக்கிறேன். இவர்களைப் போன்ற வர்களை நீ விரும்பியதுபோல் பயன் படுத்தலாம். அதிருக்கட்டும்! இந்திரப் பிரஸ்தத்தில் நான் யுதிஷ்டிரனிடம் தோற்றுப் போனது இனிமேல் நான் பெறப்போகும் வெற்றிக்கு அடித்தளம். பகடை என்னுடைய போர் வீரர்கள். அவர்கள் என்னைக் கைவிடமாட்டார்கள் என்பதை மறவாதே!

**துரி:** மாமா! மீண்டும் உங்களுடன் சொக்கட்டானாடவர அவர்கள் முட்டாள்களல்ல...?

**சகுனி:** துரியோதனா! சத்திரிய தர்மப்படி ஒரு மன்னன் மற்றுமொரு மன்னனை சொக்கட்டானாட அழைத்தால் அவர்கள் மறுக்க முடியாது. இதே இடத்தில்தான் அவர்களுக்கு இந்திரப் பிரஸ்தம் பிரித்துக்கொடுக்கப்பட்டது. இதே இடத்திலேயே அவர்கள் தங்கள் நாட்டினை இழக்கப் போகிறார்கள். இதற்கான அழைப்பினை விடுக்கப் போகிறவர் உன் தந்தை!

**துரி:** என்னை அவமானப்படுத்திய திரௌபதி....!

**சகுனி:** தைரியமாயிரு! அதற்கும் வழி காண்போம்! உன் தந்தை உன்மீது வைத்திருக்கும் அன்பை ஆயுதமாகப் பயன்படுத்தி அவர்களை இங்கு வரவழைக்க ஏற்பாடு செய்! தாமதம் செய்யாமல் உடனே மகாராஜாவிடம் போவோம் வா!

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**சகுனி:** மகாராஜா! மற்றவர்களுடைய காலடி யின் ஓசையைக் கேட்டே வருபவர் யார் என்று கணித்து விடுகிறீர்கள். ஆனால் உங்கள் மகன் படும் வேதனையை உணரவில்லையே! நீங்கள் அவனுடைய தந்தை. இந்திரப் பிரஸ்தத்திலிருந்து திரும்பியதும் அவன் மிகவும் நொந்து போய் இருக்கிறான்.

**திருத:** ஆமாம்! அவன் இங்கு வரவேயில்லை. காந்தாரியும் வேதனைப்படுகிறாள்.

**சகுனி:** இந்திரப் பிரஸ்தம்தான் அவனுடைய வேதனைகளுக்கெல்லாம் காரணம்.

**திருத:** என்ன? அந்த நாட்டைப் பறித்து என் மகனுக்குக் கொடுக்க வேண்டும் என்கிறாயா? அது என்னால் முடியாது. அவர்கள் இப்பொழுது போதிய பலம் பெற்றுவிட்டார்கள்.

**சகுனி:** அது சரிதான். துன்பப்படும் என் தங்கையின் மகனுடைய சிந்தனையை வேறுபுறம் திசை திருப்ப வேண்டும். மகாராஜா அவனை அழைத்து நீங்களே அவனிடம் கேட்கலாமே!

துரியோதனன் வருகிறான்.

**திருத:** வா மகனே! ஆண்டவன் அருள் புரிவான்! இத்தனை நாட்கள் அப்பா வைப்பார்க்க வரவே இல்லையே! மாமா சகுனி உனக்கு உடல் நலமில்லை என்கிறார். அரண்மனை வைத்தியர் களைப் பார்க்கவில்லையா?

**துரி:** உடலில் இல்லை நோய் அப்பா! நான் அவமதிக்கப்பட்டேன்! அதுதான் என் வருத்தத்துக்குக் காரணம்.

**சகுனி:** அவ்வாறானால் உனக்குக் களிப்பூட்ட ஏதாவது செய்யலாமே? பாண்டவர்கள் இராஜசூய யாகம் நடத்தினார்கள். அவர்களை அஸ்தினாபுரிக்கு அழைத்து வரவேற்புபசாரம் நடத்தினால் என்ன மகாராஜா!

**துரி:** அப்படியே செய்யுங்கள் அப்பா!

**திருத:** உனக்கு மேலும் துயரளிக்கலாம் என்பதனால் நான் அதனை நினைக்க வில்லை. அவர்களை அழைப்பதன் மூலம் காண்டவ பிரஸ்தத்தை அவர் களுக்கு அளித்து அநீதி இழைக்கவில்லை என்பதை மக்கள் உணரலாம்.

**துரி:** அவர்களை அழையுங்கள் அப்பா! அவர்களுடன் சொக்கட்டான் ஆடுவதன் மூலம் என் மனம் ஆறுதலடையும்!

**சகுனி:** சூது விளையாட்டின் மூலம் மன ஆறுதல் பெற வாய்ப்புண்டு. அழைப் பினை அனுப்புங்கள் மகாராஜா!

**திருத:** ஏன்..! இந்திரப் பிரஸ்தத்தில் நீ கண்ட தோல்வியை ஈடு செய்யலாம் என்று எண்ணுகிறாய் போலும்!

(யாவரும் சிரிக்கின்றனர்)

**திருத:** சரி! விதுரரிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டு அழைப்பினை அனுப்பலாம்.

**துரி:** ஏன் அப்பா! நீங்கள் மூச்சு விடுவதற்கும் அவருடைய உத்தரவினையே எதிர் பார்க்கிறீர்களாக்கும். அப்பா அவர்களை அழைக்க உங்களுக்கு விருப்பமில்லை யானால் இந்திரப் பிரஸ்தம் மீது படையெடுக்க எனக்கு அனுமதி தாருங்கள்!

**சகுனி:** மருமகனே! எதற்காகக் கோபப் படுகிறாய்? மகாராஜா, பிரதம அமைச்சர் விதுரரிடம் ஆலோசனை கேட்பதில் தவறில்லையே! பாண்டவர்களுக்கு வர வேற்பளிக்க அவர் தடையாக இருக்க மாட்டார் அல்லவா?

பின்னணிப் பாடல்:

**அன்பு மகனின் அவலம் தனைத் தீர்க்க**
**அநீதியை அணைக்கத் துணிந்தனன் அரசன்**
**பண்பற்ற சகுனியின் பசப்பினில் மயங்கியே**
**பாண்டவர் வருகைக்கு பாதை அமைத்தனன்.**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.







வாய் போகிட்டாலும் வஞ்சகமில்லா கூட்டாளி. குளிக்கும்போதும் மனம் குளிர கூடியே குளிப்பு.




## நட்சத்திர நாயாருக்கு எக்கச்சக்க மரியாதை

அமெரிக்காவில்-ஹொலிவூட்டில் தாராரும் திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் [illegible] 'ஃபிரேசியர்' என்ற தொலைக்காட்சித் தொடரில் தோன்றும் 'எட்டி' என்ற நாய் [illegible]

[illegible]



## எந்தப் பெண்ணுக்கும் கிடைக்காத ஒன்று

[illegible]



அவளோ நடனமாது. அவனோ நகைச்சுவைக் கோமாளி. இருவரும் காதலித்தனர். கைபிடித்தனர். சிரிக்கவைத்து நடிப்பதே தொழில். அதனால் திருமணத்தின்போதும் வாழ்த்த வந்தவர்களை வயிறு குலுங்க வைக்கும் முயற்சி இது. இந்தத் திருமணத்தில் வயிற்றுக்கு நிறைவு தந்தது உணவு மட்டுமல்ல. சிரிப்பும் தான்.




போர்பஸ் கீட்டு என்ற தனவந்தர் தனது கனவை நனவாக்க 25 1/2 இலட்சம் டொலரை 10 வருடங்களாக செலவிட்டு வெற்றி கண்டுள்ளார். கடலில் மிதந்த [illegible] சிறு தீவுதான் அவருடைய கன[illegible] [illegible] இருந்து தனவான்[illegible] கிறதுதூறு அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட இத்தீவு 700 தொன் எடை கொண்டது. [illegible] அமைக்கப்பட்ட இத்தீவினை விரும்பியபோது [illegible] இடத்துக்கு கடலில் இழுத்துச் செல்ல மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இதில் அமைக்கப்[illegible]

[illegible] 1,500 போத்தல் [illegible]

## கப்பல் வடிவில் ஒரு கனவுத் தீவு

